தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:231 | 07-03-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

07.03.2026 மாசி 23
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.26

திதி:
இன்று இரவு 8.17 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 12.10 வரை சித்திரை பின்பு சுவாதி

யோகம் :
இன்று காலை 7.43 வரை விருத்தி பின்பு துருவம்.

கரணம்
இன்று காலை 7.37 வரை பவம் பின்பு இரவு 8.17 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.35 வரை சித்த யோகம் பின்பு பிற்பகல் 12.10 வரை யோகம் சரியில்லை பின்பு அமிர்த யோகம்

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 12.10 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# 'தமிழ்நாடு 2030' செயல் திட்டத்தின் 14 அம்சங்கள்

## முதல்வர் ஸ்டாலின் பட்டியல்





**சென்னை, மார்ச்.7:**

சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை:

"தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இன்றைய நிகழ்ச்சி போல என்றைக்கும் நடந்திருக்காது. கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் மட்டுமல்ல, எதிர்கால தமிழ்நாட்டையும் மனதில் வைத்து, இந்த "தமிழ்நாடு 2030 - கனவுகள் மெய்ப்படும்" நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளுக்கான என்னுடைய கனவுகளில் பெரும்பாலும் நிறைவேறிவிட்டது என்று இந்த நிகழ்ச்சி மூலமாக அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள் ஆட்சியில் செய்த திட்டங்களில் எந்த திட்டம் சிறப்பானது என்று என்னைக் கேட்டால், அனைத்துத் திட்டங்களும் சிறப்பானதுதான் என்று சொல்வேன்.

ஏனென்றால், ஒவ்வொரு திட்டத்தையும் தேவைக்கேற்ப மக்களுக்காக யோசித்து, திட்டம் தீட்டி, அவர்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறோம், அதில் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறோம் அதனால்தான், நான் அடிக்கடி சொல்வேன். நம்முடைய திட்டங்களால் பயனடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு ஒவ்வொரு தரப்புக்கும் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறோம்.

என்னுடைய அரசு செய்திருக்கும் சாதனைகளை நம்பி நான் உறுதியாக சொல்கிறேன். அடுத்து, அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். எங்களுடைய சாதனைகளின் அடுத்தகட்டமாக, திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும்! அதற்கான ட்ரெய்லர்தான் இந்த நிகழ்ச்சி!

அடுத்த 5 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும்; நாம் எந்த பாதையில் பயணம் செய்ய வேண்டும் என்று ஒரு ப்ளூ பிரின்ட்தயாரிக்க திட்டமிட்டோம். அப்போது எனக்கு அண்ணா சொன்னதுதான் நினைவுக்கு வந்தது.

"மக்களிடம் செல், மக்களுடன் வாழ், மக்களிடம் இருந்து கற்றுக்கொள்" எனும் அறிவுரையின் அடிப்படையில், தமிழ்நாட்டின் 1 கோடியே 80 லட்சம் குடும்பங்களிடம் நேரடியாக சென்று, அவர்களின் கனவுகளை, அவர்கள் தேவைகளை, அவர்கள் எதிர்பார்ப்புகளை கேட்டறிந்தோம். இதை எப்படி செய்திருக்கிறோம் என்பது பற்றி அமுதா ஐ.ஏ.எஸ்., சொன்னார்.

மக்கள் சொன்ன கருத்துகளை அடிப்படையாக வைத்து, அதில் முக்கியமானவற்றை எல்லாம் முன்னுரிமைப்படுத்தி, தமிழ்நாட்டின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கான எனது தொலைநோக்குப் பார்வை, அதாவது, "தமிழ்நாடு 2030" - 14 முக்கிய அம்சங்களை என் மக்களுக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், முக்கிய ஆளுமைகள், முக்கிய நாளிதழ்களின் பதிப்பாளர்கள், தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்கள், பத்திரிகை மற்றும் ஊடக நிறு வனங்களின் ஆசிரியர்கள், முக்கிய சமூக ஊடகவியலாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், முக்கிய திரையுலக ஆளுமைகள், முதன்மைக் கல்வியாளர்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், சாதனை இளைஞர்கள், காலநிலை வாகையர்கள் ஆகியோரும் பங்கேற்று தங்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

இதனை தொடர்ந்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:-

* தமிழ்நாட்டு மக்களுக்காக தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருப்பேன். இதுதான் என் வெற்றியின் ரகசியம்.

* அத்தனை திட்டங்களையும் நிறைவேற்றிக்காட்ட வேண்டும் என்ற கனவு இருந்தது.

* தி.மு.க. அரசின் அனைத்து திட்டங்களையும் சிறப்பான திட்டங்கள் என்று தான் கூறுவேன்.

* தி.மு.க. அரசின் திட்டங்களால் பலன் அடையாத குடும்பங்களே இல்லை என்ற அளவுக்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

* மக்களிடம் செல், மக்களிடம் வாழ், மக்களிடம் கற்றுக்கொள் என்ற அடிப்படையில் திட்டங்கள் கொண்டு வரப்பட்டது.

* சில திட்டங்களில் அரசியல், நிதி நெருக்கடி போன்ற முட்டுக்கட்டைகள்.

* ஒவ்வொரு மாவட்டங்களிலும் மன நல ஆலோசனை மையம் அமைக்கப்படும்.

* 2030-க்குள் கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் 5 லட்சம் வீடுகள், நகர்புறங்களில் 2 லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்

* நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற பாதிப்புகளை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிய சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

* 1.25 லட்சம் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்படும்.

* 2030-க்குள் 100 விழுக்காடு ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும்.

* 2030-க்குள் தமிழ்நாடு முழுவதும் 1000 மாதிரிப்பள்ளிகள் உருவாக்கப்படும்.

* நான் முதல்வன் 2.0 திட்டம் மூலம் கூடுதல் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

* 2030-க்குள் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை 90 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

* ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் AI ஆய்வகம் அமைக்கப்படும்.

* AI தொழில்நுட்பம் மூலம் சாலைகளில் விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* ஜவுளி, தோல், ஆடை, கணினி போன்ற தொழில் துறைகளில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

* அமைச்சர் மெய்யநாதன் குறிப்பிட்டதைபோல் தேவைப்படும் இடங்களில் சமூக நீதி விடுதிகள் அமைக்கப்படும்.

* 2030-ம் ஆண்டிற்குள் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

* நிகர சாகுபடி பரப்பு 50 லட்சம் ஏக்கராக உயர்த்தப்படும், நுண்ணுயிர் பாசனம் 21 லட்சம் ஹெக்டேருக்கு உயர்த்தப்படும்.

* 18 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் 5 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

* காந்தியடிகள் பெயரில் மாதிரி கிராமங்கள் திட்டம் உருவாக்கப்படும்.

* கிராமங்களை பொருளாதார வளர்ச்சி மையங்களாக மாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

* மாவட்டம் தோறும் நவீன தொழில் பூங்கா அமைக்கப்படும்.

* திடக்கழிவு மேலாண்மையில் புதிய மாற்றங்கள் செய்யப்படும்.

* அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

* 2030-க்குள் பால் உற்பத்தி 4.5 கோடி லிட்டராக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

* அடுத்ததும் திமுக அரசு தான், திராவிட மாடல் 2.0 அரசுக்கான டிரெய்லர் தான் இந்த நிகழ்ச்சி என்றார் முதல்வர் ஸ்டாலின்.

## காங்கோ சுரங்கத்தில் மீண்டும் விபத்து: 200 பேர் பலி



**கின்ஷாஷா, மார்ச் 7:**

கிழக்கு ஆப்ரிக்க நாடான காங்கோவில் ஏராளமான சுரங்கங்கல் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள சட்டவிரோத சுரங்கங்களால் அடிக்கடி விபத்துகள் நடப்பதும் வழக்கம்.

குறிப்பாக ருபாயா நகரில் எம்-23 கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டி கோல்டான் கனிம சுரங்கத்தில் கடந்த டிசம்பர் மாதம் மிகப்பெரிய விபத்து ஏற்பட்டது. இதில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் மீண்டும் அதே சுரங்கத்தில் விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சுரங்கத்திற்கு அருகே பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு தொழிலாளர்கள், வியாபாரிகள், விற்பனையாளர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பலர் சிக்கி கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் 200 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் நிலச்சரிவில் சிக்கி இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரேஷன் கடை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு






### தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, மார்ச் 7:**

ரேஷன் கடை ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கி, தமிழக அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தமிழக அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை வெளியிட்டுள்ள அந்த அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

1001 குடும்ப அட்டைகள் முதல் 1,500 குடும்ப அட்டைகள் உள்ள விற்பனையாளர்கள் ரூ.1,750, கட்டுனர்களுக்கு ரூ.1,250 நியாயவிலைக் கடை படி வழங்கப்படும். 1501 மற்றும் அதற்கு மேல் குடும்ப அட்டைகள் உள்ள விற்பனையாளர்கள் ரூ.2000, கட்டுனர்களுக்கு ரூ.1,500 நியாயவிலைக்கடை படி வழங்கப்படும். விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு முறையே ரூ.300 மருத்துவப்படி வழங்கப்படும்.

மலைவாழ் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு மலைவாழ்படி மாதம் ஒன்றுக்கு அடிப்படை ஊதியத்தில் 20 சதவீதம் அல்லது அதிகபட்சம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வழங்கப்படும். சராசரி கடல் மட்டத்தில் மலைவாழ்விட உயரம் 1000 மீட்டர் மேல் உள்ள பகுதிகளில் குளிர்காலபடி மாதம் ஒன்றுக்கு ரூ.400 வழங்கப்படும். இது குளிர் காலங்களில் மட்டும் வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு...

மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்துபடி தற்போது உள்ளவாறு ரூ.2,500 வழங்கப்படும். ஒரே பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு தேர்வு நிலையும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலையும் வழங்கி தலா ஒரு ஊதிய உயர்வு (3 சதவீதம்) வழங்கப்படும்.ஒரே பதவியில் 30 ஆண்டுகள் பணி முடித்த பணியாளர்களுக்கும் சிறப்பு ஊதிய உயர்வாக (3 சதவீதம்) ஒரு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நேபாள பாராளுமன்ற தேர்தல்: இளைஞர்கள் ஆதரவு பெற்ற ராஷ்ட்ரிய சுதந்திர கட்சி வெற்றி



**நேபாளம், மார்ச் 7:**

நேபாளத்தில் நேற்று பாராளுமன்ற தேர்தல் நடந்தது. கடந்த ஆண்டு ஜென் இசட் இளம் தலைமுறையினர் நடத்திய போராட்டத்தால் அப்போதைய பிரதமா கே.பி. சா்மா ஒலி பதவி விலகலுக்கு பிறகு அங்கு தேர்தல் நடந்தது.

நேபாள பாராளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையில் மொத்தம் 275 இடங்கள் உள்ளன.

இதில் 165 இடங்கள் நேரடித் தோதல் மூலமும் மீதமுள்ள 110 இடங்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் உறுப்பினாகள் தோ்ந்தெடுக்கப்பட உள்ளனா். பெரும்பான்மைக்கு 138 இடங்கள் தேவை.

தேர்தலில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி-ஐக்கிய மாாக்சிஸ்ட் லெனினிஸ்ட் சார்பில் கே.பி சர்மா ஒலியும், நேபாளி காங்கிரஸ் சாா்பில் அதன் தலைவா் ககன் தாபாவும் பிரதமா் வேட்பாளா்களாகக் களமிறங்கியுள்ளனா்.

அதேபோல் ராஷ்ட்ரீய சுதந்திர கட்சி சாா்பில் 35 வயதான காத்மாண்டு பெருநகர மேயா் பாலேந்திர ஷா பாலன் பிரதமா் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்.

நேற்று மாலை வாக்குப்பதிவு முடிந்ததும் ஓட்டு எண்ணிக்கை தொடங்கியது. வாக்கு சீட்டு எண்ணும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. இதில் 77 தொகுதிகளில் முன்னிலை நிலவரம் வெளியான நிலையில் ராஷ்ட்ரீய சுதந்திர கட்சி வெற்றி பெற்றது.

நேபாளி காங்கிரஸ் 9 தொகுதியிலும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி-ஐக்கிய மாா்க்சிஸ்ட் லெனினிஸ்ட் 5 தொகுதியிலும் முன்னிலை பெற்றிருந்தன. முன்னாள் பிரதமர் புஷ்ப கமல் பிரசண்டாவின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி 2 தொகுதியில் முன்னிலை பெற்றிருந்தது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கே.பி ஒலி அரசாங்கத்திற்கு எதிரான இளைஞர் போராட்டங்களின் போது ராஷ்ட்ரிய சுதந்திரக் கட்சி முக்கிய பங்காற்றியது. அக்கட்சிக்கு இளைஞர்கள் அமோக வெற்றி பெற்றது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-551

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே
அலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து



குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு, முறையல்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவரை விடக் கொடியவன்.

## சிந்திக்க ஒரு நொடி



வெற்றியும் தோல்வியும் இரு படிகள்தான்...
ஒன்றில் உன்னை உணர்ந்து கொள்வாய்
...
மற்றொரு படியில் உன்னை திருத்திக் கொள்வாய்....

**உஷா முத்துராமன்**

## காஞ்சி ஸ்ரீ வரதன் தவன உற்சவம்



காஞ்சிஸ்ரீ வரதன் தவன உற்சவம் இரண்டாம் நாள் மாலை ஸ்ரீ தாயார் ஸ்ரீ பெருமாள் புறப்பாடு.

## சனிப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடு




**கடலூர், மார்ச் 07:**
கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி ஈஸ்வரன் கோவில் தெரு, அருள்மிகு மீனாட்சி உடனமர் வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு நவக்கிரஹங்களுக்கு அபிஷேகம் பால், தயிர், மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர், தேன், புனித கலச நீர் ஊற்றி மகா அபிஷேகங்கள், வண்ண மலர்களால் அலங்கரித்து, ஹோமங்கள் வளர்த்து, பிரசாதம், நெய் வைத்தியங்களுடன், மகா தீபாரதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் நல்லெண்ணெய் தீபம், எள்ளு தீபம் ஏற்றி சனீஸ்வர பகவானை வேண்டி அருள் பெற்றனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் விருப்ப மனு



திமுக சார்பில் போடி தொகுதியில் போட்டியிடுவதற்காக ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் விருப்ப மனு அளிக்கப்பட்டுள்ளது.

## முத்துமாரியம்மன் கோவில் மாசி தேர்த்திருவிழா



முத்துமாரியம்மன் கோவில் மாசி பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேர்த்திருவிழா வரும் மார்ச் 9, 2026 (திங்கட்கிழமை) அன்று அதி விமர்சையாக நடைபெற உள்ளது

## பெண்ணாடம் பிரளயகாலேஸ்வரர் கோவிலில் தேர்த் திருவிழா

**கடலூர், மார்ச்.07:**
பெண்ணாடம் அழகிய காதலி அம்மன் உடனுறை பிரளயகாலேஸ்வரர் கோவில் மாசி மாதம் முதற்கட்டமாக தேர் பெருவிழா அமைச்சர் பங்கேற்பு.

பெண்ணாடம் அழகிய காதலி அம்மன் உடனுறை பிரளயகாலேஸ்வரர் கோயிலில் மாசிமகத் தேரோட்டம் நடைபெற்றது.

விழாவில் சுவாமி மற்றும் அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் தேரில் எழுந்தருளினர். மங்கள வாத்தியங்கள் முழங்க வாணவேடிக்கையுடன் தேரோட்டம் நடந்தது.

தேரோடாடத்தை மாண்புமிகு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்தார்.

ராஜகோபுரத்தில் இருந்து புறப்பட்ட தேர் பெண்ணாடம் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து மீண்டும் கோயிலை



அடைந்தது. திரளான பக்தர்கள் வடம் பிடித்தனர்.

வீடுகளின் முன் பக்தர்கள் சிறப்பு அர்ச்சனை செய்து வழிபட்டனர். சுவாமி அம்பாளை எழுந்தருளச் செய்து சிறப்பு மகா தீபாரதனை நடந்தது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் மகாதேவி, தக்கார் தமிழ்ச்செல்வி, மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.

## ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் தெப்பல் திருவிழா



**கிருஷ்ணகிரி, மார்ச் 07:**
கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் ஆலயத்தில் தெப்பல் உற்சவம் மின்விளக்குகளால் அலங்கரித்து, வானவேடிக்கையுடன், மங்கள வாத்தியங்களுடன் தெப்பக்குளத்தில் தெப்பல் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் பணிக்கான நியமனம் செய்யப்பட்டுள்ள தொடர்பு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம்




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 பணிக்கான நியமனம் செய்யப்பட்டுள்ள தொடர்பு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் அவர்கள் இ.ஆ. ப. அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அதிகேசவர் தேவானா உற்சவம்



சென்னை மயிலாப்பூரில் நேற்று அதிகேசவர் தேவானா உற்சவம் நடந்தது.

## இந்திய அளவிலான ஆணழகன் போட்டியில் இரண்டாம் பரிசை வென்று சாதனை



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி யை சேர்ந்த நகராட்சி பணியாளர் கிஷோர், சென்னையில் நடைபெற்ற இந்திய அளவிலான ஆணழகன் போட்டியில் இரண்டாம் பரிசை வென்று சாதனை படைத்துள்ளார்.

## நல்லூர் ஸ்ரீ சுந்தரவரதராஜப் பெருமாள் கோவிலில் தன்வந்திரி பகவானுக்கு ஹோம பூஜைகள்..!

**வந்தவாசி, மார்ச் 07:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நல்லூர் ஸ்ரீ சுந்தரவரதராஜப் பெருமாள் கோவிலில் உள்ள ஸ்ரீதன்வந்திரி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. முன்னதாக, மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

மேலும் திருமணத் தடை, குழந்தை வரம் வேண்டி துலாபாரம் வைபவம் உள்ளிட்டவைகள் நடைபெற்றது.



இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

பங்கேற்ற அனைவருக்கும் அர்ச்சகர் ராஜன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## மாசி மாதம் சங்கடஹர சதுர்த்தி பூஜை

**திருவண்ணாமலை, மார்ச் 07:**
திருவண்ணாமலை சன்னதி தெருவில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ வல்லப விநாயகருக்கு மாசி மாதம் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சுவாமிநாதன் குருக்கள் அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,பன்னீர், சந்தனம், இளநீர், தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்கள் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம், நெய்வேதியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது .

மற்றும் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடை பெற்றது.

ஏராளமான பக்தர்கள்



ஸ்ரீவல்லப விநாயரையும், சனீஸ்வர பகவானையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ரேஷன் கடை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு




தமிழகத்தில் ரேஷன் கடை ஊழியர்களில் விற்பனையாளர்களுக்கு ரூ.9,990 முதல் ரூ.39,900 வரை ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டுனர்களுக்கு ரூ.9,000 முதல் ரூ.35,000 புதிய காலமுறை ஊதியம் வழங்கபட இருப்பதாக அரசாணையில் கூறப்பட்டுள்ளது.




# இவர்கள் கூறுவதென்ன?

## திருச்சி சிவா, அன்புமணியின் சொத்துகள் எவ்வளவு..? - பிரமாண பத்திரம் தாக்கல்



**சென்னை, மார்ச் 7:**

மாநிலங்களவை எம்.பி. தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ள தி.மு.க., அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க. வேட்பாளர்கள் தேர்தல் பிரமாண பத்திரத்தில் தங்களது சொத்து விவரங் களை அளித்துள்ளனர்.

திருச்சிசிவா, தனதுபிரமாணபத்திரத்தில்கையிருப்பில்ரூ.6 லட்சம் இருப்பதாக தெரிவித்துள்ளார். அசையும் சொத்துகளாக அவரது பெயரில் 2 கோடியே 18 லட்சத்து 53 ஆயிரத்து 441 ரூபாயும், அவரது குடும்பத்தினர் பெயரில் 72 லட்சத்து 75 ஆயிரத்து 663 ரூபாயும் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதில் 224 கிராம் தங்க நகைகளும் அடங்கும். மேலும், அவரது பெயரில் ரூ.3 கோடியே 86 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பி லும், மனைவி பெயரில் ரூ.73 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலும், குடும்பத்தினர் பெயரில் ரூ.23 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலும் அசையா சொத்துகள் இருப்பதாக கூறியுள்ளார்.

கான்ஸ்டன்டைன்ரவீந்திரன்:பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் தன்னிடம் கையிருப்பாக ரூ.90 ஆயிரம், மனைவி பெயரில் ரூ.50 ஆயிரம், மகன் பெயரில் ரூ.60 ஆயிரம், மகள் பெயரில் ரூ.65 ஆயிரம் இருப்பதாக கூறி உள்ளார். அசையும் சொத்துகளாக தனது பெயரில் ரூ.22 லட்சத்து 75 ஆயிரத்து 796-ம், மனைவி பெயரில் ரூ.1 கோடியே 38 லட்சத்து 35 ஆயிரம், மகன் பெயரில் ரூ.21 லட்சத்து 35 ஆயிரம், மகள் பெயரில் ரூ.1 கோடியே 20 லட்சத்து 75 ஆயிரம் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதில் 180 பவுன் தங்க நகைகளும் அடங்கும். தனது பெயரில் ரூ.3 கோடியே 80 லட்சம் மதிப்பிலான அசையா சொத்துகளும், மனைவி பெயரில் ரூ.1 கோடியே 43 லட்சம் மதிப்பிலான அசையா சொத்துகளும் இருப்பதாக கூறி உள்ளார்.

அன்புமணி ராமதாஸ்: டாக்டர் அன்புமணி ராமதாஸ் பெயரில் அசையும் சொத்துகளான வங்கி கணக்கு, முதலீடு, ஆபரணங்கள், வாகனங்கள் என ரூ.1 கோடியே 52 லட்சத்து 60 ஆயிரத்து 860-ம், மனைவி சவுமியா பெயரில் ரூ.16 கோடியே 85 லட்சத்து 28 ஆயிரத்து 417-ம், அவரை சார்ந்தவரின் பெயரில் ரூ.93 லட்சத்து 82 ஆயிரத்து 144-ம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிலம் உள்ளிட்ட அசையா சொத்துகளாக அன்புமணி ராமதாஸ் பெயரில் ரூ.6 லட்சத்து 85 ஆயிரமும், மனைவி பெயரில் ரூ.48 கோடியே 79 லட்சத்து ஆயிரத்து 486-ம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாநிலங்களவை தேர்தல்: அன்புமணிக்கு சிக்கல் வருமா?; ராமதாசின் உதவியாளர் மனு தாக்கல்



சட்டசபை தேர்தலில் பாமக யாருடன் கூட்டணி அமைப்பது என்பதில் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ், அவரது மகன் டாக்டர் அன்புமணி இடையே மோதல் போக்கு ஏற்பட்டது.

கட்சி இரண்டாக உடைந்த நிலையில், பாமகவும், கட்சியின் சின்னமான மாம்பழமும் அன்புமணி வசம் உள்ளது. இது தொடர்பாக, தேர்தல் ஆணையத்தின் மீது டாக்டர் ராமதாஸ் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த நிலையில், சட்டசபை தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் பாமக இணைந்தது. அக்கட்சியின் தலைவர் டாக்டர் அன்புமணிக்கு ஒரு மாநிலங்களவை தொகுதியும் ஒதுக்கப்பட்ட நிலையில், இன்று அவர் வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் வேட்புமனு தாக்கல் செய்த சில மணி நேரங்களில், பாமக நிறுவனர் டாக்டர் ராமதாசின் உதவியாளர் சாமிநாதன் என்பர் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

தற்போது, டாக்டர் ராமதாஸ் ஆதரவு எம்.எல்.ஏ.க்களாக ஜி.கே.மணி, அருள் ஆகியோர் உள்ளனர். ஆனால், மாநிலங்களவை தேர்தலில் ஒருவர் மனுத்தாக்கல் செய்கிறார் என்றால், 10 எம்.எல்.ஏ.க்கள் முன்மொழிய வேண்டும்.

அந்த வகையில், டாக்டர் அன்புமணிக்கு 3 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். மேலும், அதிமுக கூட்டணியில் அவர் இருப்பதால், அக்கட்சி உறுப்பினர்களும் 7 பேர் முன்மொழிந்தால் போதுமானது. ஆனால், டாக்டர் ராமதாஸ் உதவியாளர் சாமிநாதனுக்கு 2 எம்.எல்.ஏ.க்களே முன்மொழிவார்கள் என்பதால், நாளை வேட்புமனுக்கள் பரிசீலனையின்போது, அவரது மனு தள்ளுபடி செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

அதுவும் சுயேச்சையாக அவர் வேட்புமனு தாக்கல் செய்திருப்பதால், அன்புமணிக்கு எந்தவித சிக்கலும் ஏற்படாது என தெரிகிறது.

# 26 கட்சிகளுடன் மெகா கூட்டணி: தி.மு.க. கூட்டணியில் தொகுதிகள் பங்கீடு உத்தேச பட்டியல்



தமிழக சட்டசபை தேர்தல் வரலாற்றிலேயே எந்தத் தேர்தலிலும் இல்லாத வகையில் மெகா கூட்டணியை ஆளுங்கட்சியான தி.மு.க. அமைத்துள்ளது. இந்தக் கூட்டணியில் 26 கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அதாவது, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, தே.மு.தி.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மக்கள் நீதி மய்யம், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, ஆம் ஆத்மி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, முக்குலத்தோர் புலிப்படை, சமத்துவ மக்கள் கழகம், மூவேந்தர் முன்னேற்ற கழகம், கொங்கு இளைஞர் பேரவை, வல்லரசு பார்வர்டு பிளாக், ஆதி தமிழர் பேரவை, தமிழ் புலிகள் கட்சி, ஆதி தமிழர் கட்சி, புதிய திராவிடர் கழகம், தமிழர் தேசம் கட்சி, அகில இந்திய பசும்பொன் முன்னேற்றக் கழகம், திராவிட தமிழர் கட்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன.

உத்தேச தொகுதிகள் பட்டியல்

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள 26 கட்சிகளில், 20 கட்சிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என தெரிகிறது.

அந்த வகையில், தி.மு.க. 152 தொகுதிகளில் போட்டியிடுவதுடன் கூட்டணி கட்சிகளுக்கு 82 தொகுதிகளை ஒதுக்கும் என்று கூறப்படுகிறது. இதில், பல கட்சிகள் தி.மு.க.வின் சின்னமான உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடுமாம்.

தி.மு.க. கூட்டணியில் உத்தேச தொகுதிகள் பட்டியல் வருமாறு:-

தி.மு.க. - 152
காங்கிரஸ் - 28
தே.மு.தி.க. - 10
வி.சி.க. - 8
மா.கம்யூ - 6
இ.கம்யூ - 6
மதிமுக - 6
தமிழக வாழ்வுரிமை கட்சி - 2
கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி - 2
இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 2
மனிதநேய மக்கள் கட்சி - 2
மனிதநேய ஜனநாயக கட்சி - 1
எஸ்.டி.பி.ஐ. - 1
முக்குலத்தோர் புலிப்படை - 1
கொங்கு இளைஞர் பேரவை - 1
தமிழர் தேசம் கட்சி - 1
அனைத்திந்திய பார்வர்ட் பிளாக் - 1
முக்குலத்தோர் முன்னேற்ற கழகம் - 1
ஆதி தமிழர் பேரவை - 1
மக்கள் விடுதலை கட்சி - 1
கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் - 1

# பாமகவிற்கான தொகுதிகளை ஒதுக்குவதில் தாமதம்

தமிழக சட்டசபை தேர்தல் நெருங்குவதை முன்னிட்டு அரசியல் கட்சிகள் கூட்டணியை இறுதி செய்து தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. அ.தி.மு.க. அங்கம் வகித்துள்ள தேசிய ஜனநாயக கூட்டணியிலும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இதற்கிடையே அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 2-ம் தேதி திடீரென டெல்லி சென்றார். அங்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பில் தமிழகத்தின் தேர்தல் அரசியல் பற்றி அவர்கள் விரிவாக விவாதித்தனர். அதிமுக கூட்டணியில் தொகுதி பங்கீடு விவரங்களை எடப்பாடி பழனிசாமி அமித்ஷாவிடம் தெரிவித்திருக்கிறார்.

தமிழக பா.ஜனதா நிர்வாகிகள் தன்னிடம் தந்த தொகுதி பட்டியலில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். கடந்த தேர்தலில் செய்யப்பட்ட தொகுதி பங்கீடு விவரங்களையும், தற்போது செய்யப்பட்டு இருக்கும் பங்கீடு விவரங்களையும் அமித்ஷா ஒப்பிட்டுப் பார்த்து பா.ஜனதாவுக்கான தொகுதிகளை இறுதி செய்ததாக கூறப்படுகிறது. அதுபோல பா.ம.க., அ.ம.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் கேட்கும் தொகுதிகளை ஆராய்ந்து அதில் சிறு மாற்றங்களையும் அமித்ஷா செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், அதிமுக - பாஜக தொகுதி பங்கீடு இறுதியாகாததால் பாமகவிற்கான தொகுதிகளை ஒதுக்குவதில் தாமதம் எற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தாங்கள் விரும்பும் 30 தொகுதிகள் அடங்கிய விருப்ப பட்டியலை எடப்பாடி பழனிசாமியிடம் அன்புமணி தரப்பு வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

சேலம் மற்றும் தர்மபுரியில் தலா 2 தொகுதிகளை பாமகவிற்கு ஒதுக்க அன்புமணி வலியுறுத்தி உள்ளதாகவும், பாமகவினர் எம்.எல்.ஏ.க்களாக உள்ள மயிலம் மற்றும் மேட்டூர் தொகுதிகளை அதிமுக கேட்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் தொகுதிபங்கீடுபேச்சுவார்த்தையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

# நமுத்து போன விஜய்யின் ‘பொலிட்டிக்கல் பாம்’



தவெகவுடன் கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு வழங்கப்படும் என அக்கட்சி தலைவர் விஜய் வீசிய ‘பொலிட்டிக்கல் பாம்’ நமுத்து போய்விட்டதாக விமர்சனங்கள் கிளம்பியிருக்கின்றன.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு அக்டோபர் 27, 2024 அன்று விக்கிரவாண்டியில் நடைபெற்றது. அதில் விஜய், கொள்கை எதிரி மற்றும் அரசியல் எதிரி யார் என்பதை குறிப்பிட்டார். அப்போது, “தவெகவுடன் கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு வழங்கப்படும்” என்று அறிவித்தார். தமிழக அரசியலில் இது ஒரு புதிய முன்னெடுப்பாகப் பார்க்கப்பட்டது. தவெக-வினர் அதை ‘பொலிட்டிக்கல் பாம்’ என்றெல்லாம் கொண்டாடினர்.

ஏனெனில் பொதுவாகப் பெரிய கட்சிகள் கூட்டணியை ஏற்றுக் கொண்டாலும், ஆட்சியில் பங்கு தர முன்வருவதில்லை. ஆனால், விஜய் வீசிய அந்த பாம் தற்போது நமுத்து போய் விட்டதாக விமர்சனம் கிளம்பியிருக்கிறது.

# தேமுதிகவைவிட தொகுதிகள் குறைவா?: திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி அதிருப்தி



சட்டசபை தேர்தலில் திமுக தலைமையிலான பிரமாண்ட கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இடம்பெற்றுள்ளது. கூட்டணியில் 26 கட்சிகள் இடம்பெற்றிருந்தாலும், திமுகவுக்கு அடுத்தபடியாக பெரிய கட்சி நாங்கள் தான் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் கூறிவருகிறார்கள்.

தேசிய கட்சியான காங்கிரசும் கூட்டணியில் இடம்பெற்றிருந்தாலும், வாக்கு வங்கியை பொறுத்தவரை அவர்களைவிட நாங்கள் தான் அதிகம் வைத்திருக்கிறோம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் மார்தட்டி வருகின்றனர்.

ராஜ்ய சபா சீட் வழங்கியதால் அதிருப்தி

தமிழகம் முழுவதும், கட்சி பரந்து.. விரிந்து.. வளர்ந்த நிலையில், இந்த முறை இரட்டை இலக்க தொகுதிகள் வேண்டும் என்று திமுக கூட்டணியில் ஆரம்பம் முதலே விடுதலை சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தி வருகிறது. ஆனால், அந்த கூட்டணியில் உள்ள காங்கிரஸ், தேமுதிக ஆகிய கட்சிகளுக்கு திமுக தலைமை ராஜ்ய சபா சீட் வழங்கியது, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைமையை அதிருப்தி அடைய செய்தது.

கோபத்தில் வி.சி.க.வினர்

இந்த நிலையில், தற்போது 8 தொகுதிகள் மட்டுமே விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்க முடியும் என்று திமுக தலைமை கூறிவிட்டதாம். அதே நேரத்தில், தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட இருக்கும் தகவலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகளுக்கு தெரிந்துவிட்டதாம். இதனால், அவர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்களாம்.

“எங்களைவிட வாக்கு வங்கியை குறைவாக வைத்துள்ள கட்சிக்கு ராஜ்ய சபா சீட், இரட்டை இலக்க தொகுதிகள் வழங்குவதை ஏற்க முடியாது.

எங்களுக்கு ராஜ்ய சபா சீட்தான் தரவில்லை. சட்டமன்ற தொகுதிகளையாவது அவர்களை (தேமுதிக)விட அதிகம் தாருங்கள்” என்று திமுக தலைமையிடம் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

ஒற்றை தொகுதியை ஏற்கக்கூடாது

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவனிடமும் அக்கட்சி நிர்வாகிகள், ஒற்றை இலக்க தொகுதிகள் தந்தால் ஏற்கக்கூடாது என்று தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

# மாநிலங்களவை தேர்தல்: அன்புமணி வேட்புமனுவை ஏற்கக்கூடாது என ராமதாஸ் தரப்பு எதிர்ப்பு



தமிழகத்தில் 6 மாநிலங்களவை எம்.பி. பதவியிடங்கள் ஏப்ரல் 2-ந்தேதி காலியாகின்றன. இந்த பதவியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், வேட்பு மனு தாக்கல் பிப்ரவரி 26-ந்தேதி தொடங்கியது. நேற்று நிறைவடைந்தது.

தி.மு.க. சார்பில் திருச்சி சிவா எம்.பி., கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் மற்றும் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக், தே.மு.தி.க. சார்பில் எல்.கே.சுதீஷ் ஆகியோர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தனர். அ.தி.மு.க. சார்பில் தம்பிதுரை எம்.பி., மற்றொரு இடத்திற்கு பாமக தலைவர் அன்புமணி ஆகியோர் மனுதாக்கல் செய்தனர்.

இந்த நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடந்து வருகிறது. பாமக நிறுவனர் ராமதாசின் உதவியாளர் சுவாமிநாதன் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தார். எம்.எல்.ஏ.க்கள் முன்மொழிவு இல்லாததால் சுவாமிநாதனின் மனு இன்று தள்ளுபடி செய்யப்படும். இதற்கிடையே அன்புமணி வேட்புமனுவை ஏற்றுக்கொள்ள கூடாது என ராமதாஸ் தரப்பு வேட்பாளர் சுவாமிநாதன் மற்றும் அவரது வழக்கறிஞர் தரப்பு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இருப்பினும் தேர்தல் அதிகாரிகள் அன்புமணியின் வேட்புமனு ஏற்கப்படுவதாக அறிவித்தனர். மேலும் தம்பிதுரையின் வேட்புமனுவும் ஏற்கப்பட்டுள்ளது.

# திமுக சார்பில் போடி தொகுதியில் போட்டியிட ஓ.பன்னீர்செல்வம் விருப்பமனு



சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த மாதம் (பிப்ரவரி) 20-ந்தேதி முதல் விருப்ப மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. தற்போதைய அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட விருப்ப மனுக்களை அளித்து வருகிறார்கள்.

அதேபோன்று தி.மு.க. நிர்வாகிகள் பலரும் ஆர்வத்துடன் விருப்ப மனுக்களை வழங்கி வருகிறார்கள். தி.மு.க.வில் விருப்ப மனு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியுடன் நிறைவடைகிறது.

எனவே அண்ணா அறிவாலயத்தில் நேற்ற வழக்கத்தை விட கூட்டம் அலைமோதுகிறது.

இந்த நிலையில், கம்பம், போடி, ஆண்டிப்பட்டி ஆகிய 3 தொகுதிகளில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் போட்டியிட வேண்டும் என முன்னாள் எம்.பி. ஓ.பி.ரவீந்திரநாத் விருப்ப மனு அளித்துள்ளார். மேலும் ஓ.பன்னீர்செல்வத்துக்காக போடி தொகுதியிலும், தனக்காக ஆண்டிப்பட்டி மற்றும் போடி தொகுதியிலும் போட்டியிட வாய்ப்பு கேட்டு ரவீந்திரநாத் விருப்ப மனு வழங்கியுள்ளார்.

## ஏழுமலையான் கோயிலில் மார்ச் 17-ல் ஆழ்வார் திருமஞ்சனம்

**திருமலை, மார்ச் 7:**

தெலுங்கு வருடப் பிறப்பான உகாதி பண்டிகை வரும் 19ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி வரும் 17ம் தேதி ஏழுமலையான் கோயிலில் ஆகம விதிகளின்படி கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற உள்ளது. அன்று காலை, ஏழுமலையான் கோயில் முழுவதும் வாசனை திரவியங்களால் சுத்தம் செய்யப்பட உள்ளது. இதன் பின்னரே பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட உள்ளனர். 17ம் தேதி கோயில் ஆழ்வார் திருமஞ்சனத்தை முன்னிட்டும் 19ம் தேதி உகாதி பண்டிகையை முன்னிட்டும் 16 மற்றும் 18ம் தேதிகளில் விஐபி பிரேக் தரிசன கடிதங்கள் பெறப்படமாட்டாது. மேலும், சில ஆர்ஜித சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளது என தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

## சனிப்பெயர்ச்சி விழா.. சோழவந்தான் சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை

**சோழவந்தான், மார்ச் 7:**

சோழவந்தான் வைகை நதி கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கி சுயம்புவாக சனீஸ்வர பகவான் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துவருகிறார். இங்கு சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெறும். இவ்விழாவில் தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் வருகை புரிந்து தங்களது பெயர் ராசி, நட்சத்திரத்திற்கு அர்ச்சனை செய்து வழிபடுவார்கள். அவ்வகையில் இந்த ஆண்டு சனிப்பெயர்ச்சி விழா இன்று நடைபெறுகிறது. வாக்கிய பஞ்சாங்கப்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.24 மணி அளவில் பூரட்டாதி மூன்றாம் பாதம் கும்பராசியிலிருந்து மீன ராசிக்கு சனீஸ்வர பகவான் பிரவேசித்தார். இதை முன்னிட்டு சோழவந்தான் சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

விழாவை முன்னிட்டு சனிப் பெயர்ச்சி பரிகார யாகம் இரண்டு நாட்கள் நடைபெற்றது. நேற்று வியாழக்கிழமை இரவு நாகேஸ்வரன் தலைமையில் நவக்கிரக ஹோமம் சனிப்ரீத்தி பரிகார ஹோமம் நடைபெற்று பூர்ணாஹுதி தீபாராதனை நடந்தது. இதைத் தொடர்ந்து இன்று அதிகாலை மங்கள இசை உடன் விக்னேஸ்வர பூஜை, வேதிகா அர்ச்சனை, சனீஸ்வரர் மூல மந்திரம் ஜபம், சனீஸ்வர தோஷ நிவர்த்தி பரிகார ஹோமம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து ராமசுப்பிரமணியன் தலைமையில் சிவாச்சாரியார்கள் புனித நீர் குடங்களை எடுத்து மேளம் தாளம் முழங்க கோவிலை சுற்றி வந்தனர். பின்னர் அந்த புனித நீரால் சனீஸ்வர பகவானுக்கு மகா அபிஷேகம் செய்யப்பட்டது. அதன்பின் சிறப்பு அலங்காரம், சிறப்பு அர்ச்சனை, மகா தீபாராதனை நடந்தது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பரிகார அர்ச்சனை மற்றும் சாமி தரிசனம் செய்தனர்.

# திருநள்ளாற்றில் சனிப்பெயர்ச்சி விழா: பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம்!



**காரைக்கால், மார்ச் 7:**

திருநள்ளாறு ஸ்ரீ பிரணாம்பிகை சமேத தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சனிப்பெயர்ச்சி விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

பாடல் பெற்ற தலமாகவும், உன்மத்த நடனமாடும் செண்பக தியாகராஜர் அருள்பாலிக்கும் தலமாகவும், நளச்சக்கரவர்த்திக்கு விமோசனம் கிடைத்த தலமாகவும் என பல்வேறு சிறப்புகளுடன் புதுச்சேரி யூனியன் பிரதேசம், காரைக்கால் மாவட்டம், திருநள்ளாற்றில் இந்த தலம் அமைந்துள்ளது.

ஒருராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு இடம் பெயர சனி கிரகம், இரண்டரை முதல் இரண்டே முக்கால் ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறது.

இந்த தலத்தில் ஸ்ரீ சனீஸ்வரபகவான், அபய முத்திரையுடன், கிழக்கு நோக்கிய பார்வையில், அனுகிரக மூர்த்தியாக காட்சியளிக்கிறார்.

இந்த கோயிலில் அனுக்கிரக மூர்த்தியாக உள்ள சனிபகவானுக்கு சனிப்பெயர்ச்சி விழா நாளில் விமரிசையான அபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு வெள்ளிக்கிழமை காலை 8.24 மணிக்கு பிரவேசிக்கும் நிகழ்வை குறிக்கும் வகையில், மங்கள வாத்தியங்கள் இசையுடன் மகா தீபாராதனை காட்டப்பட்டது.

முன்னதாக பகவானுக்கு நல்லெண்ணெய்,மஞ்சள்,பழம், பஞ்சாமிர்தம், தேன், தயிர், சந்தனம், பன்னீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. சுவாமிக்கு மலர்களால் மாலை சாத்தப்பட்டு, தங்க அங்கியுடன் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்பட்டது.

தோஷ நிவர்த்திக்காக பக்தர்கள் நளன் குளத்தில் அதிகாலை முதல் நல்லெண்ணெய் தேய்த்து நீராடினர். பிறகு சனீஸ்வரபகவானை தரிசிக்க கோயிலுக்கு சென்றுகொண்டிருக்கிறனர்.

பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு வசதியாக கட்டணமில்லா தரிசனம் மற்றும் ரூ.300, ரூ.600, ரூ.1,000 ஆகிய வரிசைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதிகாலை முதல் வரிசையில் சென்று பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர்.

பக்தர்கள் வசதிக்காக கோயில் நிர்வாகம், திருநள்ளாற்றில் பல்வேறு இடங்களில் கட்டணத்துக்கான டிக்கெட் வழங்கும் மையத்தை அமைத்துள்ளது.

பல்வேறு இடங்களில் கோயில் நிர்வாகம் சார்பிலும், பிற அமைப்புகள் சார்பிலும் அன்னதானக்கூடம் அமைத்து, பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டுவருகிறது.

நளன் தீர்த்தக் குளம் மற்றும் சுற்றுவட்டாரத்தில் தீவிர கண்காணிப்பில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

தீர்த்தக்குளத்தில் யாரேனும் மூழ்கிவிட்டால், அவரை மீட்க நீச்சல் பயிற்சி பெற்றவர்கள் படகு மூலம் குளத்தை சுற்றி கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கோயிலில் தங்க காக வாகனத்தில் உற்சவரான ஸ்ரீ சனீஸ்வரபகவான் வடக்குப் பிரகார மண்டபத்துக்கு வியாழக்கிழமை இரவு எழுந்தருளச் செய்யப்பட்டார். வரிசையில் செல்லும் பக்தர்கள் தங்க காக வாகனத்தில் அருள்பாலிக்கும் சனீஸ்வரபகவானை தரிசித்து செல்கின்றனர்.

துணை நிலை ஆளுநர் தரிசனம்: புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கே.கைலாஷ்நாதன்,மாவட்ட ஆட்சியர் இஷிதா ரதி, தருமபுரம் ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கட்டளை விசாரணை தம்பிரான் சுவாமிகள் உள்ளிட்டோர் தரிசனம் செய்தனர்.

# 27 நட்சத்திர கோயிலில் மார்ச் 6-இல் சனிப்பெயர்ச்சி

**செய்யாறு, மார்ச் 7:**

செய்யாற்றை அடுத்த கூழமந்தல் நட்சத்திர கோயிலில் சனிப்பெயர்ச்சி நிகழ்வு வரும் வெள்ளிக்கிழமை (மார்ச் 6 ) நடைபெறுகிறது.

பூரட்டாதி நட்சத்திர காலத்தில் சனி பகவானை வழிபட்டால் மன அழுத்தங்கள் குறையும். உத்திரட்டாதி நட்சத்திர காலத்தில் பொதுமக்களுக்கு ஆன்மிக சிந்தனை, பொறுப்பு உணர்வு, அமைதி அதிகரிக்க வாய்ப்பு. நீண்ட நாள் திட்டங்கள் செயல்பட தொடங்கும் என்பது ஐதீகம்.

வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான் வரும் வெள்ளிக்கிழமை (மார்ச் 6) காலை 8.24 மணிக்கு பூரட்டாதி நட்சத்திரத்தில் இருந்து உத்திரட்டாதி நட்சத்திரத்துக்கு பெயர்ச்சி அடைகிறார். சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு கூழமந்தல் கிராமத்தில் உள்ள 27 நட்சத்திர கோயிலில் சனீஸ்வர பகவானுக்கு அன்றைய தினம் காலை 8 மணிக்கு மேல் மகா கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், 27 நட்சத்திர பரிகார ஹோமம் தொடர்ந்து கலசாபிஷேகம் அலங்காரம் தூப, தீப, நெய்வேத்தியம் ஆகியவற்றுடன் மகா தீபாராதனை நடைபெறுகிறது.

இதைத் தொடர்ந்து 27 நட்சத்திர அதிதேவதைகளுக்கும் அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. மேலும் அன்றைய தினம் சங்கடஹர சதுர்த்தி மற்றும் சனிப் பெயர்ச்சி ஒரே தினத்தில் வருவது சிறப்புக்குரியதாகும்

# பழநியில் சனிப்பெயர்ச்சி விழா கோலாகலம்: திரளான பக்தர்கள் பங்கேற்பு

**பழநி, மார்ச் 7:**

திண்டுக்கல் மாவட்டம் பழநி திருஆவினன்குடி கோயிலில் இன்று (மார்ச் 6) காலை சனிப்பெயர்ச்சி விழா கோலாகலமாக நடைபெற்றது.

சனி பகவான் இன்று காலை 8.24 மணிக்கு கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு பெயர்ச்சி ஆனார். இதையொட்டி, அறுபடை வீடுகளில் 3-ம் படை வீடான பழநி திருஆவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி கோயில் வளாகத்தில் உள்ள சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

முன்னதாக, கும்ப கலச பூஜை, சிறப்பு யாகம் மற்றும் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து, சனீஸ்வர பகவானுக்கு வெள்ளிக்கவசம் மற்றும் மலர் அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது.

விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்று பரிகார பூஜை செய்தனர். அப்போது பக்தர்கள் எள் விளக்கேற்றி வழிபட்டனர்.

இதேபோல தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டும் சிறப்பு வழிபாட்டில் பக்தர்கள் ஈடுபட்டுள்ளன.

திருநள்ளாறு சனீஸ்வர பகவான்: சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு புதுச்சேரி - காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் உள்ள சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன.

சனீஸ்வர பகவானுக்கு நல்லெண்ணெய், மஞ்சள், திரவியப் பொடிகள், பழம், பஞ்சாமிர்தம், தேன், தயிர், சந்தனம், பன்னீர் கொண்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்பட்டது. தொடர்ந்து சனீஸ்வர பகவானுக்கு மகா தீபாராதனை காட்டப்பட்டது.






## நலம் தரும் மருத்துவம்

## முழங்கால் வலிக்கு இந்த உணவுகளே முக்கிய காரணம்.. கட்டாயம் தவிர்க்க வேண்டும்..!

முழங்கால் வலி என்பது வயதான காலத்தில் பலர் அனுபவிக்கும் ஒரு பொதுவான பிரச்சனையாகும். மூட்டுகளில் உள்ள குருத்தெலும்பு தேய்மானம், உடலில் யூரிக் அமிலம் அதிகரிப்பதால் ஏற்படும் கீல்வாதம், தசைநார் காயங்கள் அல்லது அதிக எடை காரணமாக மூட்டுகளில் ஏற்படும் அழுத்தம் ஆகியவற்றால் முழங்கால் வலி ஏற்படலாம். நமக்கு ஏதேனும் காயங்கள் அல்லது தொற்றுகள் ஏற்படும்போது, நமது நோயெதிர்ப்பு அமைப்பு அவற்றை குணப்படுத்த பதிலளிக்கிறது. இந்த செயல்பாட்டின் போது உருவாகும் வீக்கம் மற்றும் ஃப்ரீ ரேடிக்கல்கள் திசுக்களை சேதப்படுத்தும். இந்த நிலையில், முழங்கால் வலி மிகவும் கடுமையானதாகிறது.

சர்க்கரை உணவுகள்: தேநீர், காபி, இனிப்புகள் ஆகியவற்றில் உள்ள சர்க்கரை, குளிர் பானங்கள், பேக்கேஜ் செய்யப்பட்ட பழச்சாறுகள் மற்றும் பிற உணவுகளில் உள்ள செயற்கை சர்க்கரைகள் மற்றும் இனிப்புகள் நமது ஆரோக்கியத்திற்கு மிகவும் ஆபத்தானவை. அவை நமது இரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கின்றன. இந்த செயல்பாட்டில், அவை நோயெதிர்ப்பு செல்களைத் தூண்டி அழற்சி செல்களை வெளியிடுகின்றன. இவை நமது உடலில் உள்ள முக்கியமான திசுக்கள் மற்றும் மூட்டுகளை சேதப்படுத்துகின்றன. துரித உணவு, பதப்படுத்தப்பட்ட சிற்றுண்டிகள் மற்றும் மாவுடன் தயாரிக்கப்படும் பேக்கிங் உணவுகளில் சர்க்கரைகள், டிரான்ஸ் கொழுப்புகள், நிறைவுற்ற கொழுப்புகள் மற்றும் பாதுகாப்புகள் அதிகம் உள்ளன. இவை அனைத்தும் முழங்கால் வலி ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கின்றன. மது அருந்துதல் முழங்கால் வலிக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளின் செயல்திறனை பாதிக்கலாம். இது மூட்டுவலி அறிகுறிகளை மோசமாக்கி, மூட்டுவலி, கீல்வாதம் மற்றும் பிரச்சனையின் தீவிரத்தை அதிகரிக்கும். மூட்டுகளுக்கு இடையே உள்ள 'சைனோவியல் திரவத்தின்' சரியான செயல்பாட்டை பராமரிக்க உடலுக்கு போதுமான தண்ணீர் தேவைப்படுகிறது. மது உடலை நீரிழப்பு செய்கிறது, இது மூட்டுகளில் மெத்தையைக் குறைத்து வலியை ஏற்படுத்துகிறது.

ஒமேகா-6 கொழுப்பு அமிலங்கள்: நமது உடலுக்கு ஒமேகா-6 கொழுப்பு அமிலங்கள் தேவை, ஆனால் அவற்றில் அதிகமானவை முழங்கால்கள் மற்றும் மூட்டுகளுக்கு தீங்கு விளைவிக்கும். ஒமேகா-6 உடலில் வீக்கத்தை ஏற்படுத்தும் ரசாயனங்களின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இது வேர்க்கடலை எண்ணெய், தாவர எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சோளத்தில் காணப்படுகிறது. ஒமேகா-6 ஐ அதிகமாக உட்கொள்வது உடலில் 'அராச்சிடோனிக் அமிலம்' உற்பத்திக்கு வழிவகுக்கிறது. இது மூட்டுகளில் வீக்கத்தை ஏற்படுத்தும் புரோஸ்டாக்லாண்டின்களின் உற்பத்திக்கு வழிவகுக்கிறது. இது கீல்வாதம் மற்றும் மூட்டு வலிக்கு வழிவகுக்கும்.

# ஆரோக்கிய வாழ்விற்கு வழிவகுக்கும் (Nanotechnology) மீநுண் தொழில்நுட்பம்!

மருத்துவத்துறையில் நானோ தொழில்நுட்பம் (NANOTECHNOLOGY IN MEDICINE) என்பது நோய்களைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல் மற்றும் தடுப்பதற்கான ஒரு புரட்சிகரமான அணுகுமுறையாகும். இதில் நானோ துகள்கள் மற்றும் நானோஅளவிலானகருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.


நானோ தொழில்நுட்பம் என்றால் என்ன?

நானோ தொழில்நுட்பம் அல்லது மீநுண் தொழில்நுட்பம் என்பது அணு, மூலக்கூறு அளவில் பொருட்களைக் கையாண்டு, அவற்றின் தனித்துவமான பண்புகளைப் பயன்படுத்தி புதிய கருவிகளையும் பொருட்களையும் உருவாக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பமாகும். இது இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பல்வேறு துறைகளில் புரட்சியை ஏற்படுத்தி, புற்றுநோய் சிகிச்சை, மின்னணுவியல், பொருட்கள் அறிவியல் போன்ற பல துறைகளில் புதிய வழிகளைத் திறந்து வருகிறது.

1) முக்கிய பயன்பாடுகள்:

A) இலக்கு வைக்கப்பட்ட மருந்து விநியோகம்(TARGETED DRUG DELIVERY):

நானோ துகள்கள் நோயுற்ற செல்களை (குறிப்பாக புற்றுநோய் செல்கள்) நேரடியாகக் குறிவைத்து மருந்துகளைக் கொண்டு சேர்க்கின்றன. ஆரோக்கியமான திசுக்களுக்கு ஏற்படும் சேதத்தை குறைக்கின்றன.



B) நோயறிதல் (DIAGNOSTICS):

பயோசென்சர்கள் மற்றும் லேப்-ஆன்-எ-சிப்(LAB-ON-A-CHIP) சாதனங்கள் மூலம் நோய்களை மிக ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவுகிறது.

C) புற்றுநோய் சிகிச்சை (CANCER TREATMENT):

தங்க நானோ துகள்கள் போன்றவற்றை பயன்படுத்தி புற்றுநோய் சிகிச்சைகள் மருத்துவ பரிசோதனையில் உள்ளன.

D) நுண்ணுயிர் எதிர்ப்பு (ANTIBACTERIAL):

நானோ-வெள்ளி போன்ற பொருட்கள் நுண்ணுயிர் எதிர்ப்பிகளாக பயன்படுத்தப்பட்டு, ஆன்டிபயாட்டிக் எதிர்ப்பை சமாளிக்க உதவுகின்றன.

E) நுண் அறுவை சிகிச்சைகள்:

நானோ அளவிலான அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் ரோபோக்கள் நுண் அறுவை சிகிச்சைகளை சாத்தியமாக்குகின்றன.

F) திசுப் பொறியியல்:

சேதமடைந்த திசுக்களை புதுப்பிக்க நானோ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

2) இவற்றின் நன்மைகள்:



மருத்துவத்துறையில் நானோ தொழில்நுட்பத்தின் நன்மைகள் நோய்களை மிகத் துல்லியமாகக் கண்டறிதல், சிகிச்சையின் துல்லியத்தை அதிகரித்தல், பக்க விளைவுகளை வெகுவாகக் குறைத்தல் போன்றவற்றில் உதவுகின்றன. புற்றுநோய் போன்ற நோய்களுக்கு இலக்கு வைத்து மருந்து செலுத்துதல், நுண்ணுயிர்களை எதிர்த்தல், புதிய தடுப்பூசிகளை உருவாக்குதல் மற்றும் திசுப் பொறியியல் போன்ற துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்றன.

நானோ துகள்கள், மருந்துகளை குறிப்பிட்ட செல்களுக்குள் கொண்டு செல்லவும், பக்க விளைவுகளை குறைக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தவும் உதவுகின்றன. நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவும் இந்த நானோ தொழில்நுட்பம் எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நோய்களுக்கான மிகவும் பயனுள்ள மற்றும் துல்லியமான தீர்வுகளை வழங்குகிறது.

# "தைரியம் பழகு"




"வைபவ் வேவ்" நகரின் மிகப் பெரிய ஸ்டார் ஹோட்டல்.

அங்கே ரிஷப்ஸனில் நிற்கும் ரேகா மண்ணுக்கு வந்த தேவதை.
அவளது சிரிப்பு தான் அந்த ஹோட்டலின் "வெல்கம் டிரிங்க்" என்று பலரும் சொல்லுவர்.

அவள் புன்னகைத்தால் வாடிக்கையாளர்கள் தங்கள் கவலைகளை மறந்து விடுவார்கள்.

அந்த சிரிப்பில் விழுந்தவன்தான் அரவிந்த். பணக்காரக் குடும்பத்தின் ஒரே வாரிசு. பல கம்பெனிகளின் இணை இயக்குனர். வசதியான வாழ்க்கையை மட்டும் பிறந்த நாளிலிருந்து அனுபவித்து வளர்ந்தவன்.
"நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கணும் ரேகா," ஒருநாள் நேரடியாகவே சொன்னான்.
ரேகா சிரித்தாள். அது ஹோட்டல் சிரிப்பு. ப்ரொஃபஷனல் புன்னகை.
ஆனா அவன் அந்த சிரிப்பைத் தொட்டு அவள் வீடு வரை வந்தான்.
அங்கு வந்தபின் அதிர்ந்தான்.
சிதிலமான ஓட்டு வீடு.
உள்ளே மருந்து வாசனை.
படுக்கையில் நோய்வாய்ப் பட்டுக் கிடக்கும் தாய்.
சக்கர நாற்காலியில் ஊனமுற்ற தம்பி.
இரவு டூட்டியில் இருந்து வந்த சோர்ந்த முகம் கொண்ட செக்யூரிட்டி அப்பா.
அரவிந்தின் கண்களில் முதல் முறையாக வாழ்க்கையின் தரைத் தளம் தெரிந்தது.
"இத்தனை சோகத்திலும் எப்படி ரேகா சிரிக்கிறாய்?" அவன் உண்மையாய்க் கேட்டான்.
ரேகா மெலிதாய்ச் சிரித்தாள்.
"இவங்களை பார்த்து நானும் அழுதிட்டேயிருந்தா... இவங்களுக்கு யார் நம்பிக்கை தருவாங்க?... அதான் நான் சிரிக்கிறேன்... அவங்களுக்கு நம்பிக்கை பிறக்க"
அவன் மௌனமானான்.
அந்த மௌனத்தில் இரண்டு வழிகள் இருந்தன.

ஒன்று... இந்தச் சுமை நமக்கானதல்ல என்று பின் வாங்குவது.
இரண்டு, அந்தச் சுமையில் தோள் கொடுத்து நிற்பது.
அரவிந்த் யோசித்தான்.
அவளது அப்பாவைப் பார்த்தான். பார்வை கேட்டது.
"உங்க பொண்ணை எனக்குத் தருவீங்களா?"
அவர் ரேகாவை பார்த்தார்.
அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட ரேகா, அரவிந்தைப் பார்த்து,
"மிஸ்டர் அரவிந்த்...
அங்கே ஹோட்டலில் நான் சிரிப்பது என்னோட ஜாப்... இங்க சிரிப்பது என்னோட பொறுப்பு...
இந்தச் சிரிப்பை உங்களால வாங்க முடியாது!... இதுக்குப் பின்னாடி நிற்பதற்கு நிறைய தைரியம் வேணும்... நீங்க பணக்கார வீட்டுப் பிள்ளை உங்களுக்கு நிச்சயமா அந்த தைரியம் இருக்காது... அதனால..."
"அதனால....?"
"நீங்க உங்க பாதைல போங்க... நான் என் பாதைல போறேன்"

சில நிமிடங்கள் அவளையே வெறித்துப் பார்த்தபடி நின்ற அரவிந்த்,"வேற வழியே இல்லையா?" கேட்டான்.

ரேகா இட, வலமாய்த் தலையாட்ட "விர்ர்ர்" ரென்று வெளியேறினான் அரவிந்த்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள், ஹோட்டல் மேனேஜர் ரிசப்ஷனுக்கு வந்து, "மிஸ் ரேகா.... இவர் புதிசா இங்க ரூம் பாய் வேலையில் சேர்ந்திருக்கார்... இவருக்கு நம்ம நடைமுறைகளைச் சொல்லிக் குடுங்க" என்றார்.

அவருடன் வந்து நின்ற இளைஞனைப் பார்த்து அதிர்ந்தாள் ரேகா.
அரவிந்த் ரூம் பாய் யூனிஃபார்மில் நின்றிருந்தான்.
மேனேஜர் நகர்ந்ததும் ரேகா கேட்டாள். "எதுக்கு இதெல்லாம்?"
"தைரியம் கத்துக்க"



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# விருது !

" ஹல்லோ...கிருத்திகா ! கங்கி ராடஸ்.. இந்த வருஷம் பெஸ்ட் ஆக்ட்ரஸ் அவார்ட் வாங்கினதுக்கு ! .." சீனியர் ஆர்டிஸ்ட் வாழ்த்தினார்.

" தேங்க் யு ஆன்டி "

" ஆமாம்..உன் ஹஸ்பண்ட் வரல்லியா ? " முகம் சுருங்கியவள் , " இல்ல ஆன்டி ! ஆபீஸ்ல போர்டு மீட்டிங். அதனால் வரல்ல.." கொஞ்
சம் வருத்தத்துடன் கூறினாள் கிருத்திகா.

இன்னும் எத்தனையோ பேர்கள் நடிகை கிருத்திகாவிடம் வந்து கை குலுக்கி வாழ்த்துச் சொன்ன வண்ணம் இருந்தனர்.

சில முன்னணி நட்த்திரங்கள், இயக்கு னர்கள்கள் கிருத்திகாவுக்கு வாழ்த்து சொன்னார்கள். அரங்கம் நிரம்பி வழிந்தது. ஃபோட்டோஃபிளாஷ்கள் , வீடியோ காமிராக்கள்சுழன்றவண் ணம் இருந்தன !




தன் உதவியாளனிடம் தன் ஸ்மார்ட் ஃபோனைக் கொடுத்து படம் பிடிக்கச் சொல்ல, அவனும் மிக அநாயசமாக காட்சிகளை வீடியோ எடுத்துக்கொண் டிருந்தான். மகிழ்ச்சியில் முகம் பூராக வும் சிரிப்புடனும் ஒருவித படபடப்பு டனோடும் காணப்பட்டாள் கிருத்திகா. கிடைத்த ஷீல்டையும், பூமாலைக ளையும் அள்ளிக்கொண்டு தன் உதவியாளனுடன்புறப்பட்டாள்.

வீட்டை அடைந்தவள் ஏற்கனவே தன் கணவர் ஆஃபீஸிலிருந்து வந்திருப்ப தைக் கண்டு சந்தோஷத்துடன் ஷீல்டை எடுத்துக் கொண்டு அவரரு கில் சென்றாள். பின்னாடி ஓடிவந்த உதவியாளன் பூமாலைகளையும் ஸ்மார்ட் ஃபோனையும் கிருத்தி காவிடம் கொடுத்துவிட்டுஅங்கிருந்து அகன்றான்.

மனைவியை குறு குறுவென்று பார்த்த ராம்குமார் , " விழா நல்லா நடந்ததா கிருத்தி ? "

" ம்.. நீங்கள்தான் வரல்ல... எவ்வளவு கிராண்டா நடந்தது தெரியுமா? எத்தனை ஆர்டிஸ்டுகள் , டைரக் டர்கள்..வந்து வாழ்த்துசொன்னாங்க. இதோ பாருங்க ஷீல்டு..என் மொபை ல்ல ஷூட் பண்ண வீடியோவ பாரு ங்க.." ஃபோனை ஆன் செய்து காண் பிக்க, ராம்குமார் எந்தவித சலனமும் இல்லாமல் பார்த்தார்.

பிறகு சோஃபாவில் அமர்ந்து கொண்டார்.

" கிருத்தி ! உன்னப் பத்தி எனக்கு நல்லாவேத் தெரியும். நீ அருமையான ஆர்டிஸ்ட். தமிழ் திரையுலகுக்கு கிடை த்த பொக்கிஷம் ! "

கணவரின் புகழ் வார்த்தையில் அப்படியே உருகிப் போய் நின்றாள்.

ராம்குமார் தொடர்ந்தார். " நீ விருது வாங்கின திரைப்படத்த நானும் பார்த்தேன்.அம்மா ரோல், மகள் ரோல் என்று இரட்டை வேடம். அம்மா கேரக் டரை வெகு அற்புதமாகச் செய்திரு க்கே ! உன் நடிப்பைப் பார்த்து எத்த னைக் கைத்தட்டல்கள்! ரியலி சூப்ப ர்ப் ! உன்னை நினைச்சுபெருமைப்பட றேன் டார்லிங் ! ".

கணவரின் பேச்சில் மயங்கியவள் , " ஆடிட்டோரியத்தில் கிடைத்ததைவிட உங்கள் வாழ்த்துதான் எனக்கு பெரி சாய் தெரியறது ! ரொம்ப நன்றிங்க ! " என்றாள் கிருத்திகா பெருமையால் நெஞ்சம் விம்மிட !

அவளைக் கடைக்கண்ணால் பார்த்தபடி தொடர்ந்தார் ராம்குமார்.

" ஆனால், கிருத்தி...நீ இந்த விருது வாங்க முழுத்தகுதி உடையவளா? நல்லா யோசிச்சுப் பாரு ! "
கிருத்திகா திடுக்கிட்டாள். " என்ன சொல்றீங்க ?" படபடத்தாள் !

" யெஸ் மை டியர் ! இதுவரை இருபது படங்கள்ல நடிச்சிருக்கே. ஆனால் ஒரு படத்தில்கூட உன் சொந்தக்குரல்ல நீ பேசினதில்ல.
டப்பிங் ஆர்டிஸ்ட் குரல் தான் ! உன் முக உணர்ச்சிகளு க்கேற்ப அந்தக் குரலில் காணப்பட்ட மிகச் சரியான ஏற்ற இறக்கங்கள். அவற்றைக் கொண்டு உன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியி ருக்கே. இல்லையென்றால் உன் நடிப்பு சோபிக்குமா ! ஸோஎன்னைப் பொறுத்தவரை இந்த விருதில் சரிபாதி டப்பிங் ஆர்டி ஸ்ட்டுக்குப் போய்ச் சேரணும். அது தான் நியாயமானதும்கூட ! ஆனால் அதை நீ மட்டும் செயல்படுத்த முடி யாது. தார்மீக உணர்வு கொண்டு இந்த விருதை ஏற்றுக்கொள்வதும், இல்லை ஏற்றுக் கொள்ளாததும் உன்னிஷ்டம் ! " எனக் கூறிவிட்டு எழுந்து சென்றார் ராம்குமார்.

பிரமை பிடித்தவள் நின்றுகொண்டி ருந்த கிருத்திகா மனத்தில் இருந்த கர்வம் கொஞ்சம் கொஞ்மாக கழன்றுகொண்டி ருந்தது !



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# ஔவைக் குறளும்

அதிகாரம் 2



▪Banumathi Nachiyar






## குறள் 2

உணர்வாக வெல்லா முடம்பின் பயனே
யுணர்க வுணர்வுடை யார்

**விளக்கம்**

உணர்ச்சி ஆவன எல்லாம் யாவும் தேகத்தின் உபயோகமாகும். அதை நல்லுணர்ச்சி உடையார் அறிந்து கொள்ளக் கடவர்.

சரீரங்களில் ஏற்படும் உணர்ச்சிகள் ஆன்மாக்களுக்கு உண்டாக்கும் உணர்ச்சிகளானால் அதுவே தேகத்தின் பயனாகும். அதனை உணர்ந்து நடப்பவர்கள் உணர்வுடையோர் ஆவர்.

தேகத்தின் உணர்ச்சி பிரகருதிகளுக்குத் தகுந்த உணர்ச்சியையே ஆன்மாக்கள் அடைகின்றன. அதனையே நல்லுணர்ச்சி உள்ளவர்களே அறிந்து கொள்ளக் கடவர் என்பார்.

அதனையே "உணர்க உணர்வுடையார்" என்று கூறுகிறார். சரீரத்தின் உணர்ச்சியே ஆன்மா அடைதல் என்பது கருத்தாகும்.

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே



என்பார் திருமூலர்.
இக்குறள் உடலையும் உடலில் ஏற்படும் உணர்ச்சிகளையும் ஆன்மாவுடன் இணைத்துப் பார்க்கிறது. உடலின் உணர்ச்சிகளை உத்தமனின் உணர்ச்சியைக் கடக்க பழகிக் கொள்பவரே உணர்வுடையார் ஆவர்.

## குறள் 3

ஒருபய னாவ துடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார்

**விளக்கம்**

ஒரு என்பது ஒப்பற்ற எனக் கருத்தில் கொண்டால், உடம்பின் ஒப்பற்ற பயனாவது வீடு பேற்றினைத் தருகின்ற பயனாகிய சங்கரனைச் சார்தலே ஆகும்.

மேலும் ஒருபயன் என்பதனை வீடு பேற்றினை அடைதல் எனக் கொண்டாலும், அதனை அடைய சங்கரனையே சேர் என்பதே பொருளாகும்.

உடம்பின் பயனாகக் கருதுவது வெறும் அலங்காரமும் ஒப்பனை பூச்சுகளோ அல்ல. இவ்வுடம்பினை நன்கு பேணி, வீடுபேற்றினை அடைய சங்கரனைச் சேர்தலே நம் உடம்பின் ஒப்பற்ற பயனாகும்.



(தொடரும்).

# ஸ்ரீ நம்மாழ்வார்...

ஸ்ரீ நம்மாழ்வார்
அவதரித்த இடம்
திருக்குறுங்குடி நம்பியிடம்
பிள்ளைவரம் பெற்ற
காரிமாறன், உடையநங்கை
தம்பதியருக்குத் திருமகனாய்
வைகாசித் திங்கள் ,விசாக
நட்சத்திரத்தில்,
திருக்குருகூரில் அவதரித்தார்!
ஆதிபிரானின் திருக்கோயிலில்,
ஆதிசேஷன் அம்சமாய்
தோன்றியிருந்த
திருப்புளியின் பொந்தினில்
பதினாறு ஆண்டுகள்
தவநிலையில் அமர்ந்திருந்தார்.

வைனதேயனின் அம்சமாய்
தோன்றியிருந்த மதுரகவியாரின்
குரலுக்கு செவிமடுத்து
கண்மலர்ந்து,
அவர் கேட்ட சூட்சம
வினாவிற்கு விடையளித்து
அவர் ப்ரார்தனைக்கிணங்க,
அவரைத்தம் சீடராய் ஏற்றார்
பூமிதொடும்போதே ‘சட’
என்னும் வாயுதனை தன்
காலால் எத்தி உதறி
“சடகோபன்” என பெயர்
பெற்றார்.
திவ்யதேசத்து
எம்பிரான்களை தம் யோக
நிலையிலிருந்தவாறே
கண்டுகளித்து, அவர்களை
பாசுரங்களால் பாடி
மகிழ்ந்திருந்தார்.
ஆழ்வார் பணித்த பாசுரங்கள்
அனைத்தினையும்
பட்டோலைப்படுத்தி அவற்றை
அவனியெங்கும் பரப்பினார்
மதுரகவியார்!

ரிக் வேத த்தின் சாரமாய்
நூறு பாசுரங்கள் கொண்ட
திருவிருத்தம்
யஜுர் வேத த்தின் சாரமாய்
ஏழு பாசுரங்கள் கொண்ட
திருவாசிரியம்
அதர்வண வேத த்தின் சாரமாய்
எண்பத்தியேழு பாசுரங்கள்
கொண்ட பெரியதிருவந்தாதி
சாம வேதத்தின் சாரமாய்
ஆயிரத்தி நூற்றிரண்டு
பாசுரங்கள் கொண்ட
திருவாய்மொழி
என்ற நான்கு தமிழ்
ப்ரபந்தங்களை நான்கு
வேதங்களுக்கொப்பாக
பணித்து
“வேதம் தமிழ் செய்த
மாறன்” என பெருமைப்பட
வழங்கப்பட்டார்!

“நம்ஆழ்வார்” என
அரங்கனால்
உகப்பாய் கூறப்பட்ட
ஆழ்வார்
பெருமாளின்
திருவடிநிலையாய்
இருந்து‘ப்ரீசடாரியாய்’
நம்மனைவருக்கும் ஞானம்
அளித்து
நம் துயர் அறுக்கும் சுடரடியாய்
அருள்பாலிக்கிறார்!

அரங்கனின் ஆணைக்கிணங்க,
கம்பநாட்டாழ்வார் “சடகோபன்
அந்தாதி”
என்ற




நூலைப்பணித்துஆழ்வாரின்
பெருமையைப்பரக்கக்
கூறுகிறார்!

“நளிர்மதி சடையனும் நான்முக
கடவுளும்
தளிர்ஒளி இமையவர்
தலைவனும் முதலா
யாவகை உலகமும், யாவரும்
அகப்பட
நிலம்,நீர்,தீ,கால், இரு
விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிது உடன்
மயங்க
ஒரு பொருள் புறப்பாடு இன்றி,
முழுவதும்
அகப்பட கரந்து, ஓர் ஆல்
இலை சேர்ந்த எம்
பெருமா மாயனை அல்லது
ஒரு மா தெய்வம் மற்று
உடையமோ யாமே?” என்றும்

“நாரணன் முழு ஏழ்
உலகுக்கும் நாதன்
வேத மயன்
காரணம் கிரியைகள் கருமம்
இவை
முதல்வன் எந்தை
சீர் அணங்கு அமர ர் பறர்
பலரும் தொழுது
ஏத்த நின்று
வாரணத்தை மருப்பு
ஒசித்த
பிரான் மாதவனே” என்றும்

வேதம் உரைக்கும்
பரம்பொருள்
நாரணனே என்று
தம் பாசுரங்கள்
மூலம் ஸ்தாபிக்கிறார்
ஆழ்வார்

“கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாம ம்
திண்ணம் நாரணமே”

“நாடீர் நாடோறும்
வாடா மலர் கொண்டு
பாடீர் அவன் நாம ம்
வீடே பெறலாமே” என்று

அவனளித்த ஞானம் கொண்டு
அவனை பக்தி செய்து
அவன் சரணாரவிந்தங்களில்
ப்ரபத்தி செய்யுங்கோள்!!
பரம பதம் திண்ணம்!!
என்பதனை தம்
ப்ரபந்தங்களால் ஆழ்வார்
அறுதியிடுகிறார்!!

ஆழ்வார் ,தாமிரபரணி
ஆற்றுநீரை காய்ச்ச
அறிவுறுத்தி , மதுரகவியார்
மூலம்,.
தம் விக்ரக மூர்த்தியையும்
பவிஷ்யாசார்யார் யதிராசரின்
விக்ரகமூர்த்தியையும்
செய்வித்து, பின்னாளில் ,நாத
முனிகளாரிடம்,ஜகதாசார்யார்
யதிராசரின் விக்ரகத்தை
பிரசாதித்ததாய்
அறியப்படுகிறோம்.

திவ்யதேசத்து எம்பிரான்களை
அனுபவித்தவாறு,இப்பூவுலகில்
முப்பதியாறு அகவைகள்
வாழ்ந்திருந்து,
காளமேகப்பெருமாளை
வழித்துணைப் பெருமானாய்க்
கொண்டு,
வைகுண்ட ஏகாதசி நன்னாளில்
,அந்தமில்லா பேரின்பவீட்டை
அடைந்தார்!

தினம் ஒரு தலைவர்கள்

# எல்.கே.துளசிராம் வரலாறு

ராஷ்ட்ரபந்து துளசிராம்
(14 சனவரி 1870 – 4
சனவரி 1952) சௌராட்டிர
சமூகத்தில் லகுடுவா.
குப்பைய்யர்-மீனாட்சி
அம்மாள் தம்பதியருக்கு
14-01-1870இல் பிறந்தார்.
பள்ளிக் கல்வியை
மதுரையில் முடித்து,
கல்லூரிக் கல்வியை,
சென்னை கிறித்துவக்
கல்லூரியில் பயின்று
1883ஆம் ஆண்டில்
பட்டம் பெற்றார்.
சௌராட்டிரர் சமுகத்தில்
கே. வி. இராமாச்சாரிக்கு
அடுத்தபடியாக
துளசிராம் இரண்டாவது
பட்டதாரி ஆவார். சட்டம்
பயின்றவர். சென்னை
மாகாண சட்டமன்ற
உறுப்பினராகப்
பணியாற்றியவர்.
ஆத்திகம், அரசியல்,
சட்டத்துறை, சமூகசேவை,
தொழில், கல்வி ஆகிய
பல்வேறு துறைகளில்
புகழீட்டியவர். சௌராட்டிர
சமுக மக்களுக்கு கல்வி
மற்றும் அரசியலின்
முக்கியத்துவத்தை
உணர்த்தி அவர்களுக்குப்
பயிற்சியளித்தவர்.

ஆற்றிய பொதுநலப்
பணிகள்
அரசியல் இயக்கப்
பணியில்
நீதிக்கட்சித் தலைவர் சர்.
பிட்டி. தியாகராயருக்குப்
பக்கபலமாக இருந்து
சென்னை மாகாண
அரசியலில் பல
சீர்திருத்தங்களை
நிறைவேற்றினார். பின்
1924இல் காங்கிரஸ்
கட்சியில் இணைந்து
சத்தியமூர்த்தியின்
தலைமையில் இந்திய
விடுதலை போராட்டத்தில்
ஈடுபட்டார்.
1928ஆம் ஆண்டில்
இந்தியாவிற்கு வருகை
தந்த சைமன் கமிசனுக்கு
எதிராக திரளான
தொண்டர்களுடன்
மதுரை, திருமலை
நாயக்கர் அரண்மனை
வரை ஊர்வலமாகச்
சென்று, இந்திய மக்களின்
எதிர்ப்பை, இந்தியாவை
ஆண்ட ஆங்கிலேயர்
அரசுக்கு எதிராக காட்ட,
கருப்புக் கொடிகளுடன்
"இந்தியாவை விட்டு
வெளியேறு" உரத்த ஒலி
எழுப்பினர்.
1926இல் அன்றைய
சென்னை மாகாண
சட்டமன்ற உறுப்பினராக
மதுரை தொகுதியிலிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1928இல் ஆங்கிலேய
அரசு விதித்த தடையை
மீறி, பாரதியார் இயற்றிய
பாடல்களை சட்டசபையில்
பாடி இந்திய விடுதலை
உணர்ச்சியை மக்கள்
அறிய பரப்பினார்.
1904ஆம் ஆண்டு முதல்
1940ஆம் ஆண்டு முடிய
மதுரை நகராட்சியில்
36ஆண்டுகள்
உறுப்பினராகவும்,
இரண்டு முறை
மதுரை நகர் மன்றத்
தலைவராகவும்
பணியாற்றினார் (1921-
1923 மற்றும் 1930).
கூட்டுறவு இயக்கப்
பணியில்
சௌராட்டிர சமுக
மக்களின் பொருளாதார
மேம்பாட்டிற்காக,
1918ஆம் ஆண்டில்
மதுரை சௌராட்டிர
கூட்டுறவு வங்கியை
நிறுவியதன் மூலம்
கூட்டுறவு இயக்கத்திற்கு
முன்னோடியாக
விளங்கினார்.
கல்விப் பணியில்
பத்திரப்பதிவு துறையின்
சார் பதிவாளர் பதவியை
துறந்து கல்விப்பணியில்
தன்னை முழுமையாக
அர்ப்பணித்தார்.
சௌராட்டிர மக்களின்
கல்வி முன்னேற்றத்திற்காக
மதுரையில் 1904ஆம்
ஆண்டில் சௌராட்டிர
மேல்நிலைப்பள்ளி
உருவாக்க
அரும்பாடுபட்டவர்.
1911ஆம் ஆண்டில்
சௌராஷ்டிர உயர்நிலைப்
பள்ளி கௌன்சில் எனும்
தனி அமைப்பைத்
தொடங்கினார். பள்ளியின்
முதன்மை கல்கட்டடம்
கட்டி முடிக்க (1917
முதல் 1929 முடிய) 12
ஆண்டுகள் தனது முழு
நேரத்தை செலவழித்தார்.
மேலும் அப்பள்ளியின்
தலைவராகவும்,
செயலராகவும் 1898ஆம்
ஆண்டு முதல் 1940ஆம்
ஆண்டு முடிய
42ஆண்டுகால பதவிக்
காலத்தில், பள்ளியின்
முன்னேற்றத்தில்
சிறப்பாகப்
பங்காற்றினார்.
மதுரையில் தொழில்
நுட்பப்பள்ளி (அரசு
பாலிடெக்னிக்)
துவங்க காரணமாக
இருந்தார். மதுரை
தமிழ்ச் சங்கத்தில்
சேர்ந்து தமிழ்மொழி
வளர்ச்சிக்காக உழைத்தார்.
சேதுபதி தங்கபதக்கம்
வென்றார். புதிய தமிழ்
நூலகளைப் பதிப்பித்தார்.
துளசிராம், தமிழிலும்
ஆங்கிலத்திலும்
பேசுவதில்
ஆற்றல்
படைத்தவர்.
சமுதாயப் பணியில்
சட்டத்துறையிலும்
சிறந்து பணியாற்றினார்.
தனது சட்ட நுட்பத்தின்
வாயிலாக சமுதாய
மக்களின் குறைகளை
அரசின் கவனத்திற்கு
எடுத்துச் சென்று சமுதாய
நலன்களை காத்தார்.
1919ஆம் ஆண்டில்
இலண்டன்
சென்று
இந்தியாவை ஆண்ட
ஆங்கிலேய அரசுடன்
பேச்சு வார்த்தை நடத்தி
சௌராஷ்ட்ர சமுகத்திற்கு
பிற்பட்ட வகுப்பிற்கான
தகுதி மற்றும்
சலுகைகளை வாதாடிப்
பெற்று, அதற்கான
அரசாணை பெற்றுக்
கொடுத்தார்.
சமுக மக்களின்
முன்னேற்றத்திற்காக
மதுரையில் 1895ஆம்
ஆண்டில் சௌராஷ்ட்ர
சபையையும், 1906ஆம்
ஆண்டில் சௌராஷ்ட்ர
கிளப்பையும்,
1918ஆம் ஆண்டில்
சௌராஷ்ட்ர கூட்டுறவு
வங்கியையும், 1920ஆம்
ஆண்டில் திராவிடர்
பல்நோக்கு பொறியியல்
நிறுவனத்தையும்
(தற்போதைய மதுரை
தமிழ்நாடு பாலிடெக்னிக்),
துவக்குவதற்கு
முன்னோடியாக இருந்து
செயல்பட்டார்.
1897ஆம் ஆண்டில் நடந்த
முதல் சௌராஷ்டிர
சமுக மாநாட்டில்
கலந்து கொண்டு சமுக
வளர்ச்சி குறித்து
கருத்துகளைப் பதிவு
செய்தார். சௌராஷ்ட்ர
மக்கள் செய்து வந்த
சாயத் தொழிலில்
1985இல் நவீன
தொழில் நுட்பங்களைப்
புகுத்தினார். ஏழை
கைத்தறி நெசவாளர்கள்
பரம்பரையாகத்
தெருக்களில் பாவு நீட்டும்
உரிமையை அரசுடன்
போராடி வாங்கித் தந்தார்.
மதுரை நகர வளர்ச்சிப்
பணியில்
மதுரை நகராட்சியில்
தலைமைப் பதவி வகித்த
காலத்தில்தான் 1921ஆம்
ஆண்டில் மதுரை
நகரத் தெருக்களில்
மின் விளக்குகள்
அமைக்கப்பட்டது.
1923ஆம் ஆண்டில்
மதுரை நகரில்
கழிவுநீர்
பாதாள சாக்கடை திட்டம்
கொண்டு வரப்பட்டது.
பெற்ற விருதுகளும்
சிறப்புகளும்
நாட்டு மக்களுக்காக
ஆற்றிய பணியைப்
பாராட்டும் விதமாக,
இவருக்கு மதுரை மக்கள்
சார்பாக 1930ஆம்
ஆண்டில் இராஷ்ட்ர
பந்து எனும் பட்டம்
வழங்கப்பட்டது.
மதுரை மாநகராட்சி,
துளசிராமின் மக்கள்
பணியை நினைவு
கூறும்படியாக திருமலை
நாயக்கர் அரண்மனை
முன்பாக உள்ள
மாநகராட்சி பூங்காவிற்கு
எல். கே. துளசிராம்
பூங்கா என்று பெயரிட்டு
சிறப்புச் செய்தது.
தமிழார்வம் கொண்ட
நல்ல வைணவராக
விளங்கிய இவருக்கு,
இவர் உருவாக்கிய
மதுரை சௌராட்டிர
மேல்நிலைப் பள்ளி,
மதுரையின் நூற்றாண்டு
விழாவின் போது,
இவருடைய முழு உருவ
வெண்கலச்சிலை
நிறுவப்பட்டுள்ளது.
இவரது முயற்சியால்
1918ஆம் ஆண்டில்
நிறுவப்பட்ட மதுரை
சௌராட்டிர கூட்டுறவு
வங்கியில் இவரது
மார்பளவு வெண்கல
திருவுருவச் சிலை
வங்கியில் அமைத்து,
வங்கி நிர்வாகம் இவரது
சமுதாயப் பணிக்கும்,
ஆளுமைக்கும் சிறப்புச்
செய்தது.
கே. வி. இராமாச்சாரி,
எல். கே.துளசிராம்
ஆகியவர்களின் சமுதாய
பணியை நினைவு
கூறுமுகமாக சௌராட்டிர
மக்கள் இராமாச்சாரி,
துளசிராம் என்று தங்கள்
ஆண் குழந்தைகளுக்குப்
பெயரிட்டனர்.



# அஜித்தின் 66-வது படத்தை இயக்கப்போவது இவரா?

அஜித்தின் புதிய படத்தை இயக்கப்போவது இவரா? ரசிகர்கள் உற்சாகம்

அஜித்குமாரின் 65-வது படத்தை சிறுத்தை சிவா இயக்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

'குட் பேட் அக்லி' படத்தை தொடர்ந்து, மீண்டும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் மீண்டும் ஒரு புதிய படத்தில் அஜித்குமார் நடிக்கவுள்ளது தெரிந்த கதை. இது அஜித்குமார் நடிக்கும் 64-வது படமாகும். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து அஜித்குமாரின் 65-வது படத்தை சிறுத்தை சிவா இயக்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது. அஜித் - சிறுத்தை சிவா கூட்டணியில் ஏற்கனவே 'வீரம்', 'வேதாளம்', 'விவேகம்', 'விஸ்வாசம்' ஆகிய படங்கள் வெளியாகி இருக்கின்றன.

இதற்கிடையில் அஜித்குமாரின் 66-வது படத்தை வெங்கட்பிரபு இயக்கப் போவதாக பேச்சு அடிபடுகிறது. வெங்கட்பிரபு இயக்கத்தில் அஜித்குமார் நடிப்பில் 2011-ம் ஆண்டில் மங்காத்தா படம் வெளியாகி ஹிட் அடித்தது. சமீபத்தில் கூட இந்த படம் ரீ-ரிலீஸ் செய்யப்பட்டு வசூல் பார்த்தது.

இதற்கிடையில் அஜித் - வெங்கட்பிரபு கூட்டணியில் புதிய படம் உருவாகலாம் என்ற தகவல் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





நயன்தாரா

தென்னிந்திய சினிமாவில் பணக்கார நடிகைகளில் ஒருவர் நயன்தாரா. இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்த மன சங்கர வர பிரசாத் காரு படம் மாபெரும் வெற்றி பெற்றது.

போயஸ் கார்டன் என சொன்னாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது ரஜினிகாந்த்தான். மேலும், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் வீடும் அங்குதான் உள்ளது. இவர்கள் மட்டுமின்றி நடிகர் தனுஷ், சந்தானம் ஆகியோருக்கும் அங்கு வீடு உள்ளது.

ரஜினி, ஜெயலலிதா, தனுஷ் வரிசையில் போயஸ் கார்டனில் நயன்தாரா வாங்கிய பிரம்மாண்ட வீடு.. விலை எவ்வளவு தெரியுமா

இந்த நிலையில், நடிகை நயன்தாரா - விக்னேஷ் விக்னேஷ் சிவன் புதிதாக போயஸ் கார்டனில் பிரம்மாண்டமான duplex apartment ஒன்றை வாங்கியுள்ளார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளது. இந்த பிரம்மாண்ட வீட்டின் விலை ரூ. 31.5 கோடி என கூறப்படுகிறது.

## ரஜினி, ஜெயலலிதா, தனுஷ் வரிசையில் போயஸ் கார்டனில் நயன்தாரா வாங்கிய பிரம்மாண்ட வீடு.. விலை எவ்வளவு தெரியுமா

# ஒருபடம் கூட கமிட் ஆகாத போதே வாய்ப்பு கொடுத்தவர் அட்லி - சாய் அபயங்கர்

"பவழ மல்லி" பாடல் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழ் திரையுலகில் வேகமாக வளர்ந்து வரும் இசையமைப்பாளர்களில் ஒருவர் சாய் அபயங்கர். இன்டீ பாடல்கள் மூலம் பிரபலமான சாய் அபயங்கர் தற்போது நடிகர் சூர்யா, தனுஷ், அல்லு அர்ஜுன் என முன்னணி நடிகர்களின் திரைப்படங்களுக்கு இசையமைக்கிறார். இந்த நிலையில், இசையமைப்பாளர் சாய் அபயங்கரின் புதிய இன்டீ பாடல் "பவழ மல்லி" சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த பாடல் தொடர்பான நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய இசையமைப்பாளர் சாய் அபயங்கர், "நான் எனது முதல் திரைப்படத்தில் இணையும் முன்பே, இயக்குநர் அட்லி அண்ணா என்னிடம் தனது அடுத்த படத்தில் பணியாற்றுகிறாயா என கேட்டார். இது தொடர்பான சந்திப்பின் போது நான் இசையமைத்த பாடலை அட்லி அண்ணா கேட்டார். பாட்டை கேட்டு முடித்ததும், என் அடுத்தப் படத்திற்கு இசையமைக்கிறாயா என கேட்டார்.




பாட்டை கேட்டதும், சற்றும் யோசிக்காமல் அவர் கேட்டது என்னை மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அன்று அவர் என் மீது வைத்த நம்பிக்கை, என் மீது எனக்கிருந்த நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தியது. அட்லி அண்ணாவுக்கு எப்போதும் கடமைப்பட்டுள்ளேன்," என்றார்.

# வசூல் மன்னன்- திரைவிமர்சனம்

வசூல் மன்னன்- திரைவிமர்சனம்
Byமாலை மலர்6 March 2026
3:41 PM IST




பரணி இசையில் பாடல்கள் கமர்ஷியல் ரகத்தில் உள்ளன.

பொறியியல் பட்டதாரியான நாயகன் ஸ்ரீதேவா, பலரிடமிருந்து பல லட்சங்கள் கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுக்காமல் தப்பித்து வருகிறார். எங்கு சென்றாலும் கடன்காரர்கள் துரத்த, அவர்களிடம் இருந்து தப்பிப்பதற்காகவே வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

இதற்கிடையே, சிறு வயதிலிருந்தே போலீஸ் ஆக வேண்டும் என்ற கனவுடன் இருக்கும் நாயகி நிவேதா, அதற்காக எவ்வளவு பணம் செலவாகினாலும் தயாராக இருக்கிறார்.

இந்த ஆசையை தெரிந்து கொண்ட ஸ்ரீதேவா, அதையே வாய்ப்பாக பயன்படுத்தி அவரிடம் பொய் சொல்லி பணம் வாங்க திட்டமிடுகிறார். நட்பாக தொடங்கும் அவர்களின் பழக்கம், நம்பிக்கையாக மாறும் தருணத்தில், நாயகனின் உண்மை முகம் நிவேதாவுக்கு தெரிய வருகிறது.

இதனால் கோபமடையும் அவர், போலீஸ் ஆன பிறகு சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார். இறுதியில் நிவேதா நினைத்தது நடந்ததா? ஸ்ரீதேவா எதற்காக இத்தனை கடன் வாங்கினார்? கடனை அடைத்தாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

### நடிகர்கள்

சின்னத்திரை மற்றும் துணை வேடங்களில் நடித்துப் பழகிய ஸ்ரீதேவா, நாயகனாக இந்த படத்தில் அறிமுகமாகிறார். அப்பாவியான முகம், நம்ப வைக்கும் பொய் பேச்சு, இயல்பான உடல்மொழி என கதாபாத்திரத்திற்கு ஏற்ற தேர்வாக இருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் நிவேதா, புதுமுகம் என்றாலும், கொடுத்த வேலையை குறையின்றி செய்திருக்கிறார். அளவான நடிப்பின் மூலம் தனது கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்க்கிறார்.

நாயகியின் தந்தையாகவும், வில்லன் வேடத்திலும் வரும் வேல ராமமூர்த்தி, வழக்கமான தனது நடிப்பை வெளிப்படுத்துகிறார். நாயகனின் மாமாவாக நடித்திருக்கும் சரவண சக்தி, சில இடங்களில் சிரிக்க வைக்கிறார். காவல்துறை அதிகாரியாக வரும் சரவண சுப்பையா உள்ளிட்ட மற்ற கதாபாத்திரங்கள், கதையை நகர்த்த உதவுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

### இயக்கம்

காதல் மற்றும் நகைச்சுவையை மையமாக வைத்து படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் வேல் குமரேசன். பழைய பாணியிலான கமர்ஷியல் கதையை அதே பழைய பாணியிலேயே சொல்லியிருக்கிறார். நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும், அதற்கேற்ற வலுவான துணை நட்சத்திரங்கள் இல்லாதது வருத்தம்.

### ஒளிப்பதிவு

ஒளிப்பதிவாளர் ஆர். எண். சிவகுமார், குறைந்த முதலீட்டுக்குள் தரமான காட்சிகளை பதிவு செய்திருக்கிறார்.

### இசை

பரணி இசையில் பாடல்கள் கமர்ஷியல் ரகத்தில் உள்ளன. பின்னணி இசை காட்சிகளோடு சேர்ந்து பயணிக்கிறது.

ரேட்டிங்-2/5



நடிகை பிரியங்கா மோகன் தற்போது தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோயின்களில் ஒருவராக இருக்கிறார். அவர் தற்போது Made in Korea என்ற படத்தில் நடித்துள்ளார். அது வரும் மார்ச் 13ம் தேதி நெட்பிலிக்ஸ் தளத்தில் ரிலீஸ் ஆகிறது.

அந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சிக்கு பிரியங்கா மோகன் கிளாமர் உடையில் வந்திருக்கும் ஸ்டில்கள் இதோ.

# ப்ளடி பாலிடிக்ஸ்-இல் கவுதம் ராம் கார்த்திக்...

கவின், அனுபமா தாஸ் நடிப்பில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற டாடா படத்தை இயக்கியவர் கணேஷ் கே. பாபு. இவர் தற்போது நடிகர் கவுதம் ராம் கார்த்திக் நடிக்கும் படத்தை தயாரித்து வருகிறார். தினா ராகவன் எழுதி, இயக்கும் இந்தப் படம் கவுதம் ராம் கார்த்திக்-இன் 19-ஆவது திரைப்படம் ஆகும்.

பலக்கட்டங்களாக நடைபெற்று வரும் இந்தப் படத்தின் டைட்டில் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. டீசரின் படி இந்தப் படம் கொடி கம்பம் வைப்பதில் ஏற்படும் அரசியல் சார்ந்த பிரச்சினைகளை பேசும் என்று தெரிகிறது. கவுதம் ராம் கார்த்திக் நடிக்கும் அவரது 19-வது திரைப்படத்திற்கு "ப்ளடி பாலிடிக்ஸ்" என தலைப்பிடப்பட்டுள்ளது.

கவுதம் ராம் கார்த்திக் மற்றும் டாடா இயக்குநரின் புதிய கூட்டணியுடன் இந்தப் படத்தில் செல்வராகவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்திற்கு இயக்குநர் ராஜுமுருகன் வசனம் எழுதியுள்ளார். இந்தப் படத்தின் ஒளிப்பதிவு பணிகளை பிரதீப் காளிராஜா மேற்கொள்ள, தீபக் எஸ் படத்தொகுப்பு பணிகளையும், அபிஷேக் ஸ்ரீனிவாஸ் சண்டைப்பயிற்சி கொடுத்துள்ளார்.



சாம் சி.எஸ். இசையமைத்துள்ள இந்தப் படத்தின் பாடல்களை யுகபாரதி, கணேஷ் கே பாபு மற்றும் சௌமியா பாரதி ஆகியோர் எழுதியுள்ளனர். இந்தப் படம் குறித்த அடுத்தடுத்த அப்டேட்கள் விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

முனிவர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

# புதுக் கவிதை பகுதிகள்





## பொய்கள்!

நம்ம தலை மேல...
நெருப்ப வைச்சு தண்ணியில
நடன்னு சொல்லுவான்!
நம்ம தோள் மேல
சுமையை ஏத்திட்டு
தலைவிதியை மாத்திரன்னு
சொல்லுவான்! நம்ம நாட்டு
மேல கடனை ஏத்திட்டு
நாளை எதிர்காலம்
நமக்கு இருக்குன்னு
சொல்லுவான்!
விதியை நம்பாதே
வெறிகொண்டு வீரனாய்
போராடுன்னுசொல்லுவான்!
இருக்கின்ற பிரச்சினை
எல்லாம் என் ஆட்சியில்
மாறும் என்று
சொல்லுவான்! நாட்டு
மக்களுக்கு சேவை
செய்யவே
நான் இருக்கிறேன் என்று
சொல்லுவான்!தேர்தல்
வாக்குறுதியை நிறைவேற்ற
வில்லையென சுட்டி காட்டி
கேள்வி கேட்டால் எதுவும்
நம் கையில் இல்லை என்று
சொல்லுவான்! கடைசியில்
ஊழல் வழக்கில் கைதாகி
நான் சொல்வதெல்லாம்
உண்மை உண்மையைத் தவிர
வேறில்லை என்று
நீதிமன்றத்தில்
சொல்லுவான்!இவை
வேறொன்றுமில்லை...
ஐந்தாண்டுக்கு ஒரு
முறைஅப்பாவி மக்கள்
நம்பி தொலைக்கும்
அரசியல்வாதிகளின்
பொய்கள்!



**கவிஞர் ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்



## மழை

சுதந்திரமாகச்
சுற்றித்திரியும்
மேகக்குழந்தைகளைச்
செல்லமாய் அழைக்கும்
மரத்தாய்மார்கள்
கூட்டம் எத்தனை எத்தனை!

அவற்றைக்
கொஞ்சத்துடிக்கும்
மேகக்குழந்தைகளின்
ஆனந்தக்கண்ணீர் தான்
மழையோ?!



இல்லை
இடிப்பூச்
சாண்டியின்
மிரட்டலைக்
கண்டு பயந்து
நடுங்கிய மேகக்
குழந்தைகளின்
அழுகையோ?!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## காற்றுள்ள போதே தூற்றிக்கொள்!

அறுசீர் மண்டிலம்.

இளமையில் பணத்தை
ஈட்டினால் எதிரிலே வந்திடும்
முதுமையில் களிப்புடன்
வாழ்வினை வாழலாம்
கனிவுடன் காலமே கழியுமே!
வளமையே கூடிடும் காலமே
வண்ணமாய்ச் செல்வமும்
சேருமே எளிமையாய்
வாழ்வினை நடத்திடின்
ஏற்றமாய் இனிமையாய்
வாழலாம்!

தேவையை மட்டுமே
தேர்ந்தெடு தேனென
அவற்றையே வாங்கிடு
ஆவலாய் எதையுமே
வாங்கிடின் அவதியே
நம்மிடம் வந்திடும்!
பாவமும் செய்திடல்
தவிர்த்திடு பாங்குடன்
புண்ணியம் சேர்த்திடு
மேவிடும்
காற்றினால்
வந்திடும்
மேன்மையாம்
மொழியிது
தத்துவம்!



**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை

## சத்துணவு வீதியிலே..

சத்துணவு வீதியிலே...
வாங்கிடவே மனமில்லையோ
சந்தையிலே சத்தான
காய்கறிகள் பாரீர்!

இளஞ்சிவப்பு கேரட்
இனிமையுடன் அழைக்க...
பசுமைக் கீரை பகட்டாக
காட்சியளிக்க...

செக்கச்சிவந்த தக்காளி
செழுமையாக உருள...
மரத்தில் தொங்கியபடி
முருங்கை ஆட...


புன்னகை மலராக
புடலங்காய் பூக்க...
பொன் வட்டமாக
பொலிவூட்டும் பூசணி

நங்கையின் மென் விரலாக
வெண்டை
விருந்துக்கும் மருந்துக்கும்
உதவும் பாகல்
மசாலா மணம் பரவும் பூண்டு

வீதியிலே சத்தான
காய்கறிகள்
பாரீர்!
சநதோஷமாய்
வாங்கிடவே
மனமில்லையோ!



**நா.பத்மாவதி**
கொரட்டூர்



வலை வீசத் துடிக்கும் எனக்கு
உன் வாள் வீச்சு மயக்கம் தர

புன்னகைக்கும் கண்
விளிம்பில் என்னை மறந்து
போனேன் என்பேன்

கண்ணசைவிற்கு
காத்திருக்கும் எனக்கு

எண்ணமெல்லாம் நிறைந்து
என்னுள் வண்ணமயமாய்
வந்துவிடு நீயும்

வழியில்
விழிவைத்து
தடம்
பார்த்திருப்பேன்



**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## போரில்ல உலகம் தேவை

ராமர்,பாபர்,இயேசு
எல்லோருக்கும்
மூன்று எழுத்துதான்,
நாமம்,குல்லா,சிலுவை
அடையாளம் கூட
மூன்று எழுத்துதான்,
கோவில்,மசூதி,சர்ச்
இவைகள்கூட
மூன்று எழுத்துதான்,
பின்னே ஏன்?
சண்டை,குண்டு,சேதம் என்ற
மூன்று எழுத்துக்கள்?!
உண்மை,அன்பு,அமைதி
இவைகளே~நமது
இன்றைய தேவை
அமைதியான உலகம்
அமைப்போம்.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்:
விடிவதற்குள் வா!
ஆசிரியர்: சுஜாதா
வெளியீடு: கிழக்கு பதிப்பகம்
விலை : ₹185
தொடர்புக்கு: 044 – 4200 9603




கல்கியில் தொடராக வந்த இக்கதை மண்டைக்காடு என்ற ஊரில் நடந்த மதக்கலவரத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது.

சவுதியிலிருந்து தன் ஊருக்கு வரும் கனகசபை, வீடு அலங்கோலமாக இருப்பதையும், மனைவி கிரிஜா அங்கே இல்லாதது கண்டு திகைக்க கீழே இருந்த துண்டு சீட்டில் விடிவதற்குள் வந்து விடு - ர.சா என இருப்பது பார்த்து ரத்னசாமி வந்தானா?எனக் கொதிக்கிறான்.

அவன் மனைவி சேலையின் ஒரு பகுதியை நாய் ஒன்று கவ்வியிருந்ததைப் பார்த்து பாதிரியார் இருக்கும் சர்ச் பின்னால் உள்ள கல்லறையை சதாசிவம் ஒரு கும்பலோடு ,தோண்டமுற்பட மீனவர்களுக்கும் இவர்களுக்கும் சண்டை மூண்டு ,இவன் வீட்டின் அருகே, துபாய் செல்ல விரும்பும், மலையாள உண்ணி உட்பட சில தலைகள் சாய, ஊரடங்கு உத்தரவு போலீஸ் காவல் என பிரச்சினை பெரிதாக, இதனிடையே சின்ன வீடு பாக்கியராஜ் எதிர்வீட்டு ஓமனாவிடம், சைக்கிள் ரோமியோ உதவியுடன் வழிவது போல, கனக சபை அதையும் தாண்டி உண்ணியின் சேச்சி தேவகியிடம் கொஞ்சம் அத்துமீறி,அவளைத் திருமணம் செய்வதாக எல்லாம் வாக்கு தர, அவன் மனைவி கிரிஜா கிடைத்து விட்டாள் எனத் தகவல் வர, பின்னர் என்ன ஆனது? அறியப் படியுங்கள்....

**ஸ்ரீகாந்த் திருச்சி**

# சூஃபியின் கால்களில் பூமியின் ரூஹ்.

சூஃபியை வைத்து எழுதப்பட்ட இன்னொரு கவிதை சூஃபியின் கால்களில் பூமியின் ரூஹ். அரபு மொழியில் உயிர், ஆத்மா, அல்லது ஆவி என்று பொருள்படும் சூஃபி. இது இறைவனால் மனித உடலுக்குள் ஊதப்பட்டு, உயிருடன் இயங்க வைக்கும் நுட்பமான, கண்ணுக்குத் தெரியாத சக்தி வாய்ந்த ஆன்மீகப் பொருளாக இஸ்லாமிய நம்பிக்கையில் கருதப்படுகிறது. இது இறைவனின் கட்டளைக்கு உட்பட்டது மற்றும் உடலின் இயக்கத்திற்கு ஆதாரமானது.

சூஃபியின் இசையென்பது பெரும் மழையைப் போன்றது அதில் நனையவோ நீந்தவோ ஆசைப்படுபவர்கள் பூமியிலிருந்து குதித்து விடுங்கள். என முடிகிறது இக்கவிதை. இஸ்லாமிய ஆன்மீகத்தின் பக்தி இசை வடிவமாகும் சூஃபி இசை . இது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான அன்பை வலியுறுத்தி, ரூமி, புல்லே ஷா போன்ற கவிஞர்களின் பாடல்கள் மூலம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி பேரின்ப நிலையை அடைய உதவுகிறது. இது ஆத்மார்த்தமான, தியானம் போன்ற அனுபவத்தைத் தரக்கூடியது. பூமியிலிருந்தால் நனைய முடியாது என்கிறார். பூமி மீது பற்றற்று இருக்க வேண்டும் என்கிறார்.

ஒரு மண்டை ஓடு சிரிக்கிறது என்னும் கவிதையில் சற்று நேரத்தில் மன்னருக்காக வாங்கிய அதிநவீன சொகுசு விமானம் வரப்போகிறது அரசரும் கார்ப்பரேட் மந்திரிகளும் அரண்மனையின் மாடத்திலிருந்து அண்ணாந்து பார்க்கிறார்கள் ராட்சத சிலுவைப் போலத் தரையிறங்குமதில் அறையப்பட்டிருக்கிறார்கள் தேசத்தின் மக்கள் என்று எழுதியுள்ளார். மன்னர் என்று பிரதமரையே குறிப்பிட்டுள்ளார். மக்களின் வரிப்பணத்திலேயே மன்னர்கள் சொகுசாக வாழ்வதாக விமர்சித்துள்ளார். சொகுசு விமானத்தில் தேசத்தின் மக்கள் அறையப்பட்டிருக்கிறார்கள் என்கிறார். அறையப் பட்டுள்ளார்கள் என்பது உயிருடன் அறையப்பட்டுள்ளார்கள் என்று உணர்த்தியுள்ளார்.

தியானம் கலைக்காதீர் என்னும் தலைப்பில் குட்டி குட்டி மீன்களாக தொட்டி மீன்கள், வளர்ப்பு மீன்கள் பற்றிய குட்டிக் குட்டிக் கவிதைகள். மனத்தில் நீந்தும் மூன்று குட்டி மீன்கள். வாஸ்து மீனுக்கு இரையாக கொட்டப்படும் தங்கமீன்களுக்குப் பசியேயில்லை கண்ணாடிச் சிறையில் மீன்கள் தண்ணீர்க் கம்பிகளை நீந்தியே எண்ணுகின்றன. குடுவை விழுந்து உடைந்து சிதறி மீன்கள் துடிப்பதைக் காணச் சகியாமல் ஓடிவிடுகிறது தண்ணீர் மூன்றும் மூன்று விதமாக உள்ளன. ஒவ்வொரு விதமாக சிந்திக்கச் செய்கின்றன.

சூஃபிகளின் உலகத்தைக் காட்டும் கவிஞர் வலங்கைமான் நூர்தீனின் கவிதை உலகம் வித்தியாசமானது. கவிதைகளும் வித்தியாசமானது. கவிதைகள் எழுதும் முறையும் வித்தியாசமானது. கவிதைத் தலைப்புகளும் வித்தியாசமானது. கவிதைகள் தனித்து காணப்படுகின்றன. கவிஞரும் தனித்து காணப்படுகிறார். கவிதைகளை வாசிக்கும் போதும் ஓர் அலாதியான அனுபவத்தை ஏற்படுத்துகிறது. தொன்மங்களையும் கையாண்டுள்ளார். பூடகமாகவே பெரும்பாலான கவிதைகளை எழுதியுள்ளார். கவிதைக்கான அனைத்து உத்திகளையும் கவிதைகளில் புகுத்தியுள்ளார். மதம் சார்ந்தும் எழுதியுள்ளார். மனிதம் சார்ந்தும் எழுதியுள்ளார். உயிர்கள் சார்ந்தும் எழுதியுள்ளார். அழகியும் உண்டு. அரசியலும் உண்டு. வலங்கைமான் நூர்தீன் அவர்களுக்கு வசப்பட்டிருக்கிறது கவிதை மொழி. நவீனக் கவிதைகள் எழுதுவதில் நன்கு தேர்ந்தவர் என வலங்கைமானைக் கவிதைகள் அடையாளப்படுத்துகின்றன. சொற்கள் சாதாரணமானவை எனினும் வலங்கைமான் நூர்தீனின் கவிதைகளில் பயன்படுத்திய போது புது புது அர்த்தம் பெறுகின்றன. புது பொலிவு பெறுகின்றன. கவிதைகளின் செய்நேர்த்தியும் சொல்பொருளும் சிறப்பு. காலமி வம்சத்தின் கடைசிக் குதிரை கவிஞர் வலங்கைமான் நூர்தீனின் முதன்மை படைப்பாக உள்ளது.

**மௌவல் பதிப்பகம்**
**9787709687**



## பக்தை மீராவின் ஆசை

ஆயர்பாடி வீதியிலே–
அயராமல் எழுவேன்
எண்ணமெல்லாம்
வண்ணமாகும் ஹோலிபோல
யுகங்கள் பல கடந்தும்,
என் நெஞ்சமோ, உன்னிடம்
தஞ்சம் அடைகிறதே!


உன் மடியினில் முடிவிலா
நொடிகள்...

அந்நொடி முதல்,
என்னை தென்றலாய்
தழுவி மிதக்க,
தன்தோளில் தோழியாய்
என்னை சுமந்து செல்லும்–
என் கண்ணன்..! –

நம்பிக்கையும், தூய்மையும்,
பேரன்பும் நிலைபெற்ற அந்த
பேருலகில் நுழையும்
நன்நாள்வரை

உயிர் வாழ்வேன்!
அதுவரை...

உன் நினைவைச்
சுவாசித்து,
உனக்காகக்
காத்திருப்பேன்!



**ஸ்ரீதேவி கிருஷ்ணன்,**
பெங்களூரு



## ஓயுதல் அகற்று..

ஓடும் நதியலையும் ஓயும்.. ஓங்கி யெழும் புயலும் ஓயும்.. தேடும் பொன் பொருளும் ஓடும்.. தேயம் பிறந்த உயிர் ஓயும்! நானும் அது போல ஓய்வேன் என்று நினைத்தாயோ?
நாம் எழுதும் கவிதையில் என்றும் உயிர்த்திருப்பேனே.!

வேடன் கையி லொரு அம்பு.. நான் விடியல் காலை வரும் தெம்பு.. கூடும் நமது செயல் இதனை நம்பு.. நான் ஓய்ந்தேன் என்று நினைத் தாலது வம்பு..இவன் சாயும் மரமென்று நினைத்தாயோ? நான் ஓய்வேன் என்று கணக்குப் போட்டாயோ?

சிற்றெறும்பு பார் அது புற்றெழுப்பும்.. அந்த சிலந்திகள் பார் அது வலைப் பின்னும்.. எற்றிசையும் பறந்து தேனி இனிப்பைச் சேர்க்கும்.. இவைகளையே பார்த்திருந்த மனிதன் நானே.. இவன் ஓய்ந்து விடுவான் என்று நினைத்தாயோ? ஓயுதல் அகற்ற தோழர்களே எமைப் பின் தொடர்வீரே..!

## வள்ளலார் கண்ட கனவு.!

எல்லோரும் வயிறார உண்ண வேண்டும்.. இங்கு எங்கெங்கும் அருட்ஜோதி மின்ன வேண்டும்.!கொல்லாமை யோடு.. பசி இல்லாமையும்.. நம் உள்ளத்திலே பிறந்தின்றே ஒளிர வேண்டும்.!

பெட்டியில் பதுக்கி வைத்து உடல் வளர்ப்பார்.. பலர் ஒட்டிய வயிற்றோடு பசித்திருப்பார்.! தட்டினில் சோறிட்டுப் பகிர்ந்தளித்தால்.. அது தருமமே என்று உணரும் நாள் வருமோ?

அணையா அடுப்புகளில் தீ வளர்த்தே.. அணைப்போம் பசி என்ற நோய் தீர்ப்போம்! நினையா மாந்தர்களின் இதயத்திலே.. அருட் பெரும் ஜோதியினை ஏற்றி வைப்போம்.!



அழுகின்ற குழந்தையர்க்குப் பால் கொடுப்போம்.. தொழுதிவர் கை யேந்தும் நிலை மாற்றுவோம்.!பழுதில்லா சமுதாயப் பாதை யமைப்போம்.. அங்கே பசியில்லா நற்ப் பொழுதை நாம் படைப்போம்.!

**வே.கல்யாண்குமார்.**



## என்னுயிரே

உன்னை நிலவுயென்று
சொல்ல மாட்டேன்
எப்பொழுதும்
காணமுடியாது என்பதால்,,


உன்னை தென்றலென
சொல்லமாட்டேன்
சிலநேரம்
புயலாகும் என்பதால்,,

உன்னை பூக்களென்று
சொல்லமாட்டேன்
சில நாட்களில்
வாடிப்போகும் என்பதால்,,

உன்னை கவிதையென்று
சொல்லமாட்டேன்
சில தோழர்கள்
விமர்ச்சிப்பார்கள் என்பதால்

உன்னை என் உயிரென்பேன்
என்னில் கலந்து என்னில்
மடிவாய் என்பதால்,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



பெண்ணான என் மகளுக்கு
பொன் வாங்க முடியலியே...
விலை தினம் விண்ணை
முட்டுவது புரியலியே...!

நல்ல குணம் இருந்தும்
நல்ல வரன் வரலியே...
நாட்பது சவரன் போட்டு
மணம் முடிக்க முடியலியே...!

ஏழையாய் இருப்பது
யாருக்கும் புடிக்கலியே...
எஜமான நான் இருக்க
என்னால் முடியலியே...!

ஏழை எங்களுக்கு எதற்கு
பெண் குழந்தை
குடிசை வீட்டுக்குள்ளே
அடுப்பு ஊத
தேவையில்லை....!

வருமையை இரும்பாக்கி
வாழ்க்கையை மெய்யாக்கி
தேடி தேடி ஓடி
உழைக்கிறோம் ...
ஒருவேலை உணவுக்கு...!

பொன் வாங்க
முடியாவனுக்கு....
பெண் குழந்தை
எனக்கு
எதற்கு....!!



**பொன். கருணா**
நவி மும்பை



## முதியோர் இல்லங்கள்

முதியோர் இல்லங்கள்
நாட்டி
பணம் இருப்பவன்
குணமில்லாமல்
பெற்றோரை முதியோர்
இல்லத்திற்கு அனுப்புகிறான்,

பணம் சம்பாதிக்க
நினைப்பவனோ
அவனுக்கு தோள்கொடுக்க
பல,விடுதிகளை
முளைக்க வைக்கிறான்,

ஏழைகள் எங்கேனும்
பெற்றோரை முதியோர்
இல்லத்திற்கு அனுப்புவதை~
நீங்கள் பார்த்ததுண்டா?
இருக்கவே,,,,இருக்காது
ஏனென்றால்~அவர்களிடம்
எப்போதுமே பணம்
இருக்கவே,,,இருக்காது,

பசி வந்தால்
பத்தும் பறந்துபோகும்
என்பார்கள் ~~இங்கு
பணம் வந்தால் பத்து மாதம்
சுமந்தவர்களைக்கூட
பறந்துப்போக வைக்கிறோம்

நமக்கு முகவரி கொடுத்த
முதியவர்களுக்கு
முகவரி இல்லாமல்
செய்கிறோம்,

வரியவர்கள் செய்யாதை
வருமான வரி கட்டுபவர்கள்
செய்கிறார்கள்,
நாளை,,,, நீங்களும்,
நானும்கூட நிச்சயமாய்
முதியோர்களாய் ஆவோம்
தேவை இக்கணம்
சிக்கனம் அல்ல,
மெத்தனமில்லாத
கவனம் தோழர்களே?!



**நாகை ஆசைத்தம்பி**
கோவை



# புதுக் கவிதை பகுதிகள்

## நம்பிக்கை

இருளை வெல்லும் சுடர்!
விழும் போது தாங்கும் சிறகு!

நம்பிக்கை ஒன்றே வாழ்வின்
அமுதம்!

விழுந்த இடம் எல்லாம்
முற்றுப்புள்ளி அல்ல
மீண்டும் எழுவதற்கான சிறு
இடைவெளி மட்டுமே!

நம்பிக்கை என்பது
பாலைவனத்தில் முளைக்கும்
சிறு பச்சைத் துளிர்!

சிறகுகள் இல்லை
என்று வருந்தாதே உன்
நம்பிக்கையே உன்னை

வானவரை அழைத்துச்
செல்லும் !

கடல் அலைகளைப் போல
தோல்விகள் வந்தாலும்
கரை சேரும் வரை ஓயாமல்
போராடு!

இருப்பது ஒரு முறை
வாழப்பழகு!

பாதைகள் மாறலாம்
பயணத்தை நேசி!

நேற்று ஒரு பாடம், நாளை ஒரு
கனவு, இன்று மட்டுமே உன்
உயிர் மூச்சு!

விதைக்கப்படும் விதைகள்
எல்லாம் மண்ணுக்குள்
மறைவது அழிவதற்கு அல்ல,
விருச்சமாய் எழுவதற்கு!

உன் கால்கள் தளர்ந்தாலும்
உன் நம்பிக்கை தளரக்கூடாது
அதுவே உன் இலக்கை
அடைவதற்கான
ஊன்றுகோல்!

இருள் சூழ்ந்த உலகிற்கு ஒரு
மெழுகுவர்த்தி போதும்!

தோல்வி சூழ்ந்த வாழ்விற்கு
உன் மன உறுதி போதும் !

இருள்சூழும் நேரத்தில்
இதயத்தின் தீபமே நம்பிக்கை!

நம்பிக்கை கொண்டால்
கல்லை கூட சிலையாகச்
செதுக்கலாம் உன் முயற்சியை
மட்டும் கைவிடாதே!



அலைகள் ஓய்வதில்லை–
அதுபோல் உன் உழைப்பு
ஓயக்கூடாது!

**பெ.திருமுகம்** ஆசிரியர்
மணமேல்குடி

---



1. பேப்பர் போடுகிறவன் கூட
கதவை தட்டாமல் எறிந்து
விட்டு தான் போவான்
வாய்ப்பு மட்டும் கதவை
தட்டுமா என்ன நாம்
தான் வெளியே போய்
தேடவேண்டும்

2. காசு கொடுத்து
எதிரிகளை சம்பாதிக்கும்
ஒரு வித்தியாசமான
விளையாட்டு கடன்
கொடுப்பது

3. பணத்திற்கு ஏற்றார்
போல் கிடைப்பது பொருட்கள்
மட்டுமல்ல இன்றைய
கல்வியும் தான்

4. நம்முடைய
வாழ்வில் அதிகம்
கற்றுத் தருவது
இரண்டு விஷயங்கள்
ஒன்று தன்மானம்
மற்றது அவமானம்

5. தன் வாழ்க்கையில்
அடிபட்டு மிதி பட்டதை
தனக்கு எதுவும் நடக்காதது
போல்மற்றவர்களுக்கு
சொல்வது தன் தத்துவம்

---------------------

1.தனக்கு உதவ யாரும்
இல்லை என உணர்ந்தவன்
எடுத்து வைக்கும் ஒவ்வொரு
அடியும் நிதானமாகத்தான்
இருக்கும்

2. பணத்தின் தேவை
அதிகரிக்கும் போதெல்லாம்
உறக்கத்தின் நேரம் குறைந்து
கொண்டே போகிறது

3. பெண் தேடும் போது
கேவலமாகவும் ஆம்புலன்சில்
போகும்போது கடவுளாகவும்
தெரிபவர்தான் டிரைவர்

4.அன்பும் ஒருவித போதை
தான் ஒரு முறை ருசித்து
விட்டால் அடிமையாகி
விடுகிறது மனசு



5.ஆசையை தூண்டிவிட்ட
மனசு தான்தவறுக்குப்
பின் தத்துவம் சொல்லும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---



## சேவல்.

கூறைமீ.து நின்று நீ
கூவிடுவாய் கூப்பாடு!
யாரேனும் உறவுவர
இலையினிலே நீ சாப்பாடு!

முருகனுக்கு கொடியாகி
பறக்கின்ற சேவல்..
கொடியேற்ற திருவிழாவில்
பலியாவாய் படையல்!

கூடையிட்டு மூடிவைத்து
வளர்கின்ற பிள்ளை..
சிறகிருந்தும் வளர்த்தவரை
மறந்துவிட்டு பறப்பது
நீயில்லை!

குப்பைமேடு குடிசைவீடு
சுற்றிவந்து கூவாய்..
குப்புறப் படுத்தவரை
எழுப்பிவிட கூவாய்.!

எத்னையோ இரவுகளில்
கூவிடுவாய் விடியல்!
அர்த்தமுள்ள வாழ்வுதரும்
சேவலுக்கோர் விடியல்?

---------------------

நட்பே வணக்கம்.!
உப்பு உறப்பு.. இல்லாது
உலகில் இருந்திடக் கூடும்.!
நட்பு இல்லாது வாழ்க்கை
உண்டோ?
ஆழக்கடலில் நீந்தக்கூடும்..
தோழன் அருகே இருந்தால்
போதும்.!

வாட்டம் வறுமை வந்தால்
விலகும் உறவு! ஒட்டம்
எடுக்கும் .. உதறித்தள்ளும்!
உறவு! கூட்டாளி போதும்
எப்போதும்!


வம்பர்கள் அதிகம் இருக்கும்
உலகிலே நண்பர்கள் நமக்கு
நிழலாவார்!

அனேகர் காசுக்கு பின்னாலே
செல்கின்ற உலகிலே..
சினேகிதர் ஒருவரே
சிறகாவார்.. கடந்து வர
உதவும் படகாவார்!

ஆயிரம் உறவுகள் பேருக்கு
இருக்கலாம்.. ஆயினும்
இறுதிவரை தோள்சுமந்து
நடப்பான் தோழனே.!

**வே.கல்யாணகுமார்.**

---



## செல் பெயர்ச்சி!

திருநள்ளாறு சென்றவர்
அவ்வளவு கூட்டத்திலும்
திரும்பி நின்று
சனிபகவானுடன்
மின்னல் வேகத்தில்
ஒரு செல்பியெடுத்துக்



கொண்டு
கூட்டத்தை
விட்டு
வெளியே
வந்துப்
பார்த்தபோது
செல்லைக்
காணவில்லை!

**சின்னஞ்சிறுகோபு,**
சென்னை.

---

கலை உலகமே நீ அந்த தே
விழித்திரு...

குட்டிச்சுவருக்கு
எட்டுக் கதையெழுதி...
கட்டித்தமிழிலே கலைகளின்
ஊடே கண்டதைப் புகுத்தி...

பெட்டிப் பாம்பைப் போல்
பேதை மக்களை கட்டிப்
போட்டிடும் கள்ளிச்
செடிகளே...

முல்லைக் கொடிகளை...
முடக்கிய கள்ளியை
வேரொடு பிடுங்க
விழித்திரு...



கலை உலகமே
நீ விழித்திரு...
விழித்திரு...
விடிவெள்ளி
விளைந்தது
விழித்திரு...
விழித்திரு...!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

---

## அச்சமில்லை அச்சமில்லை

பாரதியின் வரிகளில்
பரவசம் கொள்கிறது மனம்

எடுத்த செயலில்
இடையூறு வரினும்
அச்சமில்லை அச்சமில்லை

பாதையின் முட்கள் கூட
சாதனையாய் மாற்றும்
அச்சமில்லை அச்சமில்லை

அமிலச் சொற்கள்
அன்புப் பூக்களாகும்
அச்சமில்லை அச்சமில்லை

முயற்சியின் விமர்சனங்கள்
அகம் நிறைத்த
வாழ்த்துக்களாகும்
அச்சமில்லை அச்சமில்லை

முயற்சியின்
விளைச்சல் வெற்றியாய்
அறுவடையாகும்
அச்சமில்லை அச்சமில்லை

எண்ணத்தில் துணிவு
எடுத்த செயலை
வெற்றியாக்கும்
அச்சமில்லை அச்சமில்லை

நெஞ்சத்தின் நேர்மை
நேரிய வாழ்வாகும்
அச்சமில்லை அச்சமில்லை

நலமிகு சிந்தையும்
வளமான வாழ்வும்
வற்றாத வளமும்
நல்லதொரு நட்பும்
நலம் விரும்பும் சுற்றமும்
யாவுமாகி இன்பம் நல்கும்

தடைகள் யாவும் படிகளாகும்
தளராத மனம் கொள்வோம்



தாரக
மந்திரமாம்
அச்சமில்லை
அச்சமில்லை
தரணியிலே
வாழ்வளிக்கும்
தடையில்லை
புறப்படுவோம்.

**தமிழ்நிலா**

---

கூடடையப் பிடிக்காமல்
இந்த இரவில் விண்ணில்
பறக்கின்றன சில
பறவைகள்.. அவர்களுடன்
மேகத்தின் மீது



அமர்ந்திருக்
கிறோம்
நீயும் நானும்..
தரை இறங்கப்
பிடிக்காமல்!

**ரிஷபன்**

---

கவியென்றால் ககனமே
கைகூப்பும் கருத்தாழ
மிக்கதுவா கவிதை...

திருஎன்று தெருவோரம்
போனவர்க்கும் மரியாதை
செய்வதுவா கவிதை...

கண்கட்டு
வித்தையைப்போல்
வாழ்க்கையிதை
பண்கொண்டு பேசுவதா
கவிதை ..

உணர்ச்சிகளை ஒரு
வரியில் ஓசையாக்கி
உதிர்த்துவிட்டுப்
போவதுவா கவிதை...



உள்ளத்தில்
ஓவியமாய்
ஒளிந்திருக்கும்
கள்ளமில்லா
உணர்வுகளே
கவிதை...!
நடைமுறை
உண்மைகளை
நாட்டவர்க்கு நறுக்கென்று
உணர்த்துவதே கவிதை...!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

---



நீ செல்லும்
பாதையெங்கும்....
பூங்காக்கள்..



நீ பேசும்
பேச்சில்...
நீர்வீழ்ச்சிகள்..

உன்
புன்னகை

யெங்கும்பூங்காற்று...

உன் பார்வையில்...ரோஜா
நாற்று..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---



## பாட்டி !

அதிகாலை நடந்து
செல்கையில்.... பலரும்
தவறவிட்ட சில்லறை
நாணயங்களும்...
வாகனத்தில் இருந்து விழும்
சிறு உதரி பாகங்களும்...



வெகு
விரைவில்
தட்டுப்பட்டு
விடுகிறது !
கூன் விழுந்த
அம்மாச்சி
பாட்டியின்
கண்களில் !

**எம்.பி.தினேஷ்.** கோவை

---

## வாழ்க்கை

கடைவாயில் நிற்கும்
காபியின் மிடறு
நாவைக் கடப்பதற்குள்
அதன் நூறு சத சுவையை,
அடுத்தென்ன திகைப்பைக்



எடுத்துவருமோ
வாழ்க்கை
என்ற
நினைப்புகள்
நாற்பது சதம்
ஆக்கிவிடுகிறது.

**கே. பி.**
**ஜனார்த்தனன்**

---



அன்பின் உருவானவள் !
ஆற்றல் களமானவள் !

இன்சொல் வளமானவள் !
ஈகை திறமானவள் !

உதவும் மனம் கொண்டவள்!
ஊக்கம் தளராதவள் !

எஃகின் உறுதியானவள்!
ஏற்றத்தின் வழியானவள் !

ஐக்கியம் விழைபவள் !
ஒத்து உதவி வாழ்பவள்!

ஓதி அறிவதில் வல்லவள் !
ஔடதமாய் விளங்குபவள் !

இஃதே
பெண்மணியானவள்!



பெண்
தியாகத்தின்
மறுஉருவம்!

பெண் என்று
சொல்வோம்!
பெருமையுடன்
சொல்வோம்!

**ம. இந்திராணி**
திருச்சி

---

1. ஆணி நிமிர்ந்து நின்றால்
சுத்தியலுக்கு பிடிக்காது
மனிதன் நிமிர்ந்து நின்றால்
சுற்றி உள்ளவர்களுக்கு
பிடிக்காது

2. இயலும் என்று நினைத்து
விட்டால் இயலாதது என்று
எதுவும் இல்லை

3.மன்னிக்கவும் மன்னிப்பு
கேட்கத் தெரிந்தவர்களுக்கு
மட்டுமே சொந்தமானது
அன்பு

4.வண்ணம் மாறிய
இலைகள் மரத்தின்
பிடிமானத்தை
மதிப்பது இல்லை

5. கடவுளை விட எமனே
சிறந்தவர் எமன் இறந்த
பிறகு தான் சித்திரவதை



செய்கிறார்
கடவுள்
உயிரோடு
இருக்கும்போதே
சித்திரவதை
செய்கிறார்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---



வாழ்க்கையின் அருமை
மனைவி பிரியும் போது...
பாசத்தின் அருமை
குழந்தைகள் பிரியும் போது...
நண்பனின் அருமை
பணம் இல்லாத போது...
சுகத்தின் அருமை
பொருள் இல்லாத போது...
சமூகத்தின் அருமை
மதிப்பு இல்லாத போது...
உடலின் அருமை
நோய் இல்லாத போது...
மனதின் வலிமை சச்சரவுகள்
இல்லாத போது...
எல்லாம் இழந்த பின்பும்
மாறாத அன்பு கிடைக்கும்
ஒரே இடம் தாயின்
அன்புதான்.
அம்மா... அம்மா...
என்றைக்கும் நிலைக்கும்,
கொடுக்கும் எதையுமே
எதிர்பார்க்காமல்
இறுதிவரை அது அம்மாவின்
அன்பு, அம்மாவின்
அன்புதான்.

**Dr Harish Kumar D**
MBBS (MD) C Diab USA

---

## மறையும் உறவுகள்

நீதிக் கதைகளையும்
சிந்தனைக் கருத்துக்களையும்
கூறும் தாத்தா பாட்டி!

அத்தைமடி மெத்தையடி
என்றே படுத்துறங்க அத்தை!

கடைவீதிக்குச் சென்று
தின்பண்டங்கள்
வாங்கி தரும் மாமா!


சில்லரையை அள்ளி
தரும் சினேகித சித்தப்பா!

சிரிப்பு மத்தாப்புகளை
பகிர்ந்து கொள்ளும்
சினேகிதி சித்தி!

பொறுப்புக்களை
எடுத்துரைக்கும்
பொறுப்பாளியாய் பெரியப்பா!

பதமாகவும் பாங்காயும்
பார்த்துக் கொள்ளும்
பெரியம்மா!

இஃதோர் உறவுகள்
இனிதானதே!



இனிய இந்த உறவுகளோ
இன்றோ எங்கே என்றே
தேடிடும் அவலம்?

பெருகாமல் மடிவது
அபூர்வமான உயிரினங்கள்
மட்டுமன்று!

மனித உறவுகளும் தான்!

மனித உறவோ மகத்தானது !

மகத்தான மனித உறவை
மதிப்போம்!



உறவை போற்றி
உயர்வை பெறுவோமாக!

**பா.கலைமகள்**
விழுப்புரம்

---




## தமிழுக்கு அமுதென்று பேர்!

தமிழுக்கு அமுதென்று பேர்! என்று அன்றே
தமிழை அமுதமென்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் !
அமுதம் என்பது இறப்பு தராத அருமருந்து என்பர்
ஆம் தமிழ் படித்தவருக்கும் இறப்பு இல்லை!
பூத உடல் பூமியை விட்டு மறைந்த போதும்
புகழுடல் தமிழறிஞர்களுக்கு நிலைத்து நிற்கும்!
ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திட்ட வள்ளுவன்
இன்றும் நிலைத்து நிற்கிறான் உலகம் முழுவதும்.
அவ்வை இன்று உலகில் இல்லை என்றாலும்
அவள் பாடிய ஆத்திசூடி நிலைத்து நின்றது!
ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ்
அகிலத்தின் முதல்மொழி நம் தமிழ்மொழியன்றோ!
முதுமை வராமல் காக்கும் அருமருந்து தமிழ்
முத்தமிழ் அறிந்து கொண்டால் இளமை நிலைக்கும்!
தொன்மை இலக்கியம் தொல்காப்பியம் மட்டுமல்ல
தொல்காப்பியத்திற்கு முந்தைய அகத்தியமும் உண்டு!
சில நூறு ஆண்டு வரலாறு மற்ற மொழிகளுக்கு
பல நூற்றாண்டு வரலாறு தமிழுக்கு மட்டுமே!
நேற்று பெய்த மழையில் முளைத்த காளான் மற்றமொழி
நானிலம் தோன்றிய போதே தோன்றியது தமிழ்மொழி
தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றார் புரட்சிக்கவிஞர்
தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்பேன் நான் !
தமிழன்னையை அரியணை ஏற்றிட தரணி வாழ்
தமிழர்கள் யாவரும் ஓரணியில் அணி திரள்வோம்!

## தமிழ்காக்கக் கொட்டு முரசே கொட்டு !

தரணியில் முதல்மொழி நம் தமிழ்மொழி
தரணி போற்றிடும் தன்னிகரில்லா மொழி!
தமிழை அமுதென்றும் அமுதே தமிழென்றும்
தன்னிகரில்லாக் கவிஞர்கள் பாடி உள்ளனர்!

சொற்களின் சுரங்கம் நமது தமிழ்மொழி
சொக்க வைக்கும் ஒலிப்பு தமிழ்மொழி !
உலகமொழி ஆங்கிலத்திலும் பல சொற்கள்
உள்ளன தமிழ்ச்சொற்கள் அறிந்திடுவீர் !

பல்லாயிரம் வயதான மொழி பைந்தமிழ்
பண்ணிசை முதலில் ஒலித்ததும் தமிழ்மொழியே!
உலக மொழிகளின் மூத்தமொழி தமிழ்மொழி
உலக மொழிகளின் தாய்மொழி தமிழ்மொழி !

உலகம் முழுவதும் ஒலிக்கும் தமிழ்மொழி
உணர்வினை ஊட்டிடும் உன்னதம் தமிழ்மொழி !
உயிரெழுத்து மெய்எழுத்து உயிர்மெய் எழுத்தென
ஒப்பற்ற எழுத்துக்களைக் கொண்டது தமிழ்மொழி !

சங்கம் வைத்து வளர்த்த மொழி தமிழ்மொழி
சங்கப்பாடல்கள் தந்த மொழி தமிழ்மொழி !
இலக்கண இலக்கியம் உள்ளமொழி தமிழ்மொழி
ஈடில்லாப் பெருமைகள் பெற்றமொழி தமிழ்மொழி !

உலக அறிஞர்கள் போற்றியமொழி தமிழ்மொழி
உலகிற்கு பண்பாடு பயிற்றுவித்த மொழி தமிழ்மொழி !
செம்மொழி எம்மொழி சிறந்தமொழி தமிழ்மொழி
செந்தமிழ் நாட்டின் தாய்மொழி தமிழ்மொழி !

காப்பியங்கள் காவியங்கள் உள்ள மொழி தமிழ்மொழி
கற்கண்டாய பேசி இனித்திடும் மொழி தமிழ்மொழி !


பன்மொழி அறிஞன் பாரதி பாட்டில் பாடினான்
பைந்தமிழ் மொழி போல இனியது இல்லை என்றான் !

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆராய்ந்தபின்
மொழிந்தார் தமிழ்மொழியே முதல்மொழி என்று !

முதல்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட
மண்ணின் மைந்தர்கள் பெருமை கொள்வோம்!

தமிழ்காக்கக் கொட்டு முரசே கொட்டு
தமிழே முதல் மொழியென்று கொட்டு முரசே !

**கவிஞர் இரா. இரவி !**




**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெவப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**












































FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருததம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
BUSINESS NEWS
DAILY ePAPER
SPORTS
TRAVEL GUIDE
EBOOK LIBRARY
TECH TRENDS
HEALTH FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
FOOD RECIPES


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




## பழமொழிகளும் அதன் உண்மை விளக்கமும்!



**பந்திக்கு முந்திக்கோ படைக்கு பிந்திக்கோ நாம் அறிந்த விளக்கம் :**

விருந்து நடக்கும் இடங்களில் சாப்பாட்டுக்கு முதல் வரிசையும், போரில் கடைசியாளாக இருப்பின் தற்காப்பதற்கு நல்லதும் என நேரிடையாக பொருள் கொள்ளப்படும் அதிக உலக வழக்கில் உள்ள பழமொழியாக இது அறியப்படுகிறது.

**விளக்கம் :**

இந்த பழமொழியின் உண்மையான வடிவம் பந்திக்கு முந்தும் படைக்கு பிந்தும் என்பதாகும். இந்தப் பழமொழியை சாதாரணமாக உட்பொருள் கொண்டால் பந்திக்கு அமர்ந்து சாப்பிடுகையில் கை முந்தும். போர்க்களத்தில் வேலோ, வாளோ, வில்லுக்கோ கை பிந்தும். எவ்வளவு கை பிந்துகிறதோ அந்தளவிற்கு அந்தப் படை முந்தும். இதல்லாது இன்னொரு பொருளையும் இதனூடே சொல்வார்கள். அந்த கால புலவர்கள் உடல் உறுப்புகளைப் பற்றி பாடி வைக்கையில் நமது வலது கையைப் பற்றி சொல்லும்போது பயன்படுத்தப்பட்ட வாக்கியமே இந்த பழமொழி. வில் அம்பு பயன்படுத்தி நடந்த போர்களில் வில்லில் அம்பு வைத்து நான் இழுக்க கை பின்னே போகும். அதே கை உணவருந்தையில் முன்னே போகும். இதை அர்த்தம் கொண்டே இந்த பழமொழி பயன்படுத்தப்பட்டது.

**ஆறு கெட நாணல் விடு, ஊரு கெட நூல விடு நாம் அறிந்த விளக்கம் :**

நேரடியாய் பழமொழியைப் பொருள் கொள்ளப் பார்த்தோமானால் ஆற்றை பாழாக்குவதற்கு நாணல் விட்டும் ஊரைக் கெட்டுப் போக செய்ய நூலை விடு என்பதாகவும் வரும். ஆனால் இந்த விளக்கம் உண்மை அல்ல.

**விளக்கம் :**

நூல் விட்ட ஊரும் நாணலற்ற ஆற்றுக்கரையும் பழுதாய் போகும் என்பதாய் அர்த்தம் கொள்ள வேண்டும். அதாவது படிப்பறிவில்லாத அதில் ஆர்வம் காட்டாத ஊர் எந்த வித முன்னேற்றமும் அடையாது. நாணல் போன்ற தாவர வகைகள் அதிகம் அடர்ந்திருக்கும் கரைப்பகுதி பலமுள்ளதாக இருக்கும். சீக்கிரம் ஆற்றினால் அரிக்கப்பட்டு கரைகள் பாதிக்கப்படாது என்பதாய் சொல்லப்பட்ட பழமொழி முன்னுக்கு பின் மாறி மருகி இவ்விதம் வந்து விட்டது.

## கொண்டைக் கடலைக் குழம்பு



கொண்டைக் கடலை உடலுக்கு மிகவும் சக்தியை அளிக்கவல்லது. கர்ப்பிணிகள், கடுமையான உடற்பயிற்சி செய்பவர்கள் கண்டிப்பாக கொண்டைக் கடலை சாப்பிட வேண்டும். கொண்டைக் கடலையை குழம்பு வைத்தும் சாப்பிடலாம்.

**தேவையானப் பொருட்கள்**

கறுப்பு கொண்டைக் கடலை - 1 கப்
வெங்காயம் - 2
தக்காளி - 1
இஞ்சி, பூண்டு
பச்சை மிளகாய் - 3
மிளகாய் தூள் - 1 ஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 ஸ்பூன்
மிளகுத் தூள் - 1 ஸ்பூன்
எண்ணை - 3 ஸ்பூன்
சீரகம் - 1 ஸ்பூன்
கறிவேப்பிலை, கொத்துமல்லி

**செய்முறை**

கொண்டைக் கடலையை இரவே ஊறவைத்து காலையில் தண்ணீரை வடித்து எடுத்துக் கொள்ளுங்கள்.

குக்கரை அடுப்பில் வைத்து எண்ணை ஊற்றவும்.

எண்ணெய் காய்ந்ததும் சீரகம் போட்டு பொரிந்ததும் வெங்காயம், கறிவேப்பிலை, பச்சை மிளகாய் போட்டு பொன்னிறமாக வதக்கவும். பின்னர் தக்காளியைப் போடவும்.

தக்காளி வதங்கியதும் இஞ்சி, பூண்டு விழுதை சேர்க்கவும். அடுத்து மிளகாய் தூள், மஞ்சள் தூள், மிளகு தூள், உப்பு ஆகியவற்றை போடவும்.

ஊறிய கடலையை இட்டு ஒரு கிளறு கிளறி 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து குக்கரை மூடி 5 விசில் வையுங்கள்.

கடலை நன்கு வெந்து கொண்டைக் கடலைக் குழம்பு திக்காக இருக்கும். இது சாதத்திற்கும் ஏற்றது. எனினும் இட்லி, தோசைக்கு மிக நன்றாக இருக்கும்.

குக்கரில் இல்லாமல் பாத்திரத்திலும் செய்யலாம். ஆனால் அதற்கு கொண்டைக் கடலையை முன்னரே வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். குழம்பிற்கு தக்காளி, வெங்காயம் வதக்கும் போது வேக வைத்த கடலையைப் போட்டு வதக்கி மற்றவைகளை அப்படியே செய்யலாம்.

-A.s.Govinda rajan
Kodambakkam Chenna

## மீம்ஸ்








## விடுகதை





| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



## ஜோக்ஸ்

மன்னா! வாள் சண்டை, குத்துச் சண்டை எல்லாம் பழகாமல் புறமுதுகு காட்டி ஓடச் மட்டும் பயிற்சி அளிக்கிறீர்களே இது நியாயமா?

என்னை போல அவனும் உயிர் பிழைக்க வேண்டாமா!

=======================

நானும் உங்கள மாதிரி ஸ்டூடண்டா, இதே ஸ்கூல்ல படிச்சவன் தான். இப்போ இதே ஸ்கூலில் ஆசிரியர் ஆகிட்டேன். இதுல இருந்து என்ன தெரியுது?

இந்த ஸ்கூல்ல படிச்சா வேறு எங்கும் வேலை கிடைக்காதுனு தெரியுது, சார்.



=======================

அவனுடைய அப்பா, முன்னாடி லாட்டரி கடைக்காரரா இருந்ததால, அவன் தப்பிச்சான்!

எப்படி?

பரீட்சை ரிசல்ட்ல "ஒரு நம்பரில்" தானே பெயில் ஆகிட்ட, அடுத்த முறை பார்க்கலாம் என்று சொல்லிட்டாரு.

=======================

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அந்த பேஷண்ட்டுக்கு பிரஷர் குறைந்து தான் இருந்தது. திடீர்னு எப்படி ஏறிச்சு?

நீங்க பீஸ் கட்டணம் சொன்னவுடன் தானா ஏறிடுச்சு, டாக்டர்.

=======================

போரைத் தடுக்க எல்லா அஸ்திரமும் வீணாகிவிட்டது. கடைசியாக "பிரம்மாஸ்திரம்" உபயோகிக்க வேண்டியது தான்.

அது என்ன பிரம்மாஸ்திரம் மன்னா?

எதிரி நாட்டு மன்னனை தனிமையில் சந்தித்து காலில் விழுந்து விடவேண்டியதுதான்.

=======================

துன்பம் வரும்போது அவர் சிரிப்பார்.

அப்படியா? ஆச்சரியமா இருக்கே!

இதுல என்ன ஆச்சரியம். மத்தவங்களுக்கு துன்பம் வரும்போது அவர் சிரிப்பார்.

=======================


அவரை எப்படி போலி டாக்டர்னு கண்டுபிடிச்சீங்க?

கிளினிக்குக்கு முன்னால உள்ள போர்டில் பிளஸ் அடையாளம் போட்டு வட்டம் போடாமல், மைனஸ் அடையாளம் போட்டு வட்டம் போட்டு இருக்காரு!

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## இரவு நேரத்தில் இளநீர் குடிக்கலாமா?



இளநீர் குடிப்பதன் மூலம் அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடும். உலகில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் விரும்பி குடிக்கும் பானமாக இளநீர் உள்ளது. இளநீரை விரும்பாதவர்கள் அரிது தான். ஏனெனில் இதில் எண்ணற்ற சத்துக்கள் உள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் கோடை காலங்களில் இளநீர் வியாபாரம் இந்தியாவில் அமோகமாகவே நடக்கும். உடலுக்கு பல வழிகளில் நன்மை தரக்கூடிய இளநீரை இரவு அருந்தலாமா என்ற கேள்வி சிலருக்கு எழும். அதற்கான தீர்வு குறித்து பார்க்கலாம்.

கோடை காலங்களில் ஏற்படும் தாகத்தை தணிக்க இளநீர் சிறந்த தேர்வாக அமையும். அதே போல் இரவு நேரங்களில் இளநீர் குடிப்பதும் உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்புடையதாக இருக்கும். குறிப்பாக பருவகால நோய் தொற்றில் இருந்து பாதுகாக்கும். இளநீரில் பாக்டீரியா மற்றும் பூஞ்சை எதிர்ப்பு பண்புகள் அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமின்றி வைட்டமின்கள், தாதுக்களும் அடங்கியுள்ளதால், கூந்தல் மற்றும் சருமத்திற்கும் வலுசேர்க்கும். மலச்சிக்கல் பிரச்சனை உள்ளவர்கள் இரவு தூங்கும் முன்பு இளநீர் குடிக்கலாம். இவற்றிலுள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை போக்கும். நீரிழப்பை தடுக்கும்.

இளநீர் வருடம் முழுவதும் ரசாயனம் இல்லாமல் இயற்கை முறையில் கிடைக்கும் ஒரு பானம். ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை கட்டுப்படுத்தி, நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது. இதனால் இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் குறையும் என்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இளநீர் குடிப்பதன் மூலம் அடிக்கடி சிறுநீர் கழிக்க நேரிடும். இது உடலில் இருக்கும் தொற்றுக்கிருமிகளை வெளியேற்ற உதவும். சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகளைத் தடுக்கவும் இளநீர் துணை புரியும். இளநீரை எப்போது வேண்டுமானாலும் குடிக்கலாம். ஆனால் சரியான நேரத்தில் குடிப்பதால், அதன் ஆரோக்கிய நன்மைகள் இரட்டிப்பாகும். உணவுக்கு முன்பும், பின்பும், தூங்குவதற்கு முன்பும், உடற்பயிற்சிக்கு பின்பும் இளநீர் குடிப்பது உடலுக்கு நல்லது. இதனால் செரிமானம் மேம்பட்டு, உடல் நீரேற்றமாக இருக்கும். குறிப்பாக இரவு நேரத்தில் தூங்குவதற்கு முன் குடிப்பது மன அழுத்தத்தை குறைக்கும். இதய துடிப்பை குறைத்து, மனதை அமைதிப்படுத்தும்.

பொதுவாக ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு டம்ளர் இளநீர் குடிப்பது போதுமானது. இருப்பினும், சர்க்கரை நோய் அல்லது குறிப்பிட்ட உடல்நல பிரச்சனைகள் உள்ளவர்கள், மருத்துவரின் ஆலோசனைப்படி இளநீரை குடிப்பது நல்லது.



## மருத்துவ குணம் நிறைந்த முருங்கைப்பூ

முருங்கையின் பலன் பற்றி சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

வேலைப்பளு, மன அழுத்தம் காரணமாக நரம்புகள் செயலிழந்து நரம்புத்தளர்ச்சி ஏற்படும்.

முருங்கை என்றதும் அதன் காய்களும் கீரைகளும் மட்டுமே நமக்கு தெரியும். அதில் மருத்துவ குணங்கள் இருப்பதாக சொல்லக்கேட்டு விதம்விதமாய் சமைத்து உண்டு ருசித்து ரசித்திருப்போம். ஆனால், முருங்கைப்பூவில் இருக்கும் சத்துகள் மட்டுமல்ல, அதில் இருக்கும் ரகசியங்கள் நம்மில் பலரும் தெரியாத ஒன்று.

முருங்கையின் பலன் பற்றி சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் பலன் பற்றி அறிந்ததாலேயே சித்தர்கள் முருங்கையை 'பிரம்ம விருட்சம்' என்று அழைக்கிறார்கள். வீடுகள் மற்றும் தோட்டங்களில் முருங்கை மரங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால் நம்மில் எத்தனைபேர் முருங்கைப்பூவை சமைத்துச் சாப்பிட்டிருப்போம்..?



காரணம் அந்தப் பூக்களின் மருத்துவகுணம் பற்றி தெரியாதது மட்டுமல்ல... முருங்கைப்பூவை விட முருங்கைக்காயையே நாம் அதிகம் சமையலுக்கு பயன்படுத்திப் பழகியிருக்கிறோம்.

இன்றைய அவசர யுகத்தில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரவு, பகலாக ஓய்வின்றி உழைப்பது, கம்ப்யூட்டரே கதி என்று மணிக்கணக்கில் உட்கார்ந்திருப்பது போன்றவற்றால் மனஅழுத்தம், மன உளைச்சல் ஏற்படுவது சாதாரணமாகி விட்டது. அதிக வேலைப்பளு, மன அழுத்தம் காரணமாக நரம்புகள் செயலிழந்து நரம்புத்தளர்ச்சி ஏற்படும். அந்த நேரங்களில் முருங்கைப்பூவை கசாயம் வைத்து வாரம் இருமுறை அருந்தி வந்தால் நரம்புத்தளர்ச்சி சரியாகும்.

மேலும், பலருக்கு தாம்பத்ய உறவில் நாட்டம் இருப்பதில்லை. இது போன்ற பிரச்சினை உள்ளவர்கள் முருங்கைப்பூ ஒரு கைப்பிடி எடுத்து அரைத்துப் பாலில் கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) தொடர்ந்து குடித்து வந்தால் தாம்பத்ய உறவில் ஆர்வம் ஏற்படும்.

முருங்கைப்பூவை காய வைத்துப் பொடியாக்கி தேனுடன் கலந்து அதே ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக்கோளாறுகள் நீங்கும் என்கிறார்கள்.

## சிறிய பழக்கங்கள் ஏற்படுத்தும் பெரிய மாற்றங்கள்

மனநிலையை மாற்றும்.

நல்ல தூக்கத்தை தரும். உடல் வலியை போக்கும்.

* காபி, டீ பருகுவதற்கு முன் தண்ணீர் குடித்தல்

-உடலின் நீர்ச்சத்து மற்றும் ஆற்றலை மீட்டெடுக்கிறது.

* இன்று இரவே நாளைய திட்டத்தை அமைத்தல்

-மறுநாள் காலையில் மன அழுத்தத்தை குறைக்கிறது.

* தேவையற்ற சிந்தனைகளை கட்டுப்படுத்துதல்

-மனக்குழப்பம் ஏற்படாமல் தடுக்கும்.

* காலையில் எழுந்ததும் படுக்கையை ஒழுங்குபடுத்துதல்

-ஒழுக்கத்தையும், புத்துணர்ச்சியான தொடக்கத்தையும் குறிக்கிறது.

* மெதுவாக உணவருந்துதல்

-குடல் ஆரோக்கியத்தை காக்கும். அதிகமாக சாப்பிடுவதை தடுக்கும்.

* சிறிய தொகையை சேமித்தல்

-திட்டமிட்டு செலவிட தூண்டும்.

* தினமும் 10 நிமிடம் நடைப்பயிற்சி செய்தல்

-மனநிலையை மாற்றும். செரிமானம் மற்றும் மனத் தெளிவை மேம்படுத்தும்.



* கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுதல்

-உண்மையான தன்னம்பிக்கையை உருவாக்குகிறது.

* அதிகாலையில் சூரிய ஒளியில் நேரம் செலவிடுதல்

- ஹார்மோன்கள் மற்றும் தூக்கச் சுழற்சியை சமநிலைப் படுத்துகிறது.

* தினமும் 5 பக்கங்கள் வாசித்தல்

- அறிவும் சேர்ந்து வளரும்.

* உணவருந்தும்போது கைப்பேசியை தவிர்த்தல்

-ஜீரணத்தையும், விழிப்புணர்வையும் மேம்படுத்தும்.

* தினமும் பயன்படுத்தும் இடத்தை ஒழுங்குபடுத்துதல்

-அமைதியான சூழல் நிலவும். மனமும் அமைதியாகும்.

* கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்பு சிறிது இடைவேளை எடுத்தல்

-உறவுகளையும், மன ஆற்றலையும் காக்கும்.

* உறங்குவதற்கு முன் உடற்பயிற்சி செய்தல்

-நல்ல தூக்கத்தை தரும். உடல் வலியை போக்கும்.

* செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தல்

- மனம் திருப்தி அடையும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்

whatsapp No
8122664699

## மூட்டு வலிகளுக்கு சிறந்த மருந்து தேன்

ஒவ்வொரு வகைத் தேனுக்கும் ஒவ்வொரு சிறப்பு குணம் உண்டு.

கொம்புத்தேன், மலைத்தேன், குறிஞ்சித்தேன் என்று தேனில் அறுபது வகை உண்டு. ஒவ்வொரு வகைத் தேனுக்கும் ஒவ்வொரு சிறப்பு குணம் உண்டு.

தேன் மிகசிறந்த உணவு பொருளாகும். ஒரு ஸ்பூன் தேனைச் சாப்பிட்டு வந்தால் அரை மணி நேரத்தில் நரம்புகள் சுறுசுறுப்புடன் திகழும். சிலருக்குக் கை, கால்கள், விரல்கள் மற்றும் உடல் நடுங்க ஆரம்பிக்கும். இவர்கள் தினமும் ஒரு டம்ளர் பாலில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நிச்சயம் குணம் காண்பார்கள். மூட்டு வலிகளுக்குச் சிறந்த மருந்து தேன்தான். வலி உள்ள இடத்தில் நன்றாகத் தேனைத் தேய்த்துவிட வேண்டும். அத்துடன் எப்பொழுது உணவு உட்கொண்டாலும் ஒரு ஸ்பூன் தேனையும் உடனே உட்கொள்ள வேண்டும்.



மூட்டுகள் தேயாது, மூட்டுகள் வலிக்காது. படுக்கையே கதியாகக் கொண்டிருக்கும் பிணியாளர்கள், பாலில் கொஞ்சம் தேன் கலந்து தவறாமல் குடித்து வந்தால், விரைவில் தெம்பு ஏற்பட்டு சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்கிவிடுவார்கள்.

## மருத்துவ குணம் நிறைந்த நுங்கு

வெப்பத்தால் உடலில் உருவாகும் சோர்வை நீக்கி உடலின் வெப்ப நிலையை சமநிலை செய்கிறது.

கோடையில் குழந்தைகளுக்கு அம்மை நோய் தாக்கம் ஏற்படும்.

மற்ற மரங்களைவிட ஏராளமான பயன்களை கொண்டதாக பனை மரங்கள் விளங்குகின்றன. ஒரு பனை இருந்தால் அதைச்சுற்றி பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கை தொடங்கும் என்று உயிரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில், பனை மரத்தை நம்பி பல்வேறு சிறு உயிரினங்கள் மற்றும் பறவைகள் வாழ்கின்றன. இது ஒரு புறமிருக்க, கோடை காலத்தில் பனை தரும் நுங்கு அளப்பரிய மருத்துவ குணங்கள் நிறைந்ததாகும்.

ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் இந்த நுங்கு விற்பனைக்கு வரும். கோடை வெயிலை தாங்கி மனித உடல் குளிர்ச்சி பெற நுங்கு துணை புரிகிறது. நுங்கில் உடலுக்கு ஊட்டம் தரும் வைட்டமின் பி, நோய் எதிர்ப்பு சக்தி தரும் வைட்டமின் சி, இரும்பு, கால்சியம், துத்தநாகம், பொட்டாசியம், கார்போஹைட்ரேட், புரதம் போன்ற சத்துக்கள் அதிகம் உள்ளன. இவை, வெப்பத்தால் உடலில் உருவாகும் சோர்வை நீக்கி உடலின் வெப்ப நிலையை சமநிலை செய்கிறது.



கோடையில் குழந்தைகளுக்கு அம்மை நோய் தாக்கம் ஏற்படும். இதனை தடுப்பதில் நுங்கு முதலிடம் வகிக்கிறது. மேலும், உடல் வெப்பத்தால் குடலில் ஏற்படும் வறட்சியை தணித்து செரிமானத்தை மேம்படுத்துகிறது. மலச்சிக்கலை போக்குகிறது.

வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் தோல் நோய்கள், கொப்புளங்களை தடுக்க நுங்கு அவ்வப்போது உண்ணலாம். நுங்கில் உள்ள அந்த்யூசைன் என்ற ரசாயனம் மார்பக புற்று நோயை தடுக்க உதவும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

## வந்தவாசியில் சனிப்பெயர்ச்சி பூஜைகள்..!



**திருவண்ணாமலை,மார்ச் 07:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று சனிப் பெயர்ச்சி முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. மேலும் யாகசாலை பூஜைகள் உள்ளிட்டவைகள் நடைபெற்று, சிறப்பு ஆராதனை நடந்தேறியது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

**பா.சீனிவாசன்வந்தவாசி.**

## 20 ஆண்டுகால போராட்டம் : அடர்ந்த வனமாக மாற்றிய சமூக ஆர்வலர்



இயற்கையை நேசிப்பவர்களும், சமூக ஆர்வலர்களும் நினைத்தால் ஒரு கிராமத்தின் முகவரியையே மாற்ற முடியும் என்பதற்கு சிறந்த உதாரணமாகதிகழ்கிறார் திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூர் கிராமத்தை சேர்ந்த நாறும்பூ. ஆற்று மணலை பாதுகாக்கவும், தன் கிராமத்தை பசுமையாக்கவும் அவர் மேற்கொண்ட 20 ஆண்டுகால போராட்டத்தின் விளைவாக, இன்று அந்த பகுதி அடர்ந்த வனமாக மாறியுள்ளது.

## வெப்பநிலை



**சென்னை, மார்ச் 07:** மார்ச் மாதத்தை பொறுத்தவரை கன்னியாகுமரி, தென்காசி, தேனி, கோயம்புத்தூர், திருப்பூர் , ஈரோடு, வேலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் வெப்பநிலை இயல்பை விட அதிகமாக இருக்கும். மார்ச் மாதத்தில் கடலூர் நாகப்பட்டினம், நெல்லை, தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களில் இயல்பான அளவிலே வெப்பநிலை பதிவாகும். குறிப்பாக ஊட்டி, கொடைக்கானலுக்கு அடுத்தப்படியாக தென் கடலோர பகுதிகளில் வெப்பநிலை குறைவாகவே பதிவாகும்.

## குடிநீர் தற்காலிகமாக நிறுத்தம்



சென்னையில் குடிநீர் விநியோகத்தை பாதிக்கும் வகையில் முக்கிய சீரமைப்பு பணி ஒன்றை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் தீர்மானித்துள்ளது. வளசரவாக்கம் பகுதியில் உள்ள பிரதான குடிநீர் பரிமாற்றக் குழாயில் ஏற்பட்ட கசிவை சரிசெய்யும் பணிகள் நடைபெற உள்ளதால், மார்ச் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாட்களுக்கு நகரின் ஐந்து மண்டலங்களில் குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் தற்காலிகமாக நிறுத்தப்பட உள்ளது.

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இரண்டாம் கால யாக சாலை பூஜை, மூன்றாம் கால யாக சாலை பூஜை



**திருச்சி மார்ச்07:** பெரிய கடைவீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இரண்டாம் காலம் நிகழ்ச்சிகள்... வியாழக்கிழமை காலை 7:15 மணிக்கு மங்கள இசை,ரிஷப பூஜை (காளைமாடு ) காலை 8 :00 மணிக்கு இரண்டென கலந்து அர்த்தநாரியாக விளங்கும் அன்னைக்கு இரண்டாம் கால யாக சாலை பூஜை, வேதிகா அர்ச்சனை, காலை 9:30 மணிக்கு லலிதா திரிசதி நவசக்தி அர்ச்சனை, காலை 11:00 மணிக்கு ஹோம திரவ்ய சமர்ப்பணம், காலை 11:30 மணிக்கு பூர்ணாஹுதி, தீபாராதனை நிகழ்ச்சிகள்... கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோவில் செட்டி தெரு மண்டபத்தில் மாலை 5:30 மணிக்கு R. P ஐஸ்வர்யா அவர்களின் பக்தி பாடல்கள், மாலை 5.50 மணிக்கு கோபிகா பரதநாட்டியம், மாலை 6:00 மணிக்கு மங்கள இசை, விசேஷந்தி, இச்சா ஞான கிரியா சக்தியாக விளங்கும் முப்பெரும் தேவிக்கு மூன்றாம் கால யாக சாலை பூஜை,வேத பாராயணம்.. மாலை 6: 10 மணிக்கு S.ரிதன்யா S.சுப்ரித்தா பக்தி பாடல்கள், மாலை 6:30 மணிக்கு S.ஸ்ரீநிதி வீணை.. இரவு 8:00 மணிக்கு ஹோம திரவ்ய சமர்ப்பணம், இரவு 9:30 மணிக்கு பூர்ணாஹுதி.. பக்தி பாடல்கள்,பூஜைகள், ஹோமங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். அனைவருக்கும் காலை, மதியம், இரவு உணவு வழங்கப்பட்டது. திருச்சி ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி அம்மன் கோவில் நிர்வாகம், திருச்சி ஆர்ய வைஸ்ய நூட்ட இப்பன்றம் நகர்வாரும் கமிட்டி.

**தமிழ்நாடு இ பேப்பர்**
**நிர்மலா ஸ்ரீதர் செய்தியாளர்**
**திருவண்ணாமலை**

## வாசவி அம்மன் சுக்கிர வார பூஜை,சனீஸ்வர பகவான் சிறப்பு பூஜை



**திருப்பூர் , மார்ச் 07:** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சுக்கிர வாரம் நன்னாளில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து மற்றும் ஆலயத்தில் அமைந்திருக்கும் சனீஸ்வர பகவானுக்கு சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர்களால் அர்ச்சனைகள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

வாசவி அம்மனையும், சனீஸ்வர பகவானையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர்**
**செய்தியாளர் நிர்மலா**
**ஸ்ரீதர் திருவண்ணாமலை**



பண்பொழி திருமலைக்குமார சுவாமி கோயிலில் உற்சவரை தங்கத்தேரில் வைத்து உலாவர செய்ய விரும்பும் பக்தர்கள் ரூ.1500 கட்டணம் செலுத்தி தங்கத்தேர் உலாவை நடத்தலாம். மேலும் ரூ.20,000 தொகையை கோவிலில் நிரந்தர முதலீடாக செலுத்தினால், ஆண்டுக்கு ஒரு நாள் தாங்கள் விரும்பும் நாளில் தங்கத்தேர் உலா நடத்தும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

## கனவுகள் மெய்ப்படும்




சென்னை வர்த்தக மையத்தில் "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தமிழ்நாடு 2030 வளர்ச்சி திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின், அறிவித்தார்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு




2027 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி நாடு முழுவதும் இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

## மாரியம்மன் மற்றும் காளியம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகள்



சனி பகவான் கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு பெயர்ச்சி அடைந்ததை முன்னிட்டு, ஊட்டியில் உள்ள மாரியம்மன் மற்றும் காளியம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் யாகங்கள் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சனீஸ்வர பகவானை வழிபட்டனர்.

## கேபின்குழு பணியாளர்கள் பயிற்சி



ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் சார்பில் பழங்குடியின இளைஞர்களுக்கு விமான முன்பதிவு ஆளுமை, கேபின்குழு பணியாளர்கள் பயிற்சியானது வழங்கப்படுகிறது.

## புதிய வழிமுறைகள் விளக்கம்



தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (GPF) விதிகளில் மாநில அரசு முக்கிய திருத்தங்களை அறிவித்துள்ளது. இந்த மாற்றங்கள் தொடர்பான உத்தரவு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதுடன், நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்ட அறிவிப்பில் புதிய வழிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன.

## கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு நீதிபதி உத்தரவு



கூட்டுறவு துறை உதவியாளர், இளநிலை உதவியாளர் பணிகளுக்கான நேர்முகத் தேர்வு முடிவுகளை ஒரு வாரத்தில் வெளியிட வேண்டுமென கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு நீதிபதி உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.




## நான் முதல்வன் திட்டத்திற்கு நன்றி' - யுபிஎஸ்சி தேர்வில் 2ம் இடம்பிடித்த மதுரை மாணவி!




**மதுரை, மார்ச் 07:** 2025-ஆம் ஆண்டிற்கான மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய குடிமைப்பணித் தேர்வு முடிவுகள் இன்று வெளியாகின. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் முதல் 10 இடங்களில் இடம்பெற்றிருந்தனர். அதில் அகில இந்திய அளவில் இரண்டாம் இடம்பிடித்தவர்தான் மதுரையைச் சேர்ந்த ராஜேஸ்வரி சுவே. இவர் தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பயிற்சிப் பெற்றவர்.

இந்நிலையில் தனது இந்த வெற்றித் தொடர்பாக பேசியுள்ள அவர்,

"இந்திய அளவில் இரண்டாம் இடம்பிடித்தது ஆச்சரியமாக இருந்தது. நான் 2018-ல் கல்லூரி முடித்தேன். இது ஒரு நீண்டபயணம். இப்போது சாத்தியமாகி உள்ளது.

தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்திற்கு நன்றிக்கூரவேண்டும். நான் இந்த திட்டத்தின் முதல் பேட்ச் மாணவி. 2024-ல், முதல்நிலைத் தேர்விற்கான (Prelims) நிதியுதவி வழங்கப்பட்டவர்களில் நானும் ஒருவளாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது 10 மாதங்களுக்கு மாதம் 7,500 ரூபாய் வழங்கினர். பின்னர், 2025-ல் நான் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு, முதன்மைத் தேர்விற்காக (Mains) பயிற்சி பெற்றேன்; அப்போது சுமார் 25,000 ரூபாயும், நேர்முகத் தேர்விற்கு 50,000 ரூபாயும் நிதியுதவி அளித்தனர்.

இந்த நிதியுதவியுடன் மட்டுமல்லாமல், 'நான் முதல்வன்' குழு சிறந்த ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் வழங்குகிறது. தமிழ்நாட்டில் கல்வி சார்ந்த ஆதரவு மிகப்பெரியது. நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனது அப்பா ஒரு தொழிலதிபர். என் அம்மா துணை கணித பேராசிரியர். " என தெரிவித்தார்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டின் அடுத்த 5 ஆண்டு வளர்ச்சிக்கான 14 அறிவிப்புகளை, Stalin Statement என்ற பெயரில் வெளியிட்டார்.

# சுற்றுலா: திருவண்ணாமலையில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கு பார்க்கலாமா?

திருவண்ணாமலையில் என்றாலே நாம் எல்லோருக்கும் நினைவு வருவது சிவனின் பஞ்சபூதங்களில் ஒன்றாக அருணாச்சலேஸ்வரர் கோயில் மட்டும்தான். ஆனால் திருவண்ணாமலையைச் சுற்றி ஏராளமான சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. என்னவென்று பார்ப்போமா?.

ஸ்ரீரமண ஆசிரமம்.

இயற்கை எழில் கொஞ்சும் சூழலுக்கு மத்தியில் அமைந்துள்ள ஸ்ரீ ரமணா ஆசிரமம் திருவண்ணாமலையில் தியானம் செய்வதற்கும் ,உள் அமைதியை காண்பதற்கு ஏற்ற இடமாகும். இந்த ஆசிரமத்தில் ருசியான சாத்வீக உணவையும் ருசிக்கலாம். ஆசிரமத்தில் தனித்துவமானமற்றும் அரிய புத்தகங்களை கொண்ட ஒரு நூலகம்தான் உள்ளது. கூட்டத்திலிருந்து ஓய்வெடுக்கவும், புத்துணர்ச்சி பெறவும் இந்த இடம் சரியான தேர்வாகும்.


செஞ்சி கோட்டை: பிரபலமான செஞ்சி கோட்டை என்று











அறியப்படும் கம்பீரமான கோட்டை மூன்று வெவ்வேறு மலை உச்சி கோட்டைகள் தடித்த சுவர் மற்றும் பாறைகளால் நம்மை மெய்சிலிக்க வைக்கிறது. மராட்டிய மன்னரான, சிவாஜி "இந்தியாவின் மிகவும் அசைக்க முடியாத கோட்டை" என்ற பெயரிடும் அளவிற்கு இந்த கோட்டை வலுவானதாக இருந்துள்ளது.

சாத்தனூர் அணை: திருவண்ணாமலையில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது சாத்தனூர் அணை,ஒருஅற்புதமானபொறியியல் அதிசயம். இயற்கை ஆர்வலர்கள் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும். இனிமையான பூங்காக்கள், மீன் / கிரோட்டா மற்றும் பெரிய முதலை பண்ணை ஆகியவை உள்ளது. திருவண்ணாமலையிலிருந்து சாத்தனூர் அணையை நண்பர்கள் மட்டும் குடும்பத்தினரும் ஒருநாள் பயணத்தில் பார்வையிட இது ஏற்ற இடம் ஆகும்.

விருபாக்ஷா குகைகள்.

திருவண்ணாமலையில் உள்ள இந்த தனித்துவமான குகை ஆசிரமம் இந்து சின்னமான ஓம் வடிவத்தில் உள்ளது. மலையின் சரிவில் புனித நீரூற்றுகள் உள்ளன. 13-ம் நூற்றாண்டின் புகழ்பெற்ற துறவியான விருபாக்ஷா தேவாவின் நினைவாக இந்த குகைகள் பெயரிடப்பட்டதாக தெரிகிறது. அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை இங்கு கழித்ததாக கூறப்படுகிறது.

மமரா குகைகள்.

மமரா குஹாய் என்ற சொல்லுக்கு 'மரக்குகைகள் ' என்று பொருள். திருவண்ணாமலை மலைப்பகுதியில் உள்ள ஒரு ஆன்மீக ஸ்தலமாகும். ஆன்மீக ஞானி ஸ்ரீ ரமண மகரிஷி ஆறு வருடங்கள் தவம் மற்றும் தியானம் செய்த குகை இது என்று கூறப்படுகிறது.

ஸ்கந்தாஷ்ரமம்.

அருணாச்சலேஸ்வரர் கோவில் மற்றும் ரமணா ஆசிரமத்திற்கு அருகில் திருவண்ணாமலையில் துறவி ரமணர் தங்கி இருந்த குகைகளில் இதுவும் ஒன்று. இந்த இலக்கை அடைய ஒருவர் நீண்ட தூரம் மலை ஏற வேண்டும். மேலே இருந்து பார்க்கும்போது பார்வை நிச்சயமாக உங்களை மெய்சிலிர்க்க வைக்கும். கந்தாஸ்ரமம் ஒரு தனித்துவமான கோவில். நீங்கள் பார்த்த உடனேயே உணர்ந்திடலாம்.

யோகிராம் சரத்குமார் ஆசிரமம்.

திருவண்ணாமலையில் உள்ள மிக அழகான இடங்களில் ஒன்றாக கருதப்படும் இந்த புனித ஆசிரமம் விசிறி சாமியார் ஆசிரமம் என்று அழைக்கப்படுகிறது. சுவாமியின் பச்சை சிலை கோவிலின் முக்கிய ஈர்ப்பாக உள்ளது. இருப்பினும் பார்வையாளர்கள் வேதங்களை பற்றி அறிந்து கொள்ள இந்த ஆசிரமம் வாய்ப்பு அளிக்கிறது.

ஜவ்வாது மலை.

திருவண்ணாமலையில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ஜவ்வாதுமலையில் சந்தன மரங்கள் நிறைய காணப்படுகின்றன. இங்கு பீமன் மதவு நீர்வீழ்ச்சி மற்றும் அமைதி வனப்பகுதியில் மழையேற்றம் இங்குள்ள முக்கிய சுற்றுலா தலங்களாகும். அடர்ந்த காடுகளின் நடுவில் உள்ளது பீமன் மடவு நீர்வீழ்ச்சி. ஜமன் மரத்தூரிலிருந்து சுமார் 12. கி.மீ தொலைவில் உள்ளது.

கோடை விடுமுறையில் இந்த இடங்களை தேர்ந்தெடுத்து சுற்றுலா செல்லலாம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### என்எல்சி நிறுவனத்தில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான என்எல்சி நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள 21 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் ஏப்ரல் 2 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் இதர விவரங்கள் குறித்து பார்ப்போம்.

பணி: Pharmacist Gr.B காலியிடங்கள்: 15 சம்பளம்: மாதம் ரூ.22,000 - 90,000

பணி: Ophthalmic Technician காலியிடங்கள்: 2

சம்பளம்: மாதம் ரூ. 23,000 - 95,000

பணி: Theatre Assistant காலியிடங்கள்: 2 சம்பளம்: மாதம் ரூ. 20,000 - 81,000

பணி: Audiologist and Speech Therapist காலியிடங்கள்: 1

சம்பளம்: மாதம் ரூ.24,000 - 1,00,000

பணி: Dental Mechanic காலியிடங்கள்: 1

சம்பளம்: மாதம் ரூ.22,000 - 90,000

தகுதி: ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான தகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும்.

வயதுவரம்பு: 1.2.2026 தேதியின்படி 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும். எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மருத்துவ பரிசோதனை தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர் ரூ.236, இதர அனைத்து பிரிவினர் ரூ.486 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 2.4.2026


## செஞ்சியில் கிணற்றில் கார் விழுந்து உயிரிழந்த 4 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம் : ஸ்டாலின் உத்தரவு

சென்னை, மார்ச் 7:

காருடன் கிணற்றில் மூழ்கி உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி கிராமத்தில் நேற்று முன்தினம் (3ந் தேதி) காலை புதுவை கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் TN10 BE 8935 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்து நெடுஞ்சாலை அருகிலுள்ள தனியருக்குச் சொந்தமான கிணற்றில் விழுந்து மூழ்கியதில் காரில் பயணம் செய்த சென்னை, கெருகம்பாக்கத்தைச் சேர்ந்த ராஜா (வயது 44) (த/பெ.மணி) மற்றும் வினோத் (வயது 39) (த/பெ. சேகர்); கொளப்பாக்கம் காந்தி தெருவைச் சேர்ந்த ஜெயமுருகன் (வயது 43) (த/பெ.ஆதிகேசவன்) மற்றும்



மௌலிவாக்கம், பொன்னியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த சேகர் (வயது 27) (த/பெ.குமார்) ஆகிய 4 நபர்கள் கிணற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த 4 நபர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 3 படப்பிடிப்புத் தளங்களுடன் தரமணி எம்.ஜி.ஆர் திரைப்படக் கல்லூரியில் ரூ. 39 கோடியில் திரைப்பட வளாகம் : முதல்வர் ஸ்டாலின் திறந்தார்

சென்னை, மார்ச் 7:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 39 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 படப்பிடிப்புத் தளங்கள் கொண்ட திரைப்பட படைப்பாக்க வளாகத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இப்படைப்பக வளாகத்தில், 150' x 100' என்ற அளவில் 18,768.86 சதுர அடி பரப்பளவில் ஒரு படப்பிடிப்பு தளமும், 120' x 80' என்ற அளவில் 26,150.70 சதுர அடி (13,075.35 x 2) பரப்பளவில் இரண்டு படப்பிடிப்பு தளங்களும், என மொத்தம் மூன்று படப்பிடிப்புத் தளங்கள் 44,919.56 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளன.

படைப்பாக்க வளாகத்தில் மூன்று படப்பிடிப்பு




தளங்களுக்காக 500 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளும் மற்றும் 165 கிலோவாட் திறன் கொண்ட ஜெனரேட்டர் வசதியுடன் மின்விநியோக வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திரைப்பட படைப்பாக்க வளாகத்தில் உள்ள ஒரு படப்பிடிப்பு தளத்தில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப காலகட்டத்திற்கேற்ப, LED திரைகள், கேமரா டிராக்கிங், ரியல்-டைம் கணினி கிராபிக்ஸ் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் இணைக்கப்பட்டுள்ள மெய்நிகர் தயாரிப்பு ஸ்டுடியோ அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை அருள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இலுப்பைக்குடி சிப்காட்- தொழிற் பூங்காவில் ரூ.5,300 கோடியில் எம்ஆர்எஃப் புதிய டயர் உற்பத்திஆலை

சென்னை, மார்ச் 7:

எம்ஆர்எஃப் நிறுவனம், 5,300 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 1000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிப்காட் - இலுப்பைக்குடி தொழிற்பூங்காவில் புதிய டயர் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில், நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.

எம்ஆர்எஃப் நிறுவனம், டயர்கள், டியூப்கள் மற்றும் பாதுகாப்புப் பட்டைகள் (Flaps) ஆகியவற்றைத் தயாரித்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் விநியோகம் செய்து வரும் பாரம்பரியம் மிக்க நிறுவனமாகும். இந்நிறுவனம், இந்தியாவில் 10 இடங்களில் தனது ஆலைகளை நிறுவியிருந்தாலும், தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில், அதாவது திருவொற்றியூர், அரக்கோணம் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தனது உற்பத்தி ஆலைகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை நிலைத்த மற்றும் தொழிற்நுட்ப ரீதியாக மேம்பட்ட கப்பல் கட்டுமானத்தில் உலகளவில் முன்னணி மாநிலமாக நிலைநிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கையைவடிவமைக்கப்பட்டு முதலமைச்சரால் இன்று வெளியிடப்பட்டது.

கப்பல் கட்டுமானம், வடிவமைப்பு, பழுது பார்த்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் மேம்பாடு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் முழுமையான கடல் சார் தொழில் சூழலை உருவாக்குவதுஇக்கொள்கையின் பிரதான நோக்கமாகும். கடற்கரைப் பகுதிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டு, நீல பொருளாதாரத்தில் உலகளவில் முன்னணி மையமாக தமிழ்நாடு உருவெடுக்கும் வகையில் இந்த தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கைவெளியிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், துணைத் தலைவர் மற்றும் இணை நிறுவன செயலர் டி.வி. துளசிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## ராமேசுவரம் அருகே இலங்கை மீனவர்கள் 2 பேர் கைது



ராமேஸ்வரம், மார்ச் 7:

ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடல் வழியாக அண்டை நாடான இலங்கைக்கு மஞ்சள், தங்கம், பீடி இலைகள், மருந்துகள் உள்ளிட்டவை அடிக்கடி சட்ட விரோதமாக கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுக்க கடலோர காவல்படை போலீசார் தீவிர ரோந்துமேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் ராமேசுவரம் அருகே உள்ள அரியமான் கடற்கரை பகுதியில் இந்திய கடலோர படையினர் ரோந்து சென்றனர். அப்போது அந்த பகுதியில் சந்தேகத்திற்கிடமாக ஒரு படகில் 2 பேர் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். உடனே கடலோர காவல் படையினர் அவர்களை பிடித்து விசாரித்தபோது 2 பேரும் இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமல் ராஜ், ராஜ்குமார் எனவும், இவர்கள் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தது தெரியவந்தது. இதையடுத்து 2 பேரையும் கடலோர காவல் படையினர் கைது செய்தனர். இவர்களிடம் கியூ பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செங்குன்றத்தில் 23 கிலோ கஞ்சா பறிமுதல்: ஒருவர் கைது

ஆவடி, மார்ச் 7:



ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார் மொண்டியம்மன் நகர் சோதனை சாவடி அருகே சோதனையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும் படியாக வந்த கோயம்பத்தூரை சேர்ந்த ஹரிபிரசாத் ன்பவரை விசாரணை செய்து அவர் வைத்திருந்த இரண்டு ஷோல்டர் பைகளை சோதனை செய்த போது அதில் 23 கிலோ கிராம் காஞ்சா இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு போலீசார் அவற்றை கைப்பற்றி ஹரிபிரசாத்தை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.

# அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்கும் திட்டம் - அமைச்சர் சிவசங்கர் தொடங்கி வைத்தார்

**சென்னை, மார்ச் 7:**

சென்னை மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரகத்தில் காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல், கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பணிமனைகளில் நவீன ரக வாகனங்களை பழுது நீக்கம் செய்திட மின்னணு பழுது கண்டறியும் கருவிகள் பயன்பாட்டிற்காக கொண்டு வருதல் ஆகிய திட்டங்களை தொடங்கி வைத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் இருவருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இது



தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

“தமிழக முதல்-அமைச்சரின் வழிகாட்டுதல்களின்படி போக்குவரத்து துறை அமைச்சர் 2024-25ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண்.48-ல் அறிவித்தபடி காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் திட்டத்திற்கு ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) செலவில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணைகள் வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் காஞ்சிபுரம், வேலூர், கடலூர் மற்றும் கோவை ஆகிய இடங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளவற்றை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கரால் சென்னை தலைமைச் செயலகத்தில் 27.02.2026 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மேலும் 2025-26ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை எண்.48-ன் மூலம் ரூ.30,00,165/- (ரூபாய் முப்பது லட்சத்து நூற்று அறுபத்து ஐந்து மட்டும்) செலவில் அரசு தானியங்கி பணிமனை கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகியவற்றில் நவீன ரக வாகனங்களை பழுது நீக்கம் செய்திட மின்னணு பழுது கண்டறியும் கருவிகள் ஆகியவை போக்குவரத்துத் துறை அமைச்சரால் சென்னை தலைமைச் செயலகத்தில் துவக்கி வைக்கப்பட்டன. மேலும் இவ்விழாவில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட இரண்டு நபர்களுக்கு பணி நியமன ஆணைகளும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், போக்குவரத்து துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மற்றும் அரசுத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### இண்டியன்வெல்ஸ் ஓபன்: இத்தாலி வீரர் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்

**இண்டியன்வெல்ஸ், மார்ச் 7:**

இண்டி யன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.இதில் முன்னணி வீரர், வீராங்க னைகள் பங்கேற்றுள்ளனர். இதற்கிடையே ஆண்கள் முதல் சுற்று ஆட்டத்தில் இத்தாலி வீரர் மாட்டியோ பெரேட்டினி, பிரான்சின் மன்னரினோவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 4-6, 7-5, 7-5 என்ற செட் கணக்கில் பிரான்சின் மன்னரினோவை மாட்டியோ பெரேட்டினி வீழ்த்தினார். இதனால் அவர் 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

### இண்டியன்வெல்ஸ் ஓபன்: சிட்சிபாஸ் தோல்வி

**இண்டியன்வெல்ஸ், மார்ச் 7:**

இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.இதில் முன்னணி வீரர், வீராங்க னைகள் பங்கேற்றுள்ளனர். இதற்கிடையே ஆண்கள் முதல் சுற்று ஆட்டத்தில் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் கனடாவின் டெனிஸ் ஷபோவலோவிடம் மோதினார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய டெனிஸ் ஷபோவலோ 6-2, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார் . இதனால் சிட்சிபாஸ் தொடரிலிருந்து வெளியேறினார்.

### “அந்த ஒரு கேட்ச்... போட்டி கைமாறியது” இங்கிலாந்து கேப்டன் வேதனை

**சென்னை, மார்ச் 7:**

டி20 உலகக் கோப்பை தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. நேற்று நடைபெற்ற 2வது அரையிறுதி போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 253 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 254 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, கடைசி வரை போராடியது. இருப்பினும் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 246 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் இந்திய அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

போட்டி முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய இங்கிலாந்து கேப்டன் ஹாரி புரூக், பீல்டிங் மற்றும் பந்துவீச்சில் ஏற்பட்ட தவறுகள்தான் வெற்றியை பறித்துவிட்டன என்று கூறினார். இருப்பினும் தனது அணி கடைசி வரை போராடியதாகவும் அவர் தெரிவித்தார். அவர் பேசுகையில், , “பிட்ச் புதிதாக இருந்தது. பந்து நன்றாக ஸ்விங் ஆகும் என்றும் ஸ்பின்னர்களுக்கு உதவி செய்யும் என்றும் நினைத்தோம். அதனால்தான் டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வு செய்தோம். ஆனால் எங்கள் கணிப்பு தவறாகிவிட்டது. பந்து பேட்டிற்கு நன்றாக வந்தது,” என்றார். மேலும், “சஞ்சு சாம்சன் கொடுத்த எளிய கேட்சை நான் தவறவிட்டது ஒரு பெரிய தவறு. ‘கேட்ச்கள் போட்டியை வெல்ல வைக்கும்’ என்ற சொல் இருக்கிறது. துரதிருஷ்டவசமாக அதை நாங்கள் சரியாக செய்யவில்லை என்று கூறினார்.

# தவெகவுடன் கூட்டணி; டாக்டர் ராமதாஸ் புதிய வியூகம்

**சென்னை, மார்ச் 7:**

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் திமுக அல்லது அதிமுக கூட்டணியில் டாக்டர் ராமதாஸ் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இரு கட்சிகளுடனும் பேச்சு வார்த்தையில் இழுபறி நிலை நீடித்ததால், இன்னும் கூட்டணி முடிவாகவில்லை.

தமிழ்நாட்டில், டாக்டர் ராமதாஸ், புதிய தமிழர் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் மட்டுமே இன்னும் முடிவை அறிவிக்காமல் உள்ளனர். இந்த நிலையில், காத்திருந்தும் பலன் இல்லை என்பதை புரிந்துகொண்ட டாக்டர் ராமதாஸ், திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில், கட்சியின் கவுரவ தலைவர் ஜி.கே.மணி, செயல் தலைவர் ஸ்ரீ காந்தி, அருள் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். நிர்வாகிகள் மத்தியில் பேசிய டாக்டர் ராமதாஸ், “நடிகர் விஜய்யின் தவெகவுடன் கூட்டணி அமைக்கலாமா?” என்று கருத்து கேட்டார். பெரும்பாலான நிர்வாகிகள், “தனித்து போட்டியிடுவதைவிட, பலத்தை நிரூபிக்கும் வகையில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதே நல்லது” என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில், டாக்டர் ராமதாசும் தவெகவுடன் இணைந்து தேர்தலை சந்திக்கலாமா? என யோசித்து வருகிறார் டாக்டர் ராமதாஸ்.

# தூத்துக்குடியில் 73 கிலோ எடையுள்ள ராட்சத சுறா சிக்கியது: ரூ.16 ஆயிரத்திற்கு ஏலம்

**தூத்துக்குடி, மார்ச் 7:**

தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மீனவ கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மணப்பாட்டைச் சேர்ந்த ஜெயக்கர் என்பவர் நேற்று அதிகாலை சக மீனவர்களுடன் நாட்டுப் படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றார்.

கரையிலிருந்து சுமார் 23 கடல் மைல் தொலைவில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, ஜெயக்கர் வீசிய வலையில் ராட்சத மீன் ஒன்று சிக்கியது. நீண்ட போராட்டத்திற்குப் பிறகு மீனவர்கள் அந்த மீனைப்



படகில் ஏற்றினர். அப்போது அது ஒரு ராட்சத சுறா மீன் என்பது தெரியவந்தது.

கரைக்கு கொண்டு வரப்பட்ட அந்தச் சுறா மீனை எடை போட்டபோது அது 73 கிலோ எடை இருந்தது. இந்த ராட்சத சுறாவை அந்தப் பகுதி மக்கள் ஆர்வத்துடன் வந்து பார்த்துச் சென்றனர். பின்னர் நடைபெற்ற ஏலத்தில், வியாபாரி ஒருவர் இந்தச் சுறா மீனை 16 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். ஏலம் எடுக்கப்பட்ட மீன் பின்னர் வேன் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டது.

# நாகை-இலங்கை இடையே பயணிகள் கப்பல் சேவை: இன்று முதல் மீண்டும் தொடக்கம்

**நாகப்பட்டினம், மார்ச் 7:**

நாகப்பட்டினம் - இலங்கை இடையே பயணிகள் கப்பல் சேவை (இன்று) 6-ந்தேதி (வெள்ளிக்கிழமை) முதல் மீண்டும் தொடங்க உள்ளாது என கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு சிவகங்கை பயணிகள் கப்பல் வாரத்தில் 6 நாட்கள் இயக்கப்பட்டு வந்தது. பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்த கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், இந்த கப்பல் போக்குவரத்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு (இன்று) 6-ந்தேதி (வெள்ளிக்கிழமை) முதல் மீண்டும் தொடங்குகிறது. பயணிகள் கட்டணம்,




எடுத்துச்செல்லப்படும் சரக்கு அளவு ஆகியவற்றில் எந்தவித மாற்றமும் இல்லை.

பருவநிலை மாற்றங்கள் உள்ள நாட்களை தவிர மற்ற நாட்கள் தொடர்ந்து இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாகையில் இருந்து புறப்படும் கப்பலில் இன்று மட்டும் 77 பேர் வரை பயணம் செய்கின்றனர். அங்கிருந்து வரும் கப்பலில் 80 பேர் வரை பயணம் செய்கின்றனர்.

செவ்வாய் கிழமை தவிர மற்ற 6 நாடகள் தொடர்ந்து கப்பல் சேவை இயங்கும்.


மேலும் புதிய கப்பல் பணிகள் நிறைவடைந்து, அதனை இயக்குவதற்கான அனைத்து சான்றிதழ்களும் பெறப்பட்டுவிட்டன.

வரும் திங்கட்கிழமை நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு புதிய கப்பல் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தூத்துக்குடியில் ரூ. 40 லட்சம் மதிப்பிலான பீடி இலைகள், மினி லோடு வாகனம் பறிமுதல்

**தூத்துக்குடி, மார்ச் 7:**

தூத்துக்குடி தெர்மல்நகர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இருந்து இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தபடுவதாக கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அந்த தகவலின் பேரில் சப்-இன்ஸ்பெக்டர் ராமசந்திரன், சிறப்புசப்-இன்ஸ்பெக்டர் ராமர், தலைமை காவலர்கள் இருதயராஜகுமார், இசக்கிமுத்து, காவலர்கள் பழனி, பாலமுருகன்,



பேச்சிராஜா ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது இன்று அதிகாலையில் தெர்மல்நகர் கடற்கரைக்கு செல்லும் வழியில் தெர்மல்நகர் காவல் நிலையத்திற்கு 200 மீட்டர் தொலைவில் சந்தேகப்படும்படி நின்றிருந்த மினி லோடு வாகனம் ஒன்றை போலீசார் சோதனையிட்டனர். அப்போது போலீசாரைக் கண்டதும் வாகனத்தில் இருந்த நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். இதனையடுத்து அந்த மினி லோடு வாகனத்தை போலீசார் சோதனை செய்தபோது அதில் தலா 30 கிலோ எடை கொண்ட 44 மூட்டைகளில் பீடி இலைகள் இருப்பது கண்டறியப்பட்டது. இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக கொண்டு வரப்பட்ட இந்த பீடி இலைகளின் சர்வதேச சந்தை மதிப்பு சுமார் 40 லட்சம் ஆகும். கியூ பிரிவு போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய மினி லோடு வாகனம் ஆகியவற்றை உரிய விசாரணைக்குப் பிறகு சுங்கத்துறையினரிடம் ஒப்படைக்க போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும் தப்பியோடிய கடத்தல் கும்பலை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## க்ரைம் கார்னர்

### போதையில் குப்பை தொட்டியை எட்டி உதைத்ததால் தகராறு: பெட்ரோல் குண்டு வீசிய 4 பேர் கைது

**சென்னை, மார்ச் 7:**

அமமுக பிரமுகர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய 4 பேர் கைது செய்யப்பட்டனர். வியாசர்பாடி, இந்திரா காந்தி நகர் மெயின் தெருவில் வசிப்பவர் பாலமுருகன் (47). அமமுக நிர்வாகி. இவர் எண்ணெய் வியாபாரம் செய்து வருவதோடு, அத்தோ கடையும் நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு அத்தோ கடையை மூடிவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது, அந்த வழியாக வந்த போதை கும்பல் ஒன்று ஹெல்மெட்டால் சாலையோரம் நின்றிருந்த வாகனங்களை சேதப்படுத்தியவாறும், கூச்சலிட்டவாறும் சென்றுள்ளது. மேலும், பாலமுருகன் வீட்டின் முன் வைக்கப்பட்டிருந்த குப்பை தொட்டியை எட்டி உதைத்துள்ளது. இதை அவரது குடும்பத்தினர் தட்டிக் கேட்டுள்ளனர்.இதனால் தகராறு ஏற்பட்டுள்ளது. பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து சென்றுவிட்டது. இந்நிலையில், நேற்று அதிகாலை 3.35 மணியளவில் இருசக்கர வாகனங்களில் வந்த அதே கும்பல் அடுத்தடுத்து பாலமுருகன் வீட்டு வளாகத்துக்குள் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு தப்பியது. பெட்ரோல் குண்டுகள் வீட்டின் முன்பும், முதல் மாடியின் பால்கனி மீதும் விழுந்து தீப்பற்றி எரிந்தது. கண் விழித்து எழுந்த பாலமுருகன், உடனடியாக தீயை அணைத்து விட்டு போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து, எம்கேபி நகர் போலீஸார் சம்பவ இடம் விரைந்து, சிசிடிவி கேமரா காட்சிகளைக் கைப்பற்றி விசாரித்தனர். இதில் பெட்ரோல் குண்டுகளை வீசியதாக தனுஷ்ராஜ், மோனிஷ்ராஜ், ஸ்டீபன், சந்தோஷ் குமார் ஆகிய 4 பேரை கைது செய்தனர். இவர்கள் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள், இவர்களின் பின்னணி என்ன என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

### மானாமதுரை அருகே ஊருக்குள் புகுந்து 4 பேரை வாளால் வெட்டிய 5 பேர் கைது



**மானாமதுரை, மார்ச் 7:**

மானாமதுரை அருகே ஊருக்குள் புகுந்து பட்டியலினத்தைச் சேர்ந்த 4 பேரை வாளால் வெட்டிய 5 பேரை போலீஸார் கைது செய்தனர். சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே இடைக்காட்டூரைச் சேர்ந்த பெயின்டர் ராஜூ (32).

பட்டியலினத்தைச் சேர்ந்த இவர், மார்ச் 3-ம் தேதி பிற்பகல் அங்குள்ள கடைவீதியில் நின்றுகொண்டிருந்தார். அங்கு செட்டிக்குளத்தைச் சேர்ந்த பாண்டியராஜனுக்கும், வே.புதுக்குளத்தைச் சேர்ந்த மகேஸ்வரனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. தொடர்ந்து ராஜூவிடமும் மகேஸ்வரன் தகராறு செய்தார். பின்னர் அங்கிருந்து மூவரும் தங்களின் வீட்டுக்குச் சென்றுவிட்டனர். ஆனால், ஆத்திரத்தில் இருந்த மகேஸ்வரன் அன்று இரவு, தனது நண்பர்கள் 8 பேருடன் 3 இருசக்கர வாகனத்தில் வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் இடைக்காட்டூரில் ராஜூ வசிக்கும் குடியிருப்புக்குள் புகுந்தார். பின்னர் ராஜூவை வாளால் அந்த கும்பல் வெட்டியது. தடுக்க வந்த ராஜூவின் உறவினர்கள் தினேஷ், ராஜேந்திரன், சுப்பிரமணி ஆகியோரையும் தாக்கியது. பின்னர், செட்டிக்குளம் சென்று, பாண்டியராஜனின் வீட்டையும் அக்கும்பல் அடித்து நொறுக்கியது. காயமடைந்த ராஜூ உள்ளிட் 4 பேரும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சிகிச்சை முடிந்து மற்றவர்கள் வீடுகளுக்கு திரும்பிய நிலையில், ராஜூ தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து மானாமதுரை போலீஸார் வழக்கு பதிந்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் விசாரணை நடத்தினார். இச்சம்பவம் தொடர்பாக வி.புதுக்குளத்தைச் சேர்ந்த இருளப்பன் (31), பாலமுருகன் (22), வேல்முருகன் (20), வேம்பத்தூரைச் சேர்ந்த பாரதி (19) மற்றும் ஒரு சிறுவன் ஆகிய 5 பேரை போலீஸார் கைது செய்தனர்.

## வணிகச் செய்திகள்

### ஈரான் போர் தாக்கம்: இந்தியாவில் 4 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி பாதிப்பு

**புதுடெல்லி, மார்ச் 7:**

இஸ்ரேல், ஈரான் போரால் 4 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு (ஐஆர் இஎப்), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திடம் (ஏபிஇடிஏ) சமர்ப்பித்துள்ள கோரிக்கையில் கூறியிருப்பதாவது: இஸ்ரேல், ஈரான் இடையிலான போர் காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கான கப்பல் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதால், துறைமுகங்களில் 2 லட்சம் மற்றும் நடு வழியில் 2 லட்சம் என மொத்தம் 4 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

போர் பதற்றத்தால் வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கான காப்பீட்டு பிரீமியம் மற்றும் போர்க் கால கூடுதல் கட்டணங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன. இதனால் சர்வதேச சரக்கு போக்குவரத்து கட்டணம் 15-20% வரை அதிகரித்துள்ளது. மேலும் கப்பல் எரிபொருள் விலை ஒரு டன்னுக்கு 520 டாலரிலிருந்து 580 டாலராக உயர்ந்துள்ளது. இந்த போக்குவரத்து இடையூறுகளால் உள்நாட்டிலும் கடந்த 72 மணி நேரத்தில் பாசுமதி அரிசியின் விலை 7-10% வரை சரிந்துள்ளது. இது ஏற்றுமதியாளர்களின் நடைமுறை மூலதனத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ரஷியாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்..? காங்கிரஸ் கேள்வி

**புதுடெல்லி, மார்ச் 7:**



வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல் பாதைகளை ஈரான் தடுத்துள்ள நிலையில், இந்தியா தனது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதற்கு அமெரிக்கா 30 நாட்கள் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க நிதித்துறை செயலாளர் ஸ்காட் பெசென்ட் கூறுகையில், "ஜனாதிபதி டிரம்பின் எரிசக்தி நிகழ்ச்சி நிரலின் விளைவாக எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி இதுவரை பதிவு செய்யப்படாத மிக உயர்ந்த அளவை எட்டியுள்ளது. உலக சந்தையில் எண்ணெய் தொடர்ந்து பாய உதவும் வகையில், இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷிய எண்ணெயை வாங்குவதற்கு நிதித்துறை தற்காலிகமாக 30 நாட்களுக்கு அனுமதி அளிக்கிறது. இந்த குறுகிய கால நடவடிக்கை ரஷிய அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க நிதி நன்மையை வழங்காது, ஏனெனில் அது ஏற்கனவே கடலில் சிக்கித் தவிக்கும் எண்ணெய் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளை மட்டுமே அங்கீகரிக்கிறது. இந்தியா அமெரிக்காவின் முக்கியமான பங்காளியாகும், மேலும் அமெரிக்க எண்ணெய் கொள்முதலை இந்தியா அதிகரிக்கும் என்று நாங்கள் முழுமையாக எதிர்பார்க்கிறோம். இந்த இடைநிறுத்த நடவடிக்கை உலகளாவிய எரிசக்தி பணயக்கைதியாக ஈரானின் முயற்சியால் ஏற்படும் அழுத்தத்தை தணிக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்..? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:- இந்த உத்தரவை அமெரிக்க நிதித்துறை செயலாளர் ஸ்காட் பெசென்ட் ஒரு பதிவில் பகிர்ந்துள்ளார். நரேந்திர மோடியின் கீழ் உள்ள இந்திய அரசாங்கம், இந்தியா எங்கிருந்து எண்ணெய் வாங்கலாம், எங்கிருந்து வாங்கக்கூடாது என்பதை அமெரிக்கா இப்போது தீர்மானிக்கும் சூழ்நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளது. இந்த முடிவை பிரதமர் மோடியோ அல்லது இந்திய அரசாங்கமோ எடுக்கவில்லை. இன்று, நாட்டின் குடிமக்கள் கேட்கிறார்கள். இந்தியா எண்ணெய் வாங்க 'அனுமதிக்க' அமெரிக்கா யார்?

நாங்கள் எந்த நாட்டிற்கும் அடிமைகள் அல்ல; நாங்கள் ஒரு இறையாண்மை மற்றும் சுதந்திரமான நாடு. ஆனால் நரேந்திர மோடி அமெரிக்காவிடம் இந்தக் கேள்வியைக் கேட்க முடியாது, ஏனென்றால் அவர் முற்றிலும் சமரசம் செய்து, அமெரிக்க நலன்களுக்கு நாட்டை அடமானம் வைத்துள்ளார். இது வெட்கக்கேடானது!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் போர்க் கப்பல் மூழ்கியபோது மீட்புப் பணியில் ஈடுபட்ட இந்திய கடற்படை

**புதுடெல்லி, மார்ச் 7:**


இந்திய கடற்படை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 4ம் தேதி அதிகாலை ஈரான் போர்க் கப்பல் ஐஆர்ஐஎஸ் டேனாவில் இருந்து அவசர உதவி கோரி கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இலங்கையின் காலே பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் ஈரான் போர்க்கப்பல் கடலில் மூழ்கியது. இது இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதி ஆகும்.

இந்திய கடற்படைக்கு தகவல் கிடைத்ததும் உடனடியாக மீட்புப் பணியில் களமிறங்கினோம். ஐஎன்எஸ் தரங்கிணி கப்பல் சம்பவ பகுதிக்கு அனுப்பப்பட்டது. கொச்சியில் இருந்து ஐஎன்எஸ் இக்சாக் கப்பலும் சம்பவ பகுதிக்கு சென்றது. இலங்கை கடற்படை யோடு இணைந்து இந்திய கடற்படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டது. இந்திய கடற்படையின் கண்காணிப்பு விமானம் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்று உயிர் காக்கும் ஜாக்கெட்டுகளை வீசியது.

இலங்கையோடு இணைந்து தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

## மேற்கு வங்காள ஆளுநர் ஆனந்த போஸ் திடீர் ராஜினாமா



**கொல்கத்தா, மார்ச் 7:**

மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்து வருகிறது.

இன்னும் ஒரு மாதத்தில் மேற்கு வங்காளத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த சூழலில், மேற்கு வங்காள ஆளுநர் ஆனந்த போஸ் தனது பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி உள்ளதாக மேற்கு வங்க ஆளுநர் மாளிகை தெரிவித்துள்ளது. போதிய காலம் பதவியில் இருந்துவிட்டேன். ஆளுநர் அலுவலகத்தில் போதுமான நேரத்தை செலவிட்டுள்ளேன் என ஆனந்த போஸ் கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதல்-மந்திரி மம்தா பானர்ஜிக்கு எதிராக 2024-லில் மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருந்தார் ஆனந்த போஸ். சட்டசபையில் நிறைவேற்றிய சில மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காததால் சர்ச்சைக்குள்ளானவர்.

நாளை மேற்கு வங்காளத்திற்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு செல்லும் நிலையில் ஆளுநர் ராஜினாமா செய்துள்ளது மேற்கு வங்காளத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேற்கு வங்காளத்தில் ஆளுநருக்கும், முதல்-மந்திரி மம்தா பானர்ஜிக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் எல்.பி.ஜி., எல்.என்.ஜி தட்டுப்பாடு இல்லை - மத்திய அரசு விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 7:**



இந்தியா தற்போது 195 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்ட் கியூபிக் மீட்டர் (MMSCMD) எரிவாயுவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. அவற்றில் சுமார் 60 மில்லியன் எம்எம்எஸ்சிஎஸ்டி அளவிலான எரிவாயுவை கத்தார் நாட்டிலிருந்து இந்தியா வாங்குகிறது.

இந்த நிலையில், மேற்கு ஆசியாவில் மோதல் அதிகரித்து வரும் சூழலில் எரிசக்தி ஆதாரங்களுக்காக பிற நாடுகளை இந்தியா ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) திரவாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) தட்டுப்பாடு இல்லை.

போதுமான அளவு எல்.பி.ஜி இருப்பில் உள்ளது. தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படுகிறது. 25 நாட்களுக்கான மூலப்பொருட்கள் என 50 நாட்களுக்கு இருப்பு உள்ளது. சரிசக்தியின் இருப்பு குறித்து தினமும் 2 முறை ஆய்வு செய்யப்படுகிறது.

வளைகுடா நாடுகள் தவிர பிற நாடுகள் தவிர பிற நாடுகளிடமும் கச்சா எண்ணெய் வாங்க பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. கத்தார் நாட்டுக்கு மாற்றாக மற்ற நாடுகளில் இருந்து எரிவாயு வாங்க இந்தியா முயன்று வருகிறது.

இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகள் எரிவாயு விற்பனை செய்ய முன்வந்துள்ளன. சர்வதேச எரிசக்தி முகமை, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்புடன் இந்தியா தொடர்பில் உள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சுகோய் போர் விமானம் விபத்து.. விமானப்படை வீரர்கள் இருவர் பலி

**கவுகாத்தி, மார்ச் 7:**



ரஷிய தயாரிப்பான சுகோய் சூ 30 போர் விமானம், இந்திய விமானப்படையில் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த சுகோய் சூ 30 ரக விமானங்கள் 1997-ல் இந்தியாவிடம் ரஷியா ஒப்படைத்தது. 250 விமானங்கள் இந்திய விமானப்படையில் உள்ள நிலையில், தற்போது அதனை இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் தயாரித்து வருகிறது.

அசாம் மாநிலம் கர்பி அங்லாங் மாவட்டம் ஜோர்ஹட் விமான தளத்தில் இருந்து சுகோய்-30 ரக போர் விமானம் நேற்று புறப்பட்டது. அந்த விமானம் இரவு 7.42 மணியளவில் ரேடார் தொடர்பிலிருந்து காணாமல் போனதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். காணாமல் போன போர் விமானத்தை தேடும் பணி மற்றும் மீட்பு நடவடிக் கைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பயிற்சிப் பணியில் ஈடுபட்டிருந்த விமானம், ஜோர்ஹட்டிலிருந்து சுமார் 60 கி.மீ தொலைவில் உள்ள அசாமின் கர்பி அங்லாங் பகுதியில் விபத்துக்குள்ளானது என்று விமானபடை தெரிவித்தது.

இந்த நிலையில், அசாமில் ஏற்பட்ட விபத்தில் விமானப்படை வீரர்கள் இருவர் உயிரிழந்ததாக இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

இது குறித்து விமானப்படை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "சுகோய் சூ 30 விபத்தில் படுகாயமடைந்த ஸ்கொட்ரன் லீடர் அனுஜ் மற்றும் விமான லெப்டினன்ட் பூர்வேஷ் துரக்கர் ஆகியோரின் இழப்பை இந்திய விமானப்படை ஒப்புக்கொள்கிறது. இந்திய விமானப்படையின் அனைத்து பணியாளர்களும் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறார்கள், மேலும் இந்த துயரமான நேரத்தில் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருடன் உறுதியாக நிற்கிறார்கள்" என தெரிவித்துள்ளது.

# அல்-காய்தா, ஐஎஸ் அமைப்புகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை: ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 7:**



அல்-காய்தா, ஐஎஸ் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தி யுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபையில், பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பான உறுப்பு நாடுகளின் தூதர்கள் இடையேயான கூட்டம் நடைபெற்றது.

இதில் ஐ.நா.வுக்கான இந்திய தூதரகத்தின் முதன்மைச் செயலர் ரகு புரி பேசியதாவது:

ஜம்மு -காஷ்மீரின் பஹல்காமில் 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரெசிஸ்டன்ஸ் ஃபிரன்ட் என்ற பயங்கரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியது.

இது ஐ.நா.வால் தடை செய்யப்பட்ட லஷ்கர்-ஏ-தொய்பாவின் கிளை அமைப்பாகும்.

இந்த அமைப்பு பாகிஸ்தானில் இருந்து செயல்படுகிறது. இந்தத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

இதுபோன்று எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா 30 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அல்-காய்தா, ஐஎஸ் ஆகியவற்றின் மீதும், அதன் கிளை அமைப்புகள் மீதும் அனைத்து நாடுகளும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச அமைதி, பாதுகாப்புக்கு பயங்கரவாதத்தால் அச்சுறுத்தல் நிலவுகிறது. பயங்கரவாதத்துக்கு எல்லைகளோ, தேசியமோ அல்லது இனமோ கிடையாது. அது சர்வதேச சமூகத்துக்கு சவாலாக உருவெடுத்துள்ளது. அதை அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும் என்றார்.

## ரூ.20,000 கோடி மதிப்பிலான அரசு பத்திரங்கள் மாற்றம்: மார்ச் 9-இல் 'ஸ்விட்ச்' ஏலம் - ரிசர்வ் வங்கி

**புதுடெல்லி, மார்ச் 7:**

மத்திய அரசின் கடன் சுமையைச் சீரமைக்கும் நோக்கில், ரூ.20,000 கோடி மதிப்பிலான அரசுப் பத்திரங்களை நீண்ட காலப் பத்திரங்களாக மாற்றும் 'ஸ்விட்ச்' ஏலத்தை திங்கள்கிழமை (மார்ச் 9) நடத்தவுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. இந்த ஏலம் திங்கள்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும். ஏலத்தின் முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட்டு, செவ்வாய்க்கிழமை (மார்ச் 10) பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஸ்விட்ச் செயல்பாடு அடுத்த நிதியாண்டில் நிதி நெருக்கடி, கடன் முதிர்வு அழுத்தத்தை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஏனெனில் அடுத்த நிதியாண்டில் மத்திய அரசு சுமார் ரூ.5.47 லட்சம் கோடி மதிப்பிலான பத்திரங்களை முதிர்வுக் காலத்துக்குப் பிறகு திரும்பச் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் குறுகிய காலத்தில் முதிர்வடையவுள்ள பத்திரங்களுக்குப் பதிலாக, நீண்ட கால முதிர்வு கொண்ட புதிய பத்திரங்களை முதலீட்டாளர்களுக்கு ரிசர்வ் வங்கி வழங்குகிறது. இதன்மூலம், அரசின் உடனடி நிதித் தேவை மேலாண்மை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு பிப்ரவரி மாதத்திலிருந்து, ரிசர்வ் வங்கி அறிவிக்கும் நான்காவது 'ஸ்விட்ச்' ஏலம் இதுவாகும். இதற்கு முன்னதாக நடத்தப்பட்ட மூன்று ஸ்விட்ச் ஏலத்தின் மூலம் ரூ.98,591.70 கோடி மதிப்பிலான பத்திரங்கள் வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளன என ரிசர்வ் வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன. புழக்கத்தில் உள்ள ரூ.2000 நோட்டுகளில் 98.44% சதவிகிதம் வங்கி அமைப்புக்கு திரும்பி வந்துவிட்டதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

## சத்தீஸ்கரில் நக்ஸல் தீவிரவாதி சுட்டுக் கொலை : ரூ.5 லட்சம் வெகுமதியுடன் தேடப்பட்டவர்

**புதுடெல்லி, மார்ச் 7:**

சத்தீஸ்கரின் தந்தேவாடா மாவட்ட வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் நக்ஸல் தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைப் பற்றி தகவல் தருவோருக்கு ரூ.5 லட்சம் வெகுமதி அறிவித்து காவல் துறையினர் தேடி வந்த நிலையில், தற்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தந்தேவாடா காவல் துறைக் கண்காணிப்பாளர் கௌரவ் ராய் வியாழக்கிழமை கூறியதாவது: கீதாம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட அடர் வனப் பகுதியில் குமல்நார், கிர்சாபரா, நெல்கோடா ஆகிய கிராமங்களுக்கு இடையே நக்ஸல்களால் ஆயுதங்கள் மற்றும் பிற பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக ரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது. இதையடுத்து, காவல் துறையின் மாவட்ட ரிசர்வ் படையினர் மற்றும் பஸ்தர் ஃபைட்டர் படையினர் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். கடந்த புதன்கிழமை இரவில் வனப் பகுதியில் பதுங்கியிருந்த நக்ஸல்கள், பாதுகாப்புப் படையினரை நோக்கி திடீரென துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டதால், கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது. அப்போது, இருட்டை சாதகமாகப் பயன்படுத்தி, பல நக்ஸல் தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் ஒரு நக்ஸல் தீவிரவாதியின் உடல் கைப்பற்றப்பட்டது. அவரிடமிருந்து தானியங்கி துப்பாக்கி, இன்சாஸ் ரக துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வாக்கிடாக்கி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது என்றார் கௌரவ் ராய்.

## பிகார் மக்களுக்கு நிதீஷ் குமார் நம்பிக்கைத் துரோகம்: காங்கிரஸ், ஆர்ஜேடி குற்றச்சாட்டு

**பாட்னா, மார்ச் 7:**

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'பிகார் சட்டப்பேரவைத் தேர்தலின்போது நாங்கள் திரும்பத் திரும்ப இதைத்தான் (முதல்வர் பதவியில் நிதீஷ் குமார் இருக்க மாட்டார்) கூறினோம். அதுதான் தற்போது நடக்கிறது. திட்டமிடப்பட்ட தலைமை மாற்றம், ஆட்சி மாற்றம் ஆகியவை அரங்கேறுகின்றன. இது பல வழிகளில், மக்கள் தீர்ப்புக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆர்ஜேடி கட்சித் தலைவரும், பிகார் முன்னாள் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவும், நிதீஷ் குமாரின் முடிவை சாடியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: தேர்தலுக்குப் பிறகு நிதீஷ் குமாரை முதல்வர் பதவியில் அமர பாஜக விடாது என நாங்கள் முதலில் இருந்தே தெரிவித்தோம். அதுதான் தற்போது நடக்கிறது. இது மக்கள் தீர்ப்புக்கு எதிரானது. மேலும் இதுவொரு நம்பிக்கைத் துரோகம் ஆகும். அத்துடன் ஓபிசி, தலித்துகளுக்கு எதிரானது பாஜக. மிகப்பெரிய பதவியில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அமருவதை பாஜக விரும்பாது. பாஜக தலைமை சொல்வதை கேட்டு நடக்கும் ரப்பர் ஸ்டாம்ப் போல செயல்படும் ஒருவரே முதல்வர் பதவியில் இருப்பதை அவர்கள் விரும்புவார்கள்' எனத் தெரிவித்துள்ளார்.

## டில்லி காவல் துறையின் குற்ற ஆவண பிரிவுக்கு ஐஎஸ்ஓ தரச் சான்றிதழ்

**புதுடெல்லி, மார்ச் 7:**

குற்றச் சம்பவங்கள் குறித்த தரவுகளை எண்ம (டிஜிட்டல்) முறையில் நிர்வகிப்பதற்காக தில்லி காவல் துறை குற்றப் பிரிவின் குற்ற ஆவண பிரிவுக்கு (எஸ்சிஆர்பி) இந்திய தர ஆணையம் (பிஐஎஸ்) ஐஎஸ்ஓ சான்றிதழ் வழங்கியுள்ளது. வாகனம் மற்றும் சொத்து திருட்டு சம்பவங்களுக்கு இ-எஃப்ஐஆர் பதிவு செய்தல், இ-என்சிஆர், பூஜ்ய சைபர் வழக்கு ஆகியவற்றை இணையவழியில் பதிவுசெய்தல், குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் அமைப்பை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக குற்ற ஆவண பிரிவுக்கு 9001:2015 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தரவு தரத்தை பராமரித்தல், மாவட்ட காவல் துறை அலகுகள் மற்றும் காவல் நிலையங்களுடன் இணைந்து பணியாற்றுதல், தொடர் பயிற்சிகள் அளித்தல், திறன் மேம்பாடு முன்னெடுப்புகளை தில்லி குற்ற ஆவண காப்பக பிரிவு மேற்கொண்டு வருகிறது.

# ஈரான் போர்! குவைத் மீதான தாக்குதலில் 61 வீரர்கள் படுகாயம்!

**தெஹ்ரான், மார்ச் 7:**



ஈரானின் தாக்குதல்களில், குவைத் நாட்டின் ராணுவ வீரர்கள் 61பேர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மற்றும் கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதில், மத்திய கிழக்கில் உள்ள குவைத், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், சௌதி அரேபியா போன்ற நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தளங்களைக் குறிவைத்து ஈரான் நடத்தி வரும் தாக்குதல்களால் இதுவரை 67 குவைத் ராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளதாக, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் வியாழக்கிழமை (மார்ச் 6) அறிவித்துள்ளது.

மேலும், கடந்த பிப். 28 முதல் நடைபெற்று வரும் இந்தப் போரினால் வளைகுடா நாடுகளின் பலி எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ள நிலையில்; அதில் அதிகப்படியாக குவைத் நாட்டில் 8 பேர் கொல்லப்பட்டது தெரியவந்துள்ளது.

முன்னதாக, குவைத் நாட்டில் ஏராளமான அமெரிக்க ராணுவத் தளங்கள் உள்ளதால், அந்நாட்டின் மீது கடந்த பிப். 28 முதல் 212 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 394 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்ட தாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நேபாள நாடாளுமன்றத் தேர்தல்: அமைதியான முறையில் வாக்குப்பதிவு



**தெஹ்ரான், மார்ச் 7:**

அண்டை நாடான நேபாளத்தில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்றத் தேர்தல் வியாழக்கிழமை அமைதியான முறையில் நடந்து முடிந்தது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் இளம் தலைமுறையினர் நடத்திய தீவிர போராட்டத்தினால், முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்த பிறகு இந்த முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெற்றுள்ளது.

வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 5 மணி வரை தொய்வின்றி நடைபெற்றது. மாலை 5 மணிக்குள் வரிசையில் நின்ற வாக்காளர்கள் அனைவரும் தங்களின் ஜனநாயகக் கடமையை ஆற்ற அனுமதிக்கப்பட்டனர். மாலை 3 மணி நிலவரப்படி, சுமார் 39 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன. நேபாள தலைமைத் தேர்தல் ஆணையர் (பொறுப்பு) ராம் பிரசாத் பண்டாரி கூறுகையில், 'தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றது. மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர்' என்றார். வாக்குப்பெட்டிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டவுடன் உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க எண்ணெய் கப்பலை தாக்கியதாக ஈரான் ராணுவம் அறிவிப்பு

**டெஹ்ரான், மார்ச் 7:**

ஈரான் போர்க் கப்பலை, அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் தாக்கியதற்கு பதிலடியாக, வளைகுடா பகுதியில் அமெரிக்க எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் கூறியுள்ளது. ஈரான் கடற்படையின் 17 போர் கப்பலை அழித்துவிட்டதாக அமெரிக்கா கூறியது. இந்தியாவில் கூட்டுப் பயிற்சியை முடித்து விட்டு ஈரான் திரும்பிய ஐஆர்ஐஎஸ் டேனா என்ற போர்க்கப்பலை, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் மார்க்-48 என்ற சக்திவாய்ந்த டார்பிடோ குண்டு மூலம் நேற்று முன்தினம் தகர்த்தது. இதில் 87 வீரர்கள் உயிரிழந்தனர். 32 வீரர்களை இலங்கை கடற்படை மீட்டது. மாயமான 60-க்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி, "ஈரான் கடல் பகுதியில் இருந்து 2,000 மைல்களுக்கு அப்பால் ஈரான் கப்பல் மீது தாக்குதல் நடத்தி அமெரிக்கா அராஜகத்தில் ஈடுபட்டுள்ளது. இந்திய கடற்படை நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு திரும்பிய டேனா போர்க்கப்பல் மீது எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படாமல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்காக அமெரிக்கா மிகுந்த வருத்தம் அடையும்" என்றார். இலங்கை அருகே ஈரான் போர்க்கப்பல் தாக்கப்பட்ட சில மணி நேரத்தில், வடக்கு பெர்சியன் வளைகுடாவில் அமெரிக்க எண்ணெய் டேங்கர் கப்பல் மீது ஈரான் ராணுவம் ஏவுகணை தாக்குல் நடத்தியதாகவும், இதில் அந்தக் கப்பல் தீப்பிடித்து எரிவதாகவும் ஈரான் கூறியுள்ளது. இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

## இந்தோனேசியாவில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்கள் பயன்படுத்த தடை

**ஜகார்த்தா, மார்ச் 7:**

ஆன்லைன் ஆபாசப் படங்கள், இணையவழி மோசடிகள், சைபர் புல்லியிங் மற்றும் இணைய அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் தகவல் தொடர்புத் துறை மந்திரி மியுட்டியா ஹபிட் தெரிவித்துள்ளார். இது தொடர்பான புதிய ஒழுங்குவிதிகளில் (REGULATION) அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இணையவழியில் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் நோக்கில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விதியின் கீழ், சிறுவர்கள் சமூக ஊடகங்களில் கணக்குகளை (ACCOUNTS) வைத்திருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தகுதியற்ற கணக்குகள் மார்ச் 28 முதல் முடக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த சட்டம் இந்தோனேசியா பெற்றோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

## கமேனி கொலை! வான்வெளியிலிருந்து வந்த நீல சிட்டுக்குருவி! இஸ்ரேல் ஏவுகணை ரகசியம்!!

**தெஹ்ரான், மார்ச் 7:**

ஈரான் நாட்டின் உச்ச தலைவர், தலைமை மதகுரு அலி கமேனியை, இஸ்ரேல் படை, ப்ளூ ஸ்பேரோ எனப்படும் ஏவுகணையைக் கொண்டுத் தாக்கிக் கொன்றது பற்றிய தகவல்கள் கசிந்துள்ளன.

ஈரானிய தலைவர் கமேனியின் இருப்பிடம், அவரது நடமாட்டம், அவருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு முறைகள் குறித்து பல ஆண்டுகளாக புலனாய்வு அமைப்புகள் நடத்தி வந்த தீவிர கண்காணிப்பின் இறுதியில், அவர் மீதான தாக்குதல் மிகக் கச்சிதமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு ரகசியமாகத் திட்டமிடப்பட்டது குறித்து தற்போது தகவல்கள் கசிந்து வருகின்றன.

இந்த தாக்குதலை நடத்தப் பயன்படுத்தப்பட்டது ப்ளூ ஸ்பாரோ ஏவுகணை. இஸ்ரேலிய போர் விமானத்திலிருந்து ஏவப்பட்ட மிகவும் அதிநவீன ஆயுதம் இது.

ரஃபேர் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அமைப்பினால் உருவாக்கப்பட்டதுதான் ப்ளூ ஸ்பாரோ ஏவுகணை. இது இஸ்ரேலின் மிக மேம்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகளின் குடும்பத்தைச் சேர்ந்தது. இஸ்ரேலின் எஃப்-15 கழுகு போர் விமானத்திலிருந்து ஏவப்பட்டுள்ளது. போர் விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணை, முதலில் வளிமண்டலத்தின் விளிம்பை நோக்கி வேகமாக உயர பறந்து, பிறகு செங்குத்தான பாதையில் அதன் இலக்கை நோக்கித் திரும்பியிருக்கிறது.

இந்த நீல சிட்டுக்குருவி என்று அழைக்கப்படும் ப்ளூ ஸ்பாரோ மூன்று வகைகளை உள்ளடக்கிய ஒரு பெரிய ஏவுகணை குடும்பத்தைக் கொண்டிருக்கிறது. இவை பிளாக் ஸ்பாரோ, ப்ளூ ஸ்பாரோ மற்றும் சில்வர் ஸ்பாரோ என பெயரிடப்பட்டவை. ஒவ்வொன்றும் சோதனை மற்றும் போரின் நிலைக்கு ஏற்ப வெவ்வேறு வகை பாலிஸ்டிக் ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டவை.

இந்த ஏவுகணை சுமார் 6.5 மீட்டர் நீளம் மற்றும் தோராயமாக 1,900 கிலோ எடை கொண்டது. இது கிட்டத்தட்ட 2,000 கிலோமீட்டர்களைக் கொண்ட இலக்கை தாக்கும் வல்லமையைக் கொண்டுள்ளது, இது தொலைதூர இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும்.

எப்படி இயக்கப்படுகிறது இந்த ஏவுகணை? ப்ளூ ஸ்பாரோ ஏவுகணை, ஏவப்பட்டதும், ஒரு உயரமான பாலிஸ்டிக் பாதையை நோக்கி பயணப்படுகிறது. இதனால், இந்த ஏவுகணையை இடைமறித்துத் தாக்குதல் மிகவும் கடினமாகிறது. முதலில் ஒரு போர் விமானத்திலிருந்து ஏவப்பட்டவுடன், ஏவுகணையின் ராக்கெட் மோட்டார் அதை மேல் வளிமண்டலத்தை நோக்கி மிக வேகமாக செலுத்துகிறது. அதிகபட்ச உயரத்தை அடைந்த பிறகு, அதே வேகத்தில் ஏவுகணை திரும்பி, வளிமண்டலத்துக்குள் மீண்டும் நுழைகிறது. ஏவுகணை, அதன் இலக்கை மிக அருகில் நெருங்கும்போது, அதனுள் இருக்கும் வழிகாட்டும் தொழில்நுட்ப அமைப்புகள், இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் வகையில் ஏவுகணையின் பாதையை மிகச் சரியாக மாற்றியமைக்கின்றன.

இந்த மேம்பட்ட திறன் காரணமாக, எதிரிகளின் வான் பாதுகாப்பு அமைப்புகளால் ஏவுகணையை கண்டுபிடிக்க இயலாமல், எதிரி நாட்டின் கட்டுப்பாட்டு மையங்கள், வான் பாதுகாப்பு நிறுவல்கள் மற்றும் பெரிதும் வலுவூட்டப்பட்ட தொழில்நுட்ப கூட்டுக் கலவைகளால் தாக்க முடியாமல், ஏவுகணை, தங்கள் நிலப்பரப்பில் எவ்வித தடையும் இன்றி நுழைய அனுமதிக்கிறது.

அதாவது, ஏவுகணையின் அதிவேகம், வளிமண்டலத்துக்கு வெளியிலிருந்து வருவதால் அதன் தொடக்க உயரம் மற்றும் சூழ்ச்சித்திறன் ஆகியவற்றின் காரணமாக அதை இடைமறிக்க முயற்சிக்கும் தற்காப்பு அமைப்புகள் அதனைக் கண்டறிந்து எதிர்வினையாற்றுவதற்கான நேரத்தை கணிசமாகக் குறைத்து வந்த வேலையை கச்சிதமாக செய்து முடிக்கிறது.

இஸ்ரேலின் சிக்னல் புலனாய்வுப் பிரிவான யூனிட் 8200, கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக சேகரித்த உளவுத்துறை தாக்குதல்களின் அடிப்படையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இந்தப் பிரிவு இரண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக கமேனியைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலையமைப்புகளை உன்னிப்பாகக் கண்காணித்து வந்துள்ளது. புலனாய்வு அதிகாரிகள் கமேனியின் நெருங்கிய மெய்க்காப்பாளர்களின் வேலை அட்டவணைகளைக் கண்காணித்தனர், தகவல்தொடர்புகளை இடைமறித்து கேட்டுள்ளனர். அது மட்டுமல்லாமல், கமேனியின் அலுவலக வளாகத்துக்கு அருகில் இருந்த கண்காணிப்புக் கருவிகளையும் ஊடுருவியிருக்கிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அணு குண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட அமெரிக்காவின் அதிநவீன ஏவுகணை சோதனை



**வாஷிங்டன், மார்ச் 7:**

அணு குண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணையை அமெரிக்க விமானப்படை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க விமானப் படை வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 1962-ல் 'மினிட்மேன்I' ஏவுகணையும் கடந்த 1965-ம் ஆண்டில் 'மினிட்மேன் II' ஏவுகணையும் அமெரிக்க விமானப் படையில் சேர்க்கப்பட்டன. கடந்த 1970-ம் ஆண்டில் 'மினிட்மேன் III' ஏவுகணை விமானப் படையில் சேர்க்கப்பட்டது. தற்போது இந்த வகையை சேர்ந்த 400 ஏவுகணைகள் அமெரிக்காவின் மோன்டானா, நார்த் டகோடா, வயோமிங் பகுதிகளில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. 'மினிட்மேன் III' ஏவுகணையின் திறன் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சூழலில் அதிவேகத்தில், அதிக தொலைவு சீறிப் பாயும் 'மினிட்மேன் III' ஏவுகணையின் சோதனை மார்ச் 3-ம் தேதி இரவு 11.01 மணிக்கு (பசிபிக் நேரம்) நடத்தப்பட்டது. அமெரிக்காவின் வாண்டன்பெர்க் விண்வெளி படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட ஏவுகணை, மார்ஷல் தீவுகளுக்கு அருகே நிலைநிறுத்தப்பட்டிருந்த 2 இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தது. 'மினிட்மேன் III' ஏவுகணை மூலம் ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளை தனித்தனியாக தாக்கி அழிக்க முடியும்.

இந்த ஏவுகணை முதலில் விண்வெளியின் வளிமண்டலத்தை தாண்டிச் செல்லும். பின்னர் விண்வெளியில் இருந்து மீண்டும் வளிமண்டலத்துக்குள் நுழைந்து தரையில் உள்ள இலக்குகளை மிக துல்லியமாக தாக்கி அழிக்கும். 36,000 கிலோ எடை, 59.5 அடி நீளம், 5.5 அடி விட்டம் கொண்ட ஒரு ஏவுகணையில் 3 அணு குண்டுகள் வரை சுமந்து செல்ல முடியும். இந்த சூழலில் ஈரான், சீனா, ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் டூம்ஸ்டே (அழிவு நாள்) ஏவுகணை என்றழைக்கப்படும் 'மினிட்மேன் III' ஏவுகணை சோதனையை அமெரிக்கா நடத்தியிருப்பது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## மத்திய கிழக்கில் 7-வது நாளாக போர் பதற்றம் நீடிப்பு: ட்ரம்பை கொல்ல ஈரான் மதகுரு அழைப்பு

**தெஹ்ரான், மார்ச் 7:**

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது வான்வழி தாக்குதலை தொடங்கின. இதில், ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உட்பட சுமார் 50 உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைத்தலங்கள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் தக்க பதிலடி கொடுத்து வருகின்றன. இந்தப் போர் ஏழாவது நாளை எட்டியது. நேற்று அதிகாலையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் குண்டு துளைக்காத புகலிடங்களில் தஞ்சமடைந்தனர். இதுவரை ஈரானில் 1,230 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூழலில், ஈரானின் மூத்த ஷியா மதகுருக்களில் ஒருவரான அயத்துல்லா அப்துல்லா ஜவாதி அமோலி ஈரானிய அரசு தொலைக்காட்சியில் பேசும்போது, "நாம் இப்போது ஒரு பெரிய சோதனையின் விளிம்பில் இருக்கிறோம். இந்த ஒற்றுமையை நாம் முழுமையாகப் பாதுகாக்க வேண்டும். யூதர்களின் (இஸ்ரேலியர்கள்) ரத்தம் சிந்தப்பட வேண்டும், ட்ரம்பின் ரத்தம் சிந்தப்பட வேண்டும். அடக்குமுறை செய்யும் அமெரிக்காவை எதிர்த்துப் போராடுங்கள், அவனது (ட்ரம்பின்) ரத்தம் என் தோள்களில் உள்ளது என காலத்தின் இமாம் கூறுகிறார்" என்று தெரிவித்துள்ளார். ஷியா இஸ்லாமிய மதகுருமார்களில் 'அயத்துல்லா' என்பது மிக உயர்ந்த பதவிகளில் ஒன்றாகும். ஈரானில் இத்தகைய மூத்த மதகுருக்கள் பலர் உள்ளனர். அவர்களின் மத மற்றும் அரசியல் ரீதியிலான கருத்துகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, இந்த அறிக்கை மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அமெரிக்க செனட் ஒப்புதல் இதற்கிடையே ஈரானுக்கு எதிரான வான்வழித் தாக்குதல்களை நிறுத்துவதற்கான தீர்மானம் அமெரிக்க செனட்டில் தோற்கடிக்கப்பட்டது (53-47 வாக்குகள்). இதன் மூலம் தாக்குதலைத் தொடர அதிபர் ட்ரம்புக்கு அதிகாரம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 4 நாடுகளுக்கு கல்வி விசா ரத்து: இங்கிலாந்து அறிவிப்பு

**லண்டன், மார்ச் 7:**




இங்கிலாந்துக்கு சட்டவிரோதமாக குடியேறுபவர்களைத் தடுக்க அந்நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கல்வி விசா பெற்று இங்கிலாந்துக்குள் நுழைந்துவிட்டு, பின்னர் அங்கேயே தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகப் புகார் எழுந்தது. இதையடுத்து ஆப்கானிஸ்தான், கேமரூன், மியான்மர் மற்றும் சூடான் ஆகிய 4 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு கல்வி விசா வழங்குவதை நிறுத்துவதாக அந்நாட்டு உள்துறை மந்திரி ஷபானா மஹ்மூத் அறிவித்துள்ளார். குறிப்பாக, ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலை விசாவும் ரத்து செய்யப்பட்டுள்ளது. கல்வி விசாவில் வந்த 95 சதவீத ஆப்கானியர்கள் அங்கேயே தஞ்சம் கோரியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கான புதிய சட்டத்திருத்தம் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

# சீனாவின் பாதுகாப்பு பட்ஜெட் 7% உயர்வு

**பெய்ஜிங், மார்ச் 7:**

அமெரிக்காவுடனான போட்டி மற்றும் உலக நாடுகளிடையே நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, சீனா தனது ராணுவத்தை நவீனப்படுத்த இந்த ஆண்டு பாதுகாப்பு பட்ஜெட்டை 7 சதவீதம் உயர்த்தியுள்ளது.

அதன்படி, பாதுகாப்புத் துறைக்கு சுமார் 1.91 லட்சம் கோடி யுவான் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.25.4 லட்சம் கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இந்த பிரம்மாண்ட ராணுவ நிதி ஒதுக்கீடு, இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், சீனாவின் பட்ஜெட் இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட்டைவிட மூன்று மடங்கு அதிகமாகும்.

பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்துள்ள அதேநேரம், சீனா தனது பொருளாதார வளர்ச்சி இலக்கை 4.5 முதல் 5 சதவீதமாக குறைத்துள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் வர்த்தக வரி யுத்தம், அமெரிக்கா-ஈரான் மோதலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடி மற்றும் உள்நாட்டில் நிலவும் ரியல் எஸ்டேட் சரிவு போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக 5 சதவீத வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்த சீனா, தற்போதைய சவால்களால் முதல்முறையாக இந்த இலக்கைக் குறைத்துள்ளது.

ராணுவக் கட்டுப்பாடு: ராணுவ நவீனமயமாக்கலுக்கு இடையே, சீன ராணுவத்தில் நிலவும் ஊழலை ஒழிக்க அதிபர் ஷி ஜின்பிங் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

'ராணுவம் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கைகளில் எந்தவிதமான சமரசமும் செய்யப்படாது' என்று பிரதமர் லீ கியாங் தனது உரையில் உறுதிபட தெரிவித்துள்ளார்.

தைவான் விவகாரத்தில் கண்டிப்பு: தைவான் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை சீனா மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு வரை 'தைவான் பிரிவினைவாதத்தைஎதிர்ப்போம்' என்று மென்மையாகக் கூறி வந்த சீனா, இந்த ஆண்டு 'உறுதியுடன் ஒடுக்குவோம்' என்ற கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது.

இதனால் வரும் காலங்களில் தைவான் எல்லையில் சீனாவின் ராணுவ அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.




# ‘தமிழ்நாடு 2030’ செயல் திட்டத்தின் 14 அம்சங்கள்

## ரேஷன் கடை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு






## மாநிலங்களவை தேர்தல்: அன்புமணி வேட்புமனுவை ஏற்கக்கூடாது என ராமதாஸ் தரப்பு எதிர்ப்பு

## ரஷியாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்க ‘அனுமதிக்க’ அமெரிக்கா யார்..? காங்கிரஸ் கேள்வி

## நாகை-இலங்கை இடையே பயணிகள் கப்பல் சேவை மீண்டும் தொடக்கம்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 07.03.2026 சனிக்கிழமை இலவச இ-பேப்பர்